www.padippakam.com

நவ, டிச, ஜன '90 மக்கள் கலை இலக்கியக் கழக இதழ் விலை: ரூ.2

# புதிய கலாச்சாரம்



பற்றியெரிகிறது
இந்துமதவெறித் தீ!
பிணங்கள் மீதேறி பிரதமர் பதவி!!

படிப்பகம்

www.padippakam.com

ஈழத்தமிழர்களின் சுவிஸ் வாசகர் வட்ட வெளியீடான 'மனிதம்' இதழிலிருந்து



## சிவப்பு மின்னல்கள்

சூரியக் குஞ்சுகள் நாம்!
சுடர்விட்டு பிரகாசிக்க
மக்கள் புரட்சி செய்வோமென
முழக்கமிட்ட சிவப்பு மின்னல்கள்

இன்று,
இனத்தின் அழிவைக் குறிக்கும்
வால் நட்சத்திரங்கள்!

மக்கள் பணத்தில் வந்த
தானியங்கி துப்பாக்கிகள்
மக்கள் தலைக்கே
மகுடம் சூட்டுகிறது.

மரபு காக்கும் மறவரென
மார் தட்டிய மறவர்கள்
ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கு
ஆலவட்டம் பிடிக்கிறார்கள்.

மக்கள் கைகள் ஓங்கும்!
அப்போ,
மாளப் போவது
இவர்களும் தான்!

— யதார்த்தினி

## ஓடிப்போன சகோதரிக்கு

ஓடிவிட்டாள்!
நீ யாருடனோ
ஓடி விட்டாயாம்.
சொந்தங்கள் இங்கு
தகவல் சொன்னார்.

ஆனால், நீ
விடுதலைக்கென சுதந்திரமாய்
பறந்தாய்!
பாசறைகள்
கொலை கூடாரமாக
மாறியதால்,

சுதந்திர காற்றை
சுவாசிக்க வெளியேறினாய்!
நடந்த பாதையில்
நல்லதும் கெட்டதும்.
என்னதான் இருப்பினும்,
நல்லதை கற்றதற்காய்
நன்றி சொல்ல வேண்டும்
அரசியல் வாழ்விற்கு!

வீட்டாரின் விலக்கில்
குற்றத்தின் சொல் அம்பு,
அடக்கப் பார்த்தது
அசையவில்லை நீ.

மரணத்துள் வாழும் மண்,
இன்னும்
வீரத்தை விதைத்திருக்கும்!

வழித்துணையாய் வந்தவனை
வாழ்க்கைத் துணையாக்கினாய்
காதலுக்கு கண்ணில்லை
யார் சொன்னார்!
உண்மைக் காதலுக்கு
உறுதியான பார்வையுண்டு!

ஆயினும்
உறவுகள் உனக்கு
வைத்த பெயர்
உதவாக்கரை

திரும்பிப் பார்க்கிறேன்
இங்குள்ள சொந்தங்களை
என்னையும் தான்;

வெடிச்சத்தம் கேட்டு
கொல்லை வழியாக
எல்லை தாண்டிய
'வீரர்' இவர்!

விடுதலைக் குருதியில்
வியாபார நீச்சலடிக்கப்
புறப்பட்டாலும்
வீம்புகள் குறையவில்லை!

அதனால்,
இவர்க்கு உனது செயல்
வெறும் வாயில் அவல்!

ஒன்று மட்டும் உறுதி
சகோதரியே!
சமூகத்தின்
சல்லடைக் கண்களில்
நீ 'ஓடிப்போனவள்'
நாளைய சந்ததிக்கு
நீ ஓர் முன்னோடி!

— சு.கலாதரன்

கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே!

●போர் : 7
●குரல் : 6, 7, 8
●நவ, டிச '89; ஜன '90

உள்நாடு :
தனிஇதழ் : ரு.2
ஆண்டுச்சந்தா : ரு.8
வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
தனிஇதழ் : ரு.8.50
ஆண்டுச்சந்தா : ரு.34

படைப்புகள், சந்தா
அனுப்பவும், மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்:

அ.முகுந்தன்,
55, நேரு நகர்,
வில்லிவாக்கம்,
சென்னை - 600 0049.

# போலி ஜனநாயகத் தேர்தல்களைப் புறக்கணிப்போம்! பாசிச அபாயத்தையும், சாதி, மதவெறி மோதல்களையும் எதிர்த்துப் போராடுவோம்!

கையில் வேறு துருப்புச் சீட்டுக்கள் எதுவும் இல்லாத நிலையில் வேறுவழி ஏதும் இன்றித் தேர்தலை அறிவித்திருக்கிறது பாசிச ராஜீவ் கும்பல். தேர்தல் அறிவிப்பை ஒரு நாள் தாமதப்படுத்துவது கூட தனது அரசியல் மரணத்தை துரிதப்படுத்தும் என்ற பீதியில் நடப்பது நடக்கட்டும் என்ற குருட்டு நம்பிக்கையில் தான் இந்தத் தேர்தலை அறிவித்திருக்கிறது ராஜீவ் கும்பல்.

போபர்ஸ் பீரங்கி பேரத்தில் கமிஷன் தரப்படவேயில்லை என்று வீராப்பாக மறுப்பதில் தொடங்கிய ராஜீவ் அது கமிஷன் இல்லை, கமிஷனாக இருந்தாலும் இந்தியருக்குத் தரப்படவில்லை, என்றெல்லாம் உளறி, கடைசியாக காங்கிரஸ் கட்சியில் யாரும் வாங்கவில்லை என்று 'எங்கப்பன் குதிருக்குள் இல்லை' என்ற கதையாக பிதற்றத் தொடங்கியுள்ளார். 'இந்து' பத்திரிக்கையின் கடைசித்தவணை அம்பலப்படுத்தல்களைத் தொடர்ந்து சுருக்குக்கயிறு ராஜீவின் கழுத்தை இறுக்கிக் கொண்டே வருகிறது. நிலைமையைப் பயன்படுத்திக் கொண்டு குடியரசுத் தலைவர் மூலம் ஆட்சியைக் கலைப்பதற்கு எதிர்க்கட்சிகள் முயலக்கூடும் என்றஞ்சி அதைத் தடுக்கவும், ஊழல் பிரச்சினையிலிருந்து மக்களின் கவனத்தைத் திசைதிருப்பவும் தான் இந்தத் தேர்தல் அறிவிப்பு.

காங்கிரசால் கிளறிவிடப்பட்ட அயோத்தி ராம ஜன்ம பூமி / பாபரி மசூதி விவகாரத்தை பாரதிய ஜனதா ஆர்.எஸ்.எஸ். கும்பல் பயன்படுத்திக் கொண்டு வடமாநிலங்கள் முழுவதும் இந்துமத வெறியைப் பரப்பி வருகிறது. மதவெறிக் கொலைகளினால் அச்சமும், ஆத்திரமும் அடைந்து வரும் முஸ்லீம்களின் காவலன் என்று தன்னைக் காட்டிக் கொண்டு அவர்களது ஓட்டுக்களைப் பெற்று விடலாம் என்று ராஜீவ் கும்பல் கனவு காண்கிறது. அல்லது ஒருவேளை திட்டமிட்டபடி டிசம்பர் 9ம் தேதி ராமர் கோயிலுக்கு அடிக்கல் நாட்டுவிழா நடைபெறாமல் போனால் அதனால் தோன்றும் இந்துமத வாதத்தின் அதிருப்தியைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு அதையும் ஓட்டுக்களாக மாற்றி விடலாம் என்று நினைக்கிறது.

தனது கட்சிக்குள் தோன்றிவரும் தீராத கோஷ்டி சண்டைகளையும், கட்சித்தாவல் அபாயத்தையும் தடுக்கும் ஆயுதமாகவும் இந்தத் தேர்தல் அறிவிப்பைப் பயன்படுத்தியுள்ளது ராஜீவ் கும்பல். வானொலி, வானொளி, பணபலம் ஆகியவற்றைக் கையில் வைத்திருப்பதால் குறுகிய கால தேர்தல் பிரச்சாரத்தில் காங்கிரசின் கை மேலோங்கியிருக்கும். இந்திரா நினைவுநாள், நேரு நூற்றாண்டு விழா ஆகிய பெயர்களில் அரசாங்கப் பணத்தில் தேர்தல் பிரச்சாரம் செய்து கொள்வதும் காங்கிரசுக்குத் தற்போது சாத்தியம்.

வங்கிகள் தேசியமயத்தையும், மன்னர் மானிய ஒழிப்பையும் எதிர்த்த சிண்டிகேட் பிரிவினரை எதிர்த்து இந்திரா செய்ததைப் போன்று ஒரு பிரச்சாரத்தை, இன்று பஞ்சாயத்து ராஜ், நகர்பாலிகா மசோதாக்களை தோற்கடித்த எதிர்கட்சிகளை எதிர்த்துச் செய்யவிருக்கிறது காங்கிரஸ். இவையன்றி 'தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றம்' பற்றிய வழக்கமான கூப்பாடுகளுடன் தேவையான இடங்களில் தேசிய முன்னணியை இந்து மதவாதிகள் என்று பிரச்சாரம் செய்துகொள்ளவும் இருக்கிறது.

எதிர்க்கட்சிகளின் தொகுதிபேரம் முடியும்போது அவர்களே சொல்வதைப் போல குறைந்தபட்சம் காங்கிரசுக்கெதிராக ஒரு வேட்பாளரை மட்டும் நிறுத்துவதிலாவது வெற்றி பெற இயலுமா என்பதே சந்தேகம் தான். தமிழகத்தின் பாட்டாளி மக்கள் கட்சி, உ.பி.யின் திகாயத் ஆகியோர் காங்கிரசுக்கு மறைமுகமாக உதவும் வேலையில் இறங்கியுள்ளன. பாராளுமன்ற அரசியல் சகதிக்குள் சிக்கிக்கொண்ட மார்க்சிஸ்டுகளோ இந்துமதவெறி பாரதிய ஜனதாவை எதிர்ப்பது போலக் காட்டிக்கொண்டு கொல்லைப்புறமாக -தேசிய முன்னணி வழியாக - உறவு கொள்கின்றனர். போபர்ஸ் ஊழல், விலைவாசி ஏற்றம், கறுப்புச் சட்டங்கள் ஆகியவற்றை மையமாக வைத்து தேர்தல் பிரச்சாரம் நடத்தத் திட்டமிட்டுள்ளன எதிர்க்கட்சிகள்.

இந்தியத் தரகு முதலாளிகள், நிலப்பிரபுக்களின் காவலனாக இருப்பது மட்டுமின்றி சர்வதேச அளவிலும், தேசிய அளவிலும் உள்ள கிரிமினல்கள், மா∴பியா கும்பல்கள் ஆகியோருடன் நேரடியாக உறவுகொள்ளும் அளவுக்கு காங்கிரசும், எதிர்க்கட்சிகளும் சீரழிந்துள்ளன. அத்தகைய கிரிமினல் பேர்வழிகளே வேட்பாளர்களாகவும் பல இடங்களில் நிறுத்தப்படவுள்ளனர். ஆக, யார் வென்றாலும் கிரிமினல்கள் அதிகாரத்துக்கு வருவதைத் தடுக்கவியலாது என்ற சூழ்நிலை உருவாகியிருக்கிறது.

முற்றிவரும் அரசியல் பொருளாதார நெருக்கடிகளின் விளைவாக நெருங்கி வருகின்ற பாசிச அபாயம், உழைக்கும் மக்களைப் பிளவுபடுத்துகின்ற சாதி, மதவெறி மோதல்கள் ஆகிய இவ்விரண்டும் மிகப்பெரிய அபாயங்களாக இன்று நம்முன் நிற்கின்றன. இவற்றை முறியடிப்பதற்கு ஓட்டுச்சீட்டு அரசியல் எள்ளளவும் பயன்படாது என்பதை மக்கள் மத்தியில் தெளிவுபடுத்த வேண்டும். செயல்திட்டத்தின் அடிப்படையில்தான் கூட்டு என்று சொல்லிக்கொள்ளும் வலது, இடது போலிகள் மீண்டும் நாற்காலிக்காகத் தடுமாறுவதையும், காங்கிரசுக்கு மறைமுகமாக உதவுவதையும் அம்பலப்படுத்த வேண்டும். மீண்டும் மீண்டும் தேர்தல் என்ற மாயவலையில் மக்களைச் சிக்கவைக்கும் முயற்சியை முறியடிப்பதும் புதிய ஜனநாயகப் புரட்சிக்கு மக்களை அணிதிரட்டுவதும் தான் இன்று நம்முன் உள்ள கடமை!

www.padippakam.com





# எழுப்பவிருப்பது கோயிலல்ல... முஸ்லீம்களின் கல்லறை!

தூங்கி வழிந்து கொண்டிருந்த பதூன் நகர ரயில் நிலையத்தை நெருங்கிக் கொண்டிருந்த, அந்த பாசஞ்சர் ரயில் ஒரு குலுங்கலுடன் நின்றது. எதிரில் ஏதோ ரயில் வருகிறது போலும் என்று நினைத்த வாறே சதீஷ் சந்திர பாண்டே இறங்குவதற்காகப் பெட்டி படுக்கைகளை எடுத்து வைத்துக் கொள்ளத் தொடங்கினார். விற்பனை வரிஅலுவலகத்தின் பதூன் நகரக் கிளைக்கு அவரை மாற்றியிருந்தார்கள். புதிதாகச் செல்லவிருக்கும் அலுவலகம், அங்கே உள்ள ஊழியர்கள் எப்படி இருப்பார்களோ என்ற சிந்தனையில் அவர் மனம் லயித்திருந்தது.

அவரது சிந்தனையை படீரென்று அறுத்தெறிவது போல பெரும் கூச்சல் கேட்கத் தொடங்கியது. என்ன ஏது என்று சன்னல் வழியே எட்டிப் பார்ப்பதற்குள் ஒரு கும்பல் திமுதிமுவென்று பெட்டிக்குள் ஏறியது. யார், என்ன என்று கேட்பதற்குள் பயணிகள் மீது பாயத் தொடங்கியது. பெட்டி, படுக்கைகள், மூட்டை முடிச்சுகள் பறிபோயின. பர்தா அணிந்த பெண்களும், தாடி வைத்த ஆண்களும் பெட்டியிலிருந்து இழுத்து தண்டவாளத்தில் வீசப்பட்டார்கள்.

''உருதுவை ஆட்சி மொழியாக்கினால் ரத்த ஆறு ஓடும்'' என்ற வெறித்தனமான கூச்சலுடன் அவர்களது நெஞ்சில் சூலத்தை இறக்கியது அந்தக் கும்பல். அச்சத்தில் உறைந்துபோய் நின்றிருந்தார் பாண்டே. சற்றும் எதிர்பாராமல் அந்தக் கும்பல் அவரையும் இழுத்து வெளியே வீசியது. ''நா...ன் இந்...து'' அவர் வாயிலிருந்து வார்த்தைகள் வருவதற்கு முன்னால் ரத்தம் கொப்பளித்து அவரது முகத்தில் முளைத்திருந்த குறுந்தாடியில் வழிந்து உறைந்தது.

ராம்குமாரி ஜெய்ஸ்வால் என்ற பெண், தன் கண்ணால் கண்ட கோரக்காட்சியை விவரித்தார். ''கலவரக்காரர்கள் வரும்போது மதியம் 12 மணி இருக்கும். நகரத்தில் நடகும் கலவரம் பற்றி நாங்கள் கேள்விப்பட்டிருந்தோம். எனவே கதவைத் தாளிட்டுக்கொண்டு வீட்டிற்குள்ளேயே இருந்தோம். அந்தக் கும்பல் கோஷம் போட்டுக்கொண்டே வந்து பக்கத்துக் குடிசையில் (முஸ்லீம் வீடு) நுழைந்தது. பக்கத்து வீட்டுக்காரரின் மனைவிதான் வீட்டில் இருந்தாள். அந்தக் கும்பல் அவள் தலைமுடியைப் பிடித்து இழுத்துக் கொண்டு வந்தது. ஒருவன் அவளைத் துகிலுரிந்தான். ஆட்டுக்கிடா வெட்டுவது போல அவளை வெட்டினார்கள். இந்தக் குரூரத்தை மறக்க நினைத்தாலும் எங்களால் மறக்க முடியாது. இந்தக் கொடுமையைப் பார்த்துக்கொண்டு நிற்பதைத் தவிர எங்களால் வேறெதுவும் செய்ய முடியவில்லை. என் கண்களையே என்னால் நம்பமுடியவில்லை; மனிதப் பிறவிகளால் இப்படி நடந்து கொள்ள முடியுமா?''

ஏன் முடியாது? முடியாமலா 15 வயது பள்ளிச் சிறுவனின் கண்களில் திராவகத்தை ஊற்றினார்கள்? முடியாமலா கர்ப்பிணிப் பெண்ணை காலால் மிதித்தே கொன்றார்கள்? ஆனால் அவர்கள் மனிதப் பிறவிகள் இல்லை என்பது உண்மை. அவர்கள் தெய்வப்பிறவிகள். அவர்களே சொல்லிக் கொள்வது போல ராமனின் குழந்தைகள்.

''பச்சா பச்சா ராம் கா
ஜன்மபூமி கே காம் கா
ராம பிரானின் குழந்தைகள் நாம்
ஜன்ம பூமிக்கு போராடு வோம்!''

ராமனின் அசுவமேதயாகக் குதிரை இந்தியாவை வலம் வந்து கொண்டிருக்கிறது. செல்லுமிடமெல்லாம் அதன் குளம்புகள் பட்டு ரத்தம் தெறிக்கிறது. தனது மைந்தர்களின் ரத்தத்தால் பாரத பூமி சிவக்கிறது.

ஆம்! அயோத்தியில் ஆர்.எஸ்.எஸ் கட்டத் திட்டமிருக்கும் ராமன் கோயிலுக்கு ஊர்வலமாகக் கொண்டு செல்லப்படும் 'புனிதச் செங்கற்கள்' செல்லுமிடமெல்லாம் அப்பாவி முஸ்லீம் மக்களின் ரத்தத்தை உறிஞ்சி உப்பியபடியே செல்கின்றன.

2000 இந்துக்களுக்கு ஒரு செங்கல். ஒவ்வொரு செங்கல்லிலும் ஸ்ரீராம் என்ற எழுத்து. கருங்கல்லை வைத்து வழிபடும் 28,188 கோயில்களில் இந்த செங்கற்களுக்கு பூசை, வழிபாடு. அதன்பிறகு பல்லக்கில் பவனி. ஒவ்வொரு வீட்டின் முன்னும் பல்லக்கு நிற்கும். பல்லக்கில் உள்ள செங்கல்லை வழிபட்டுவிட்டு தலைக்கு ரூ.1.25 வீதம் ஒவ்வொரு குடும்பமும் காணிக்கை செலுத்த வேண்டும். பல்லக்கு ஊர்வலம் எல்லா வீதிகளுக்கும் செல்லும். எல்லோர் வீட்டின் முன்பும் நிற்கும். அவர் இந்துவா, முஸ்லீமா, கிறிஸ்தவரா என்று கவலையில்லை. காணிக்கை செலுத்தியாக வேண்டும்.

இப்படிக் கொண்டு வரப்படும் கற்கள் 500 மையங்களில் திரட்டப்பட்டு அங்கே அவற்றைப் புனிதப்படுத்தும் வேள்வி நடத்தப்படும். அதன் பின் ஆயுதம் தாங்கிய காவலர்களுடன் அந்தச் செங்கற்கள் அயோத்தியை நோக்கிப் புறப்படும். பாபரி மசூதியின் வாயிலில் நவம்பர் 9-ம் தேதி யன்று மாபெரும் யாகம் - நவம்பர் 10-ம் தேதி அடிக்கல் நாட்டுவிழா.

பிரச்சினைக்குரிய அந்த இடம் கோயிலா, மசூதியா என்று தீர்க்கப்படாமல் வழக்கு நீதிமன்றத்தில் உறங்குகிறது. ஆனால் தாங்கள் கட்டவிருக்கும் கோயிலின் கருவறை தற்போது மசூதி இருக்கும் இடம்தான் என்று ஆர்.எஸ்.எஸ் திமிருடன் அறிவிக்கிறது.

''இந்த வழக்கில் நீதிமன்றம் தீர்ப்பு சொல்வதற்கு ஏதும் இல்லை. இது சட்டப்பிரச்சினை அல்ல; மதநம்பிக்கை சம்பந்தப்பட்ட பிரச்சினை. எனவே எந்த கோர்ட் தீர்ப்பையும் நாங்கள் மதிக்க மாட்டோம். நவம்பர் 10-ம் தேதிக்குள் அந்த இடத்தை (மசூதியை) எங்களிடம் ஒப்படைக்க வேண்டும். இல்லையேல் போராட்டம் தொடரும்'' என்று உள்துறை அமைச்சர் பூட்டாசிங்கை நேரடியாக மிரட்டியிருக்கிறார் விசுவ இந்து பரிஷத்தின் செயலாளர் அசோக் சிங்கால்.

பூதம் அல்லாவுதீனின் ஆணைக்குக் கட்டுப்பட மறுக்கிறது; தன்னால் உருவாக்

www.padippakam.com

கப்பட்டு ஊட்டி வளர்க்கப்பட்ட இந்து மத வெறி இப்போது தனக்கே ஆணையிடுவதைக் கண்டு கிலி கொண்டிருக்கிறது ராஜீவ் கும்பல். ராமன் கோயில் எனப்படும் பாபரி மசூதியைச் சுற்றி இரும்புக் கிராதிகளால் வேலி அடைக்கப்பட்டு ராணுவமும் போலீசும் ஆயிரக்கணக்கில் காவல் நிற்கின்றன. ஆனால் அங்கிருந்து தோன்றும் மதவெறிக் கிருமிகளோ இரும்புக் கிராதிகளைக் கடந்து காற்றில் பரவி வடஇந்தியா முழுவதையும் ஆக்கிரமித்து விட்டன. கையகல நிலத்திற்காக நாடே ரத்தத்தில் தோய்த்தெடுக்கப்படுகிறது. அச்சத்தில் உறைய வைக்கப்படுகிறது.

**''சுனோ பாபர்கி சந்தான்**
**சோடோ இந்துஸ்தான்**
**பாபரின் பரம்பரையே கேளு**
**இந்துக்களின் நாட்டைவிட்டு ஓடு!''**

செங்கல் ஊர்வலம் செல்லுமிடமெல்லாம் முழங்கும் கோஷம் இது. முஸ்லீம்களின் தெருக்களை ஊர்வலம் கடக்கும்போது கோஷம் வெறித்தனத்தின் உச்சியில் இருக்கிறது. ஊர்வலத்தின் வால்பகுதி முஸ்லீம் தெருக்களைக் கடக்கும் போது ஊர்வலத்தின் மீது யாரோ கல்லெறிந்து விட்டதாக, சோடா புட்டியை வீசியதாக, குண்டு வீசியதாக - கூச்சல் கிளம்புகிறது. அடுத்த சில கணங்களில் ஊர்வலம் நெடுக்காக உடைந்து இருமருங்கிலும் உள்ள வீடுகள் கடைகளைச் சூறையாடுகிறது. அப்பாவிகளை, பெண்களை, குழந்தைகளை ஈவிரக்கமின்றி வெட்டிக் கொல்கிறது. பிறகு ஊர்வலம் அந்த இடத்தைக் கடந்து செல்லும் போது அதன் பின்னணியில்.... பற்றியெரியும் வீடுகள் - நெஞ்சைப் பிளக்கும் ஓலங்கள் - காற்றில் கலந்து பரவும் பிணவாடை.

ராம ஜன்ம பூமியை மீட்டெடுக்கும் பெயரால் ஆர்.எஸ்.எஸ் நடத்தும் இந்தக் கலவரங்கள் வடமாநிலங்கள் ஒவ்வொன்றிலும் ஒருவிதமாக அவதாரமெடுக்கின்றன. இந்தூரில் மிலாடிநபி ஊர்வலம்; ராஜஸ்தான், குஜராத், மகாராஷ்டிராவில் பிள்ளையார் சதுர்த்தி ஊர்வலம், உ.பி.யில் (பதுான்) உருது மொழிக்கு அரசு அங்கீகாரம் அளித்ததை எதிர்த்து நடைபெற்ற ஊர்வலம், எல்லா மாநிலங்களிலும் நடைபெறும் செங்கல் ஊர்வலம்.

ஒவ்வொரு ஊர்வலமும் கலவரத்தை நிச்சயம் தோற்றுவிக்கும் என்று தெரிந்தும் இந்த ஊர்வலங்கள் அனுமதிக்கப்படுகின்றன. மிகச் சாதாரண ஜனநாயக உரிமைகளுக்காக நடத்தப்படும் உண்ணாவிரதங்களையே 'தேசப்பாதுகாப்புக்கு ஆபத்து' என்ற பெயரில் தடை செய்யும் காங்கிரஸ் அரசு, மக்களின் மதவுணர்வுகளை மதிக்கிறோம் என்ற் பெயரில் இவற்றை ஊக்குவிக்கிறது. கலவரத்தைத் தடுப்பதற்காக என்ற பெயரில் ஒவ்வொரு நகரத்திலும் ஆயிரக்கணக்கில் போலீசையும், துணை ராணுவத்தையும் கொண்டு குவிக்கிறது. இந்த மதவெறியர்கள் முஸ்லீம்களைச் சூறையாடும் போது அவர்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டு நிற்கிறார்கள்; அவர்கள் 'செயல்படத்' தொடங்கும்போது இந்த மதவெறியர்கள் குதூகலமாக வேடிக்கை பார்க்கிறார்கள். கொல்லப்படுபவர்களில் பெரும்பான்மையோர் முஸ்லீம்கள் - போலீசால் கைது செய்யப்படுபவர்களிலும் பெரும்பான்மையோர் முஸ்லீம்கள்.

தேர்தல் நெருங்குகிறது. வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கப் போவது இனி போபர்ஸ் அல்ல; அயோத்தி. எந்தத் துருப்புச்சீட்டைக் கடைசியாக இறக்குவது - இந்துவா, முஸ்லீமா என்று தீர்மானிப்பதற்கு ராஜீவுக்கும் அவகாசம் தேவை; வி.பி.சிங்கிற்கும் அவகாசம் தேவை. அதுவரை இந்து மதவெறியர்களை பெயர் சொல்லிக் குறிப்பிடுவதைக்கூட இருவருமே எச்சரிக்கையுடன் தவிர்க்கின்றனர். டெல்லி இமாமைச் சந்தித்து ஓட்டுப்பிச்சை கேட்கிறார் வி.பி.சிங். வி.பி.சிங் வெளியே வந்தவுடனே உள்ளே நுழைகிறார் எச்.கே.எல். பகத்.

'செங்கல் ஊர்வலத்தைக் கைவிடுங்கள்' என்று வேண்டுகோள் விடுக்கிறது காங்கிரஸ் கட்சி. நவம்பர் 10-ம் தேதி ராமர் கோயிலுக்கு ராஜீவை அடிக்கல் நாட்ட அனுமதிப்பீர்களா என்று விசுவ இந்து பரிஷத்துடன் ரகசிய பேரம் நடத்துகிறார் பூட்டாசிங்.

மகாராஷ்டிரத்தில் சிவசேனையுடன் பாரதீய ஜனதா ஒப்பந்தம் செய்து கொண்டிருப்பதால் அந்த மாநிலத்தில் எங்களுக்கும் பாரதீய ஜனதாவுக்கும் கூட்டு கிடையாது என்று பேட்டி கொடுக்கிறார் வி.பி.சிங். ஜனதா ஆட்சிக்காலத்தில் மாபெரும் ஆர்.எஸ்.எஸ் எதிர்ப்பாளராகத் தன்னை சித்தரித்துக் கொண்ட பெர்னாண்டஸோ சிவசேனைத் தலைவர் 'பால் தாக்கரே'யை 'நட்பு' முறையில் சந்திக்கிறார்.

தேர்தல் நெருங்கி விட்டது. வயது வரம்பு தளர்த்தப்பட்டதால் இன்னும் பல கோடி இளைஞர்களுக்கு வாக்குரிமை கிடைத்து விட்டது. வாக்குச்சீட்டுகளை விழுங்க போர்க்கால வேகத்தில் வாக்குப் பெட்டிகள் தயாராகின்றன. வாக்காளர்களுக்கோ சவப்பெட்டிகள் தயாராகின்றன.

**மசூதியைக் கொடு!**
**ஓட்டை வாங்கிக் கொள்!**

இது முஸ்லீம் மதவெறியர்களின் கோஷம். கலவரங்கள் அதிகரிக்க அதிகரிக்க அது முஸ்லீம் மக்களின் கோஷமாகவே மாறிவருகிறது. இந்து மதவெறியின் தாக்குதலிலிருந்து தப்பிக்க அவர்கள் முஸ்லீம் மதவெறியர்களிடம் சரணடைகிறார்கள். ஆர்.எஸ்.எஸ்ஸுக்கு எதிராக ஜமாயத்-உல்-இஸ்லாம்; ராம ஜன்ம பூமி பாதுகாப்பு கமிட்டியா - பாபரிமஸ்ஜித் பாதுகாப்பு கமிட்டி; பால் தாக்கரேயா - சையத் சஹாபுதீன்; சின்மயானந்தாவா - டெல்லி இமாம் புகாரி.



**பதுான்: ஆர்.எஸ்.எஸ்.ஸின் கையில் மரணத்தை எதிர்பார்த்து பள்ளிவாசல் மாடத்தில் அமர்ந்திருக்கும் ஓர்முஸ்லீம்.**

இந்து மதவெறி தோற்றுவிக்கும் அச்சம் மட்டுமல்ல இஸ்லாமிய அரசு பற்றிய 'இனிய' கனவும் முஸ்லீம்கள் சிலரின் சிந்தனையை ஆட்டிப் படைக்கிறது. இல்லையென்றால் ஷாபானு என்னும் ஒரு பெண்ணுக்கு எதிராக - தங்கள் மதப்பெண்ணினத்திற்கே எதிராக - ஷாரியத் என்னும் காட்டுமிராண்டித்தனத்தை ஏன் ஆதரிக்க வேண்டும்? சல்மான் ரஷ்டியின் நாவலுக்கு எதிராக பம்பாய் வீதிகளை ஏன் சூறையாட வேண்டும்?

இமாம் புகாரி தெளிவுபடுத்துகிறார், ''ஒரு இஸ்லாமிய குடியரசைத்தான் நாங்கள் விரும்புகிறோம். ஆனால் நாங்கள் பெரும்பான்மையாக இருக்கும் நாட்டில் தான் அது சாத்தியம். இங்கே நாங்கள் சிறுபான்மையினர். எனவே மதசார்பின்மை தான் பொருத்தமான கொள்கையாக இருக்க முடியும்.''

**''எங்கள் மதம் தான் உன்னதமானது. ஏனென்றால் அதுதான் இஸ்லாமைவிடப் புராதமானது'' என்கிறார்கள் இந்துமத வெறியர்கள். புராதனமானதுதான் உயர்ந்ததென்றால் இந்து மதத்தைவிட குரங்கு தான் புராதனமானது.**

**''இல்லை. எங்கள் மார்க்கம் தான் சமீபகாலத்தியது. எனவே அதுதான் இந்துமதத்தை விட நாகரீகமானது'' என்கிறார்கள் முஸ்லீம் மதவெறியர்கள். சமீப காலத்தியதுதான் நாகரீகமானது என்றால் கம்யூனிசம்தான் நாகரீகமானது - சவுக்கடி சாம்ராச்சியமல்ல.**

www.padippakam.com

இமாம் புகாரி கொமேய்னியை வழிபடலாம், ஜியாவை நேசிக்கலாம், எர்ஷாத்தை விரும்பலாம் - ஆனால் அவரவர்களது நாட்டில் இஸ்லாமிய மதக்கொடுங்கோன்மையை எதிர்த்துப் போராடிக் கொண்டிருப்பவர்களும் முஸ்லீம்கள் தான். புகாரியைப் பொருத்த வரை அவர்கள் காஃபிர்கள். தனது பேச்சு இந்து மதவெறியர்களின் வாயில் இனிப்பு மிட்டாயாக விழும் என்பது இமாமுக்குத் தெரியாமல் இல்லை. ஆனால் அவர் அப்படித்தான் பேச முடியும் தொடர்ந்து இமாமாக நீடிக்க வேண்டுமானால்.



பம்பாய்: சிவசேனையின் இந்து மதவெறிக்குண்டர்களின் தாக்குதலை எதிர்த்து நிற்கும் புத்தமதத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட பெண்.

ஆனால் கோடிக்கணக்கான இந்திய முஸ்லீம்கள் 'எங்களை அமைதியாக வாழ விடுங்கள்' என்று நாஜி ஜெர்மனியின் யூதர்களைப் போலக் கதறுகிறார்கள். ''பாபர் மசுதி தானே வேண்டும் எடுத்துக் கொள். அதை நீங்கள் இடித்தால்தானே கலவரம் வரும். நாங்களே இடித்துத் தள்ளி விடுகிறோம். நீங்கள் தாராளமாகக் கோயிலைக் கட்டிக் கொள்ளுங்கள்'' என்று புறப்பட்டிருக்கிறார்கள் மனம் நொந்துபோன சில முஸ்லீம்கள்.

''நாங்கள் மசுதியை இடிக்கப் போவதில்லை. பெயர்த்து எடுக்கத்தான் (!) போகிறோம். அந்த வேலையை நாங்களே செய்து விடுகிறோம்'' என்று நயவஞ்சகமாக அவர்களது கோரிக்கையை மறுத்து விட்டது ஆர்.எஸ்.எஸ் கும்பல்.

### இந்தியாவில் வாழ வேண்டுமா? இந்துவாக மாற வேண்டும்!

இது இன்னொரு முழக்கம். சொல்லப் போனால் இதுதான் இறுதி முழக்கம். ஹிட்லரின் இறுதித்தீர்வு. (ஜெர்மனி வாழ வேண்டுமானால் யூதர்களனைவரையும் கொன்றொழிப்பது தான் 'இறுதித் தீர்வு' என்றான் ஹிட்லர்) முஸ்லீம்கள் மட்டுமல்ல, கோடிக்கணக்கான கிறித்தவர்கள், புத்தமதத்தினர் ஆகிய அனைவரது முதுகுத்தண்டையும் சில்லிட வைக்கும் தீர்வு.

ராம ஜன்ம பூமியுடன் விவகாரம் முடியப்போவதில்லை. ராமாயணத்திற்குப் பிறகு மகாபாரதம். தொலைநோக்குடன் வழிகாட்டுகிறது தொலைக்காட்சி. அடுத்தது கிருஷ்ண ஜன்ம பூமி - துவாரகையில் இருக்கும் மசுதி. அப்புறம் நாடெங்கும் ஆயிரக்கணக்கான மசுதிகள். மொகலாயர் ஆட்சிக் காலத்தில் இடிக்கப்பட்ட கோயில்களின் புள்ளி விவரங்கள் தேவரஸின் கையில் இருக்கின்றனவாம். அந்த இடங்களிலுள்ள மசுதிகள் இடிக்கப்பட்டு கோயில்கள் கட்டப்படும் வரை அவர்கள் ஓயப்போவதில்லையாம்.

''இந்து மதம் சகிப்புத்தன்மை வாய்ந்தது. எத்தனையோ தத்துவங்கள், மதங்கள், பண்பாடுகளை உள்வாங்கிக் கொண்டு தனக்கேயுரிய தன்மையுடன் நிலைத்திருக்கிறது'' என்கிறது 'அரசாங்க வரலாறு'. ஆனால் ''இந்த சகிப்புத்தன்மை தான் நம் அழிவிற்குக் காரணம். இனியும் சகியோம்'' என்று தொடை தட்டுகிறது ஆர்.எஸ்.எஸ்.

சகிப்புத்தன்மை! அது எந்த மதத்திற்கும் இல்லாதது. ஆனால் தங்களுக்கு மட்டுமே உரியதாக எல்லா மதங்களாலும் பீற்றிக் கொள்ளப்படுவது. ''எல்லா மதங்களும் அன்பையே போதிக்கின்றன. ஈசுவர அல்லா தேரே நாம்'' என்று ஏமாந்தவர்கள் காதில் வேண்டுமானால் வானொலி மூலம் ஓதிக் கொண்டிருக்கலாம். எங்கே, புரட்டுங்கள் வரலாற்றை! பார்த்து விடுவோம்!

சிலுவைப்போர் இல்லாமல் கிறித்துவம் உண்டா? ஜிஹாத் (மதத்தைக் காப்பதற்கான புனித யுத்தம்) இல்லாமல் இஸ்லாம் உண்டா? சமணர்கள் கழுவிலேற்றப்படாமல் சைவம் உண்டா? புத்த விகாரைகளின் சமாதியின் மேல்தானே பூரி ஜகன்னாதர் ஆலயமும், பத்ரிநாத் ஆலயமும் நிற்கின்றன! சோழர் காலத்து இலக்கியங்களிலே காணப்படும் புத்த விகாரைகள் ஒன்றைக்கூடக் காணோமே தஞ்சையில்?

வரலாற்றைப் புரட்டிப் பாருங்கள். மனிதர்கள் மதத்தை நேசித்திருக்கலாம். மதமோ வாளைத்தான் நேசித்தது. இந்து மதத்தின் சகிப்புத் தன்மை குறித்து புரியாதவர்கள் பேசினால் எடுத்துச் சொல்லுங்கள். வெறியர்கள் பேசினால் காறி உமிழுங்கள்!

''எங்கள் மதம் தான் உன்னதமானது. ஏனென்றால் அதுதான் இஸ்லாமைவிடப் புராதமானது'' என்கிறார்கள் இந்துமத வெறியர்கள். புராதனமானதுதான் உயர்ந்ததென்றால் இந்து மதத்தைவிட குரங்கு தான் புராதனமானது.

''இல்லை. எங்கள் மார்க்கம் தான் சமீபகாலத்தியது. எனவே அதுதான் இந்துமதத்தை விட நாகரீகமானது'' என்கிறார்கள் முஸ்லீம் மதவெறியர்கள். சமீப காலத்தியதுதான் நாகரீகமானது என்றால் கம்யூனிசம் தான் நாகரீகமானது - சவுக்கடி சாம்ராச்சியமல்ல.

இன்று நமக்குத் தேவை மதசார்பின்மை. காந்தி பிராண்டு மதசார்பின்மை நயவஞ்சகமான இந்துமதவாதம். வார்த்தைகளை அதன் உண்மையான பொருளுக்கு எதிராக நிறுத்தும் கலை இந்தியாவிற்கு நேரு தந்த அருட்கொடை. தேவரஸ் முதல் ஜோதிபாசு வரை இதனால் பயனடைந்தவர்கள் ஏராளம். தொழிலாளிகளுக்கெதிரான சோசலிசம்; ஜனநாயகத்துக்கு எதிரான மதசார்பின்மை!

அம்பேத்காரின் நூலுக்கு தணிக்கை! சல்மான் ருஷ்டிக்கு தடை! கிறிஸ்துவின் ஏழாவது புனிதக்காயம் சினிமாவுக்கு முட்டுக்கட்டை! எல்லாவிதமான மதவெறியர்களுக்கும் ஆதரவு தருவதற்குப் பெயர் மதசார்பின்மை! இந்து மதவாதத்தையே தனது கொள்கையாக வைத்திருக்கும் அரசுக்குப் பெயர் மதசார்பற்ற அரசு! மதவெறியர்களைப் பெயர் சொல்லிக் கண்டிக்கவும் திராணியற்ற பேடிகளுக்குப் பெயர் பாராளுமன்ற ஜனநாயகவாதிகள்! வெட்கம்!!

தொலைக்காட்சித் தொடரில் ராமாயணத்தைப் பார்த்துவிட்டு ராமராச்சியம், இந்து ராஷ்டிரம் பற்றி உங்களுடைய நண்பர்கள் யாரேனும் ஈஸ்ட்மென் கலரில் கனவு கண்டு கொண்டிருந்தால் அவர்களுக்குச் சொல்லுங்கள் இந்து ராஷ்டிரத்தின் அதிபர் பொட்டு வைத்த கொமெய்னியாகத்தான் இருப்பான் என்று! ஆர்.எஸ்.எஸ். மதவெறியர்கள் சுமந்து செல்லும் செங்கற்களால் எழுப்பப்படவிருப்பது கோயில் அல்ல; ஜனநாயகத்திற்கான கல்லறை. அந்தக் கல்லறைக்கு அடிக்கல் நாட்டுவது யார் என்பது தான் ராஜீவையும் வி.பி.சிங்கையும் இன்று அலைக்கழிக்கும் கேள்வி.


ஜனநாயகமா? பாசிசமா? ஓட்டுச் சீட்டின் மூலம் ஜனநாயகத்தை வென்றெடுத்தவர்களும் இல்லை; பாசிசத்தை முறியடித்தவர்களும் இல்லை. இனி நீங்கள் முடிவு செய்து கொள்ளுங்கள் - நவம்பர் 10-ம் தேதியும் 24-ம் தேதியும் என்ன செய்ய வேண்டும் என்பதை!

— மருதையன்



படிப்பகம்

www.padippakam.com




# 'வரம்' பெற்ற பத்திரிக்கையாளர்கள்!

பத்திரிக்கையாளர்கள் செய்திகளைத் தேடிப் போக வேண்டும் - துரத்திப் பிடிக்க வேண்டும்; ஒளிந்து கொண்டிருக்கும் செய்திகளைக் களைந்து எடுக்க வேண்டும் என்று நல்ல பத்திரிக்கையாளனுக்கு இலக்கணம் சொல்வார்கள். அதெல்லாம் ஒரு சில முக்கிய இடங்களைப் பிடித்தவர்களுக்குத் தான். மற்றவர்கள் தினசரிப் பழக்கமாக கோர்ட்டு, ஜெயில், போலீஸ், கோட்டை, கூட்டங்கள், முக்கியப் பிரமுகர்களின் வீடுகள் ஆகிய இடங்களுக்குப் போக வேண்டும் - அங்கே செய்தியை எழுதியே கொடுத்து விடுவார்கள். போய் வரும் வேலை, அங்கே போனால் வெட்டியாக அரட்டை அடித்து பொழுது கழிக்கவேண்டிய வேலை மட்டும்தான் இந்த பத்திரிக்கையாளர் வேலை. அவரவர்களின் சாமர்த்தியத்தைப் பொறுத்து அந்தஸ்து சம்பாதித்துக் கொள்வார்கள்.

ஆனால் இந்தப் பத்திரிக்கையாளர்களிலேயே உயர்ரகம் - தனிஜாதி இருக்கிறது. 'வரம் பெற்றவர்கள்' என்று இவர்களை மற்றவர்கள் அழைக்கிறார்கள். இவர்கள் அதிர்ஷ்டசாலிகள். இவர்களின் துறை: வியாபாரச் செய்திகள் சேகரிப்பது. பத்திரிக்கையாளர்கள், செய்தியாளர்கள் என்று இரண்டு பிரிவினர் இதில் அடக்கம். சாதாரண நாட்களை விட கம்பெனிகள் பங்குகளைக்கோரும் நாள்தான் பத்திரிக்கையாளர்களுக்கு நட்சத்திர நாட்கள்.

ஐந்து நட்சத்திர ஓட்டல்களில் கம்பெனிகள் பத்திரிக்கையாளர் கூட்டங்களை ஏற்பாடு செய்யும். கம்பெனி அனுப்பும் கார், டாக்ஸிகளில் போகும்போதே பத்திரிக்கையாளர்களுக்கு மிதப்பும், கிறுகிறுப்பும் தொடங்கி விடும். கூட்டம் நடக்கும் அறைக்குள் நுழைந்து விட்டால் எல்லாம் வழக்கப்படிதான். கம்பெனியின் வளர்ச்சி, அதன் உற்பத்தி, நிர்வாகிகளின் சமூக அந்தஸ்து பிரச்சனைகளே இல்லாத முதலாளி - தொழிலாளர் உறவுகள் எல்லாவற்றையும் ஆடியோ - விஷுவல் படங்கள் போட்டு விளக்குவார்கள்; பிறகு பத்திரிக்கையாளர்க்ளின் கேள்விகளுக்குப் பதில் சொல்வார்கள். பத்திரிக்கையாளர்கள் விளக்கெண்ணெய் குடித்த்து போல உற்சாகம் இல்லாமல் அமர்ந்திருப்பார்கள். ஒரே ஒரு முதிர்ந்த (சீனியர்) பத்திரிக்கையாளர் ''ஓகே, தேங்க்யூ வெரிமச்'' (நிரம்பவும் நன்றி) என்று சத்தம்போட்டுச் சொல்வார். அவ்வளவு தான்; மற்றவர்கள் விருந்து நடக்கும் அறைக்கு ஓடுவார்கள். நெய்யில் வறுத்த முந்திரி, வறுத்த சிக்கன், உயர்ந்த ரக மதுபானங்கள் - வயிற்றில் ஊற்றியதும் திணித்ததும் போக மிச்சம் ஒழுங்காகக் கட்டி எடுத்துக் கொள்வார்கள் வீட்டுக்கு.

வெளியே பெரிய தட்டுக்களில் பரிசுகள் காத்திருக்கும். 'நவநாகரிக ஸ்டைலில் அழகு நங்கைகள்' குழைந்து குழைந்து பரிசுகளைக் கொடுப்பார்கள். கோட்டு சூட்டு துணிகள், கடியாரங்கள், புடவைகள் இத்யாதி இத்யாதி. ஒருமுறை ஓரிடத்தில் வாங்கிய பொருட்களையே மற்ற இடத்தில் கொடுத்துவிடப் போகிறார்களே என்பது தான் அவர்களின் ஒரே கவலை. அதைக் கூட இப்போது சமாளித்து விடுகிறார்
ளாம் - குத்துமதிப்பாக அலுவலகத்தி
ஏலம் விட்டுவிடுகிறார்களாம்.

கேள்வி நேரம் மிகவும் முக்கியம
னது. கம்பெனி பற்றிய நிறைய விஷயங்
ளைத் துருவிஎடுத்து உண்மையைப் பத்
ரிக்கையில் கொடுப்பதற்கு கேள்வ
நேரத்தை நன்றாகப் பயன்படுத்த வேன்
டும். மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்த ஏரா
மான நபர்கள் இப்போது பங்கு மார்க்கெ
டில் நுழைந்திருக்கிறார்கள். முதலீடு செய்
வட்டி சம்பாதிப்பதை துணைத் தொழில
கக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்
விளங்கும்படியாக, இவர்களை ஈர்க்கும்
டியாகச் செய்திகள் தரவேண்டும். ஆனா
கம்பெனிகள் குறுக்குக்கேள்விகள் போடு
நபர்களை விரும்புவதில்லை. சரியாக
சொன்னால், தாங்கள் விரும்பும் கேள்வ
களை எந்தப் பத்திரிக்கையாளர்கள் கேட்
றார்களோ அவர்களையே கம்பெனிக்கும்
கூட்டங்கள் நடத்தும் விளம்பர ஏஜென்சி
ளுக்கும் பிடிக்கிறது.

இது விளம்பர யுகம். பாக்குக்கு
விளம்பரம்; பாரீஸ் ஷாம்பூவிற்கும் விள
பரம்; பாட்டிலுக்கும் விளம்பரம்; பங்
மார்க்கெட் விளம்பரத்தையும் பெரிய
விளம்பர நிறவனங்கள் கவனிக்கின்றன
எல்லாவிதத்திலும் கம்பெனிக்கு விளம்ப
மும், புகழும் கிடைக்கும்படி இவை க
னித்துக் கொள்கின்றன; ஏஜென்சிகள் பத்
ரிக்கையாளர்களை நன்றாகக் கவனிக்கி
றன - அவை என்ன எழுதிக் கொடுக்
றதோ அதையே பத்திரிக்கைகளில் போ
கிறார்கள். ஏஜென்சிகள், பத்திரிக்கைய
ளர்கள் இரண்டு பேரும் சேர்ந்து கம்பெனி
குப் பாதகமாகச் செய்திகள் வராதவா
பார்த்துக் கொள்கிறார்கள்.

பம்பாய் பத்திரிக்கையாளர்கள் இதி
மிகப்பிரசித்தமாம். பரிசுக்கு மட்டுமல்ல
கம்பெனிப் பங்குகளுக்கே அவர்க
டைரக்டர்களைச் சிபாரிசு பிடித்து வாங்
விடுகிறார்களாம். பரிசுகளை விட இவ
கள் பங்குகளுக்கே மோதுகிறார்களாம்
அம்பானி ரிலையன்ஸ், பல பத்திரிக்கைய
ளர்களை இப்படியே அமுக்கிப் பிடித்திரு
கிறது.

தாங்கள் மிகவும் புத்திசாலிகள் என்
பீற்றிக்கொண்டே எல்லாத்துறைகளிலு
ஏமாந்து போகும் மத்தியதர வர்க்கம் பங்
மார்க்கெட்டிலும் ஏமாந்து போகிறது - கா
ணம் அவர்களுக்குத் தெரிய நியாய
மில்லை. ஏமாற்றும் கம்பெனிகளின் முக்
யக் கூட்டாளிகள் பத்திரிக்கையாளர்க
தான். அவர்கள் தான் கம்பெனி பற்றி
உண்மைகள் வராமல் பார்த்துக் கொள்
றார்கள் - மோசடி விளம்பரம் செய்து க
பெனிகளை, அம்பானிகளை உயர்த்தி வி
கிறார்கள்.

வர்த்தகப் பத்திரிக்கையாளர்களிட
மீதமிச்சம் ஒன்றுமில்லையா - எல்லா உ
மைகளையுமே விற்று விடுகிறார்களா
ஏனில்லை - தரகு முதலாளிகளின் கம்
னிகளின் செய்திகளைச் சேகரிக்கும் எ
லாப் பத்திரிக்கையாளர்களுக்கும் ஓ
அடிப்படை உரிமை இருக்கிறது - அ
தான் கம்பெனியிடமிருந்து பரிசுப்பொரு
கள் வாங்கும் உரிமை!



# ஈட்டி, அம்பு, பீரங்கி, துப்பாக்கி, நா:பாம், அணுகுண்டு, ஹைட்ரஜன் குண்டு....

# வீடியோ!

முப்பது வருஷங்களுக்கு முன்னால் ால்லா வீடுகளிலும் ரேடியோ கிடையாது. ாங்கிருந்தோ கிளம்பி காற்றிலே வரும் இசையைத்தான் எனது சிறுவயதில் கேட்டி நக்கிறேன். டீக்கடைகள் அப்போதெல்லாம் மிகச் சில. அங்குதான் ரேடியோ சிலோன் கேட்பார்கள். ஓயாது சினிமாப் பாட்டு ாடும். பாட்டுக்கிடையே டீகிளாஸ் சிணுங் ல்கள் கேட்டுக்கொண்டிருக்கும்.

அதன்பிறகு ஆண்டுகள் வேகமாகவே ருண்டுவிட்டன. குறவர் தோளில் டால்டா ப்பாவோடு டிரான்சிஸ்டரும் குடியேறி து. பிறகு கேசட் வந்தது. எங்கு பார்த்தா ும் கேசட் கடைகள். டு-இன்-ஒன் செட்டுக ளயும் டீக்கடைகளையும் டீக்கடை பெஞ்சு ளில் ஆணி அடித்ததுபோல் அமர்ந்து அரட்டை அடிக்கும் வேலைவெட்டி இல் ாத இளைஞர்களையும் என்னால் பிரித் ுப் பார்க்க முடிந்ததேயில்லை.

அப்புறம் கறுப்பு-வெளுப்பு டி.வி. பிறகு கலர் டி.வி. ராஜீவின் வருகை — திடீ ரென்று ஒருமாற்றம் — மேற்கத்திய முதலா ளிகளுக்கு கதவுகள் வேகமாகத் திறக்கப்பட் டன. ஆடம்பர கலாச்சாரம் வால் முறுக்கப் பட்டுத் திமிலில் தட்டிவிடப்பட்டது. கொட்டோ கொட்டென்று டு-இன்-ஒன் செட்டுகளும், கலர்கலராக டி.வி.களும், டெக்குகளும், வீடியோ (வி.சி.பி., வி.சி. ஆர்) வகையறாக்களும் பொழிந்து தள்ளி விட்டது.

ஒரு மார்கழி இரவு 12 மணியிருக்கும். வீடு திரும்பிக் கொண்டிருந்தேன். வெடவெடவென்று நடுங்கவைக்கும் குளிர். ஒரு திருப்பத்தில் வழியை அடைத்து நடு ரோட்டில் பெரிய கூட்டமே உட்கார்ந்திருந்தது. நூறு, நூற்றைம்பது பேர் இருக்கும். தலைப்பா கட்டிக்கொண்டு ஆண்கள்; புடவைத்தலைப்பை இழுத்து முக்காடு போட்டுக் கொண்டு பெண்கள்; பெரியவர்களின் போர்வைக்குள் ஒட்டிக்கொண்டு பொடிரகங்கள். கொட்டும் பனியில் என்ன முக்கியக் கூட்டம்? ஒரு மூலையில் டேபிள் மீது டி.வியில் வீடியோப்படம் ஓடிக் கொண்டிருக்கிறது. ரஜினி உருக்கமாக புரியாத வசனத்தைப் புரியவைத்துக் கொண்டிருந்தார். அவ்வளவு கூட்டத்தையும், ஓரே ஒரு 'மந்திரம்' கட்டிப்போட்டு விட்டது — அது வீடியோ!

**தரணியை ஆண்ட தமிழன் நடுத்தெருவில் தரையில் உட்கார்ந்து வீடியோ பார்க்க**

**⬆ இமாசலப் பிரதேசம்: மலை உச்சியிலேயும், காட்டுக்குள்ளேயும் வீடியோ மந்திரத்தால் கட்டப்பட்டவர்கள்.**

லாமா என்று அங்கம் பதறித் துடித்த கலைஞர் பட்டிதொட்டியெங்கும் வீடியோ அரங்கங்கள் திறக்கப்பட தனியாருக்கு அனுமதி வழங்கி விட்டார். டது. சொன்னதை எல்லாம் செய்து கொண்டிருந்தவர் சொல்லாத ஒன்றையும் செய்துவிட்டார்.

வீடியோ — எத்தனை வேகமாக ஊடுருவிக் கொண்டிருக்கிறது! கிராமங்களில் திருவிழாக்களில் வீடியோ இல்லாமல் நிகழ்ச்சி முடியாது; பருப்பில்லாவிட்டாலும் பிரச்சனை இல்லை; வீடியோ இல்லாமலும் ஒரு கலியாணமா என்று கேட்கிறார்கள். காதுகுத்து, மஞ்சள் நீராட்டுவிழா, இழவு, திதி, பிறந்தநாள் எல்லாவற்றிலும் வீடியோ உண்டு.

பொழுதுபோக்காக தியேட்டரைத் தேடி அலையவேண்டாம்; வரிசையில் வெயிலிலும், மழையிலும் கால்கடுக்க நிற்க வேண்டாம்; உங்களை நாடி வீடுதேடி ஓடிவருகிறது வீடியோ; உங்களுக்கு மிக அருகே மிகக் குறைந்த வாடகையில் 'பேரின்பத்தை' வாரி வழங்குவதற்காகக் காத்திருக்கிறது.

வீடியோ — எத்தனை அற்புதமான அறிவியல் கண்டுபிடிப்பு! எப்படியெல்லாம் சீரழிகிறது?

■ □ ■

மனித அறிவின் நீள அகல ஆழங்களை அற்புதமான வீடியோக்களில் எத்தனைவிதமாக வேண்டுமானாலும் வாரி வழங்கலாம். ஏழு, எட்டு என்று ஒரு நாளைக்கு வகுப்புக்களைச் சடங்காக நடத்திக் கொண்டிருக்கிறார்கள். கொட்டாவி விடும் அந்தச் மூளைச் சோம்பேறி வகுப்புக்களைத் தூரவீசி எறிந்துவிட்டு அறிவைப் பிரித்து வகைவகையாகக் கொடுக்கலாம். தமிழக வரைபடமும் தெரியாது, உலகவரைபடமும் தெரியாது, பொட்டைநெட்டுருப் போட்டு வாந்தி எடுக்கும் முட்டாள் கல்வி

www.padippakam.com

யைக் குழித் தோண்டிப் புதைத்துவிடலாம். எந்த நாடு, எந்த ஊர், என்ன மனிதர், என்ன வரலாறு, என்ன மொழி, என்ன பண்பாடு, என்ன உற்பத்தி, என்ன வளர்ச்சி — இவற்றைக் கண்ணால் கண்டு காதாலும் கேட்க வீடியோவில் ஏற்பாடு செய்யலாமே?

பயிற்சி சார்ந்த, செய்முறைகளை விளக்கும் கணக்கு, ரசாயனம், பௌதீகம், தொழில்நுட்பங்களை வீடியோ மூலம் பிடிக்கலாம்.

பொது அறிவை வளர்க்கலாம்மூடநம்பிக்கைகளை ஒழித்துக் கட்டும் காட்சிகளை எடுத்து விளக்கலாம்; விஞ்ஞானத்தை மாற்றாக முன்வைத்து விளக்கலாம்; இயற்கையைப் படிக்கக் கற்கலாம், கற்றுக் கொடுக்கலாம்; இயற்கையை மாற்றும் விஞ்ஞான சாதனைகளை விரிவாகப் படிக்கலாம்.

மனிதனது உடற்கூறுபற்றிப் படங்களோடு அறியலாம்; நோய்கள் பற்றி, நோய் வருமுன் காக்கும் தடுப்புமுறைகள் பற்றி அறியலாம்; வீடு, கழிப்பறைகள், பொதுஇடங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும் பொதுச் சுகாதார முறைகளைக் கற்றுக்கொடுக்கலாம்; ஆரோக்கியமான விளையாட்டுக்கள், சிந்திக்கத் தூண்டும் கலைகளைக் கற்றுத் தரலாம்.

வீடியோ வைத்துக் கொண்டு, புதிய மனிதர்களையே, புதிய உலகத்தையே உருவாக்கலாம் தான். ஆனால், அதை வைத்துக் கொண்டு எவ்வளவோ மோசடிகள் நடத்துகிறார்கள்.

சாதாரணமாகப் பத்திரிக்கையில் ஒரு விஷயத்தைப் படித்துவிட்டால் 'பத்திரிக்கையிலே போட்டுவிட்டானே' என்று மிகப் பெரிய நம்பிக்கையோடு மக்கள் பேசுவதைக் கேட்கிறோம்.

சமீபத்தில் ஆகஸ்டு 30 எதிர்க்கட்சிகள் பந்த் நடத்தின. வெற்றிகரமாக நடந்தது. இந்தியாவின் ஜனசந்தடிமிக்க நகரங்களின் பிரதான சாலைகள், தெருக்கள் வெறிச்சோடிப் போய்விட்டன. ஆனால் டி.வி.யில் ராஜீவ் விளம்பரம் எப்படி நடந்தது? அதே சாலைகள், தெருக்களில் முன்பு எப்போதோ எடுத்த படத்தை அன்று டி.வி.யில் திரையிடலைத்து 'பந்த்' பிசுபிசுத்தது என்ற பொய்யைப் பரப்பினார்கள்.

பத்திரிக்கை, டி.வி. பாதிப்பே இப்படி என்றால் வீடியோவின் பாதிப்பு பலமடங்கு இருக்கும் என்பதை விளக்கவேண்டியதே இல்லை.

சென்ற தேர்தலில் ராஜீவின் வீடியோ ரதம் தமிழகத்தின் கிராம, சிறுநகர்ப்புறங்களில் உலா வந்தது. ராஜீவின் நேரு — இந்திரா பரம்பரை பற்றி வீடியோ தம்பட்டம் அடித்து ஓயும். அப்புறம் ரதத்தின் காமெரா ஒருமுறை வேடிக்கை பார்ப்பவர்களையே படம் எடுத்து, ஒரு சில நொடிகளுக்குள் திரும்ப அவர்களுக்கே போட்டுக் காட்டும். பல் தெரிய சிரிக்கின்ற கையாட்டுகின்ற தங்களது உருவங்களை நேரெதிராகவே திரையில் பார்த்துப் பிரமித்துப் போனார்கள் மக்கள்.

எவ்வளவு கீழ்த்தரமான தந்திரம்? தங்கள் கண்களை அகல விரித்துப் பார்க்கும் வெள்ளை உள்ளங்களை ஏமாற்றுகிறார்கள் இந்த ஓட்டு வியாபாரிகள். இந்தியா மட்டுமல்ல மூன்றாம் உலக ஏழை நாடுகளில் வீடியோ செய்யும் மோசடிகளைப் பற்றி 'டைம்' ஆங்கில ஏட்டில் சில தகவல்கள் கொடுத்திருக்கிறார்கள். அதில் இந்தோனேசியா நாட்டு டாக்டர் சலீம் சையது கூறுவது போல — ''மக்களுக்குப் படிப்பறிவு வேண்டும் என்று ஆலோசிக்கிறோம்; ஆனால் வீடியோ கும்பல்கள் வந்த பிறகு அந்த வேலையைப் பின்னுக்குத் தள்ளிவிட்டன. மக்கள் முன்பு குப்பை நாவல்களை மட்டும் படித்துக் கொண்டிருந்தார்கள். இப்போது அதுகூடத் தேவையில்லை, பார்வைக்கு மட்டும் தான் வேலை. காய்ந்த புல்லை மனிதனுக்கு தின்னக் கொடுத்தால் எப்படி இருக்கும், அதை வீடியோ செய்கிறது.''

அமெரிக்கா போன்ற ஏகாதிபத்திய நாடுகள் ஏழை நாடுகளில் தங்களுக்குச் சாதகமான அரசியலை உருவாக்குகிறார்கள்; அரசியல் கலவரங்களைத் தூண்டுகிறார்கள்; ஆட்சிக் கவிழ்ப்புக்களைச் செய்கிறார்கள்; அரசியல்கட்சிகள், அரசு அதிகாரிகள், ரேடியோ, டி.வி. பத்திரிக்கை மூலம் வேண்டிய அளவு பிரச்சாரத்தை அவிழ்த்து விடுகிறார்கள். தவிர, விதவிதமாகப் பெருக்கி வைத்திருக்கும் ஆபாச கலாச்சாரத்தை உலக ரகசிய கள்ளச்சந்தை மூலம் இறக்கிவிடுகிறார்கள். வீடியோ மூலமாக இவை வேகமாக நடந்து வருகின்றன. முக்கியமாக சோசலிச நாடுகள் என்று சொல்லிக் கொள்ளும் நாடுகளில் இவை அதிகமாக நடக்கின்றன.

செக்கோஸ்லாவாகியாவில் ராக் வெறிப்பாட்டும், இசையும் ஆட்டமும் ரகசியமாகப் பரப்பப்படுகின்றன; வியட்நாமில் சட்டவிரோதமாக ஹோ-சி-மின் நகரத்தில் மட்டும் 400 ரகசிய வீடியோ அரங்குகள் இயங்குகின்றன; கியூபாவில் அரசாங்கமே சில அமெரிக்கத் திரைப்படங்களை வாங்கி வினியோகிக்கிற அளவுக்கு பிரச்சினை முற்றிவிட்டது.



கியூபாவில் ரகசிய வீடியோக்களில் முதலாளித்துவ வக்கிரங்களைத் தூண்டிவிடும் ஏராளமான படங்கள் வந்தன. அரசாங்கத்தால் அதைத் தடுக்கமுடியவில்லை. மெள்ள மெள்ள அவை மக்களிடம் வேரூன்றின; அதையும் தடுக்க முடியவில்லை. வெறுமனே தடுத்தால் மேலும் வேகமாக ஆவேசத்

பம்பாய்:
சாடலைட் தட்டுக்கள் - தேச எல்லைகளை மட்டுமல்ல, ஒழுக்கத்தையும் அல்லவா உடைக்கிறது



தாய்லாந்து:
கிராமங்களில் வீடியோ —
ஆதிவாசிகளையும் விழுங்கிவிட்டது!

www.padippakam.com

தோடு பாயக்கூடும்; அதனால் கடைசியில் தானே சில படங்களை இறக்குமதி செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டது கியூபா அரசு. வெறுமனே தடுக்காமல் சோசலிசத்துக்கேற்ற கலாச்சார வாழ்க்கைமுறைகளை விடாப்பிடியாக அறிமுகப்படுத்தி இருக்கவேண்டும். அதைச் செய்யாததால் பிரச்சனை தீவிரமாகி விட்டது.

தாய்லாந்திலும், இந்தோனேசியாவிலும் வீட்டுக்கே கொண்டு வந்து ஆபாச வீடியோ விற்கிறார்கள். பங்களாதேஷில் பெற்றோர்கள் அலறுகிறார்கள்; ''எங்கள் இளைஞர்கள் சீரழிந்து போகிறார்கள். விரைவாக இதைத் தடுக்கவில்லையானால் எங்கள் சமூக ஒழுக்கமே கெட்டு நாறிப்போகும்''.

தாய்லாந்தின் தலைநகரமான பாங்காக்கில் ஒரு கிண்டர்கார்டனில் (ஆங்கில நர்சரிப்பள்ளி) ஒரு சம்பவம் நடந்தது. பார்த்த ஆசிரியர்கள் பயத்தால் திகைத்துப் போனார்கள். மூன்று வயதுச் சிறுவன் ஒருவன் சகவகுப்பு மாணவியோடு உடலுறவுக்கு முயன்று கொண்டிருந்தான். சுற்றி நின்ற மற்ற குழந்தைகள் கைதட்டி ஆரவாரம் செய்தன. பள்ளி ஆசிரியர்கள் காரணத்தைத் தேடிக் கண்டுபிடித்தார்கள்; இரண்டு குழந்தைகளுமே தங்கள் பெற்றோர்களோடு ஆபாச வீடியோ (எக்ஸ் ஃபிலிம்) பார்த்திருக்கின்றன.

மதக்கோட்பாடுகளின் அடிப்படையில் மக்களின் வாழ்க்கையை ஒழுங்குபடுத்துகிறோம் என்று செயற்கையாக அராபிய நாடுகளில் சட்டம் போட்டிருக்கிறார்கள். ஆனால் அங்கும் இந்தியாவுக்கும் வந்து ஷேக்குகள் அடிக்கும் ஆபாசக் கொட்டங்களைப் பார்த்து உலகமே சிரிக்கிறது.

ஷேக்குகள் (சாடலைட்) செயற்கைக் கோள் வாங்கிகளைப் பொருத்தி மேல் நாட்டு நிகழ்ச்சிகளை டி.வி.யில் பார்த்து உல்லாசப் பொழுது போக்குகிறார்கள். ஆனால் அராபியச் சட்டப்படி சாடலைட் வாங்கிகள் பொருத்துவது குற்றமாகும். ஷேக்குகள் மட்டுமா? மற்ற மக்களும் தங்களது டி.வி. ஏரியலில் 10 டாலருக்கு கன்டென்சரை வாங்கிப் பொருத்தி ஷேக்குகளின் அனுபோகத்தை வழியில் இழுத்துக் கொண்டு அனுபவிக்கிறார்கள். அப்படி அனுபவித்தவர்கள் நிகழ்ச்சியைப் பதிவு செய்து விற்கவும் தொடங்கி விட்டார்கள்.

''உலக வரைபடத்தில் வேண்டுமானால் நாடுகளைப் பிரிக்கும் சிவப்புக் கோடுகள் இருக்கலாம். ஆனால் சாடலைட்டுகளுக்கு இதெல்லாம் தெரியாது, கிடையாது'' என்று அமெரிக்கத் தகவல் நிறுவனத் தலைவர் மார்தட்டுகிறார். ''பூகோள எல்லைகள் செய்திகளின் நுட்பத்தைத் தடுக்கமுடியாது'' என்கிறார் அவர்.

சாடலைட்டுகள் இந்தியாவிலும் எட்டிப் பார்த்துவிட்டன. பம்பாயில் சாடலைட் தட்டுக்கள் பலமாடிக் கட்டிடங்களின் உச்சியில் முளைத்துவிட்டன. வெளிநாட்டு நிகழ்ச்சிகள் ஆங்கிலத்தில் தானே இருக்கின்றன. அவற்றைச் சாதாரண மக்கள் புரிந்து கொள்ளவும் முடியாது. பார்க்கவும் விரும்ப மாட்டார்கள். அதனால் மக்கள் கெட்டுப்

*பெட்டிக்கடைகள் போல ஒரு லட்சம் வீடியோ கடைகள் இந்தியாவில் இருக்கின்றன. இவை பரப்பும் ஆபாச கேசட்டுகளை போலீஸ் தடுக்கவில்லை - தடுக்காது.*

போக வாய்ப்பில்லை என்று சிலர் வாதாடுகிறார்கள். ஆனால் பொறுக்கிக் கும்பல் என்ன செய்யும் தெரியுமா? அந்த நிகழ்ச்சிகளில் மக்களுக்கு எது போகவேண்டும் என்று விரும்புகிறதோ அவற்றைப் பதிவு செய்து விற்கத் தொடங்கிவிடும்.

இவற்றுக்கு எதிராக கட்டுப்பாடு போடமுடியாதா? இப்போதைய அமைப்பில் முடியாதுதான். ராஜீவின் ஆலோசகர்களில் ஒருவரான பி.எஸ்.தியோதர் என்ன சொல்கிறார்? ''புதிய தொழில்நுட்பத்தைக் (டெக்னாலஜி) கதவடைத்து வெளியே தள்ள முடியாது. குடியைத் தடை செய்ய முடியுமா? அதுபோலத்தான் இதுவும்.'' குடிகாரனும், விபச்சாரியும் ஒழுக்கத்தைக் காப்பாற்றுவதற்காகச் சபதம் போட்டார்களாம் — அதுபோல இருக்கிறது

வாடிகன் போப் அலுவலகம் அண்மைக்கால அறிக்கைகளில் ஏழை நாடுகளில் உள்ள ஒழுக்கக் கேடுகள் பற்றி வெளிப்படையாக எழுதியுள்ளன: ''ஒரு காலத்தில் பணக்கார நாடுகளில் மட்டுமே தனிச்சிறப்பான நோய்களாக இருந்துவந்த ஆபாசம், வன்முறைச் சித்தரிப்புகள் இப்போது ஏழை




நாடுகளில் ஊடுருவி ஒழுக்கங்களை அழித்து வருகின்றன''.

இந்தியாவில் ராஜீவின் தாராளமான புதிய பொருளாதார திட்டத்தின் காரணமாக ஆடம்பர கலாச்சாரம் பெருக்கெடுத்தோடுகிறது. எப்பாடுபட்டாகிலும், சுகம் அனுபவிக்கவேண்டும் என்ற எண்ணம் வரத் தொடங்கிய பிறகு அதில் ஆபாச வீடியோவும் ஓர் அங்கமாகிவிட்டது. ஒழுக்கக் கேட்டையே அங்கீகரிக்கின்ற போக்கு — இதை 'பக்குவம்' என்று அழைக்கிறார்கள் — பெருகியுள்ள இங்கே ஆபாசத்தை அங்கீகரிப்பதும், ஆராதிப்பதும் புதுநாகரிகமாகி (ஃபாஷன்) விட்டது.

குடியிருப்புகளில் பொதுவான கேபிள் இணைப்பு வைத்து வீடியோ நிகழ்ச்சிகள் காட்டும் புதுஉத்தி தொடங்கிவிட்டது. இதிலும் ஆபாசம் ஊடுருவதைத் தடுக்கமுடியாது; ரகசியமாகப் பார்த்துக் கொண்டிருந்த விஷயங்கள் நடுச்சந்திக்கு வர நீண்டகாலம் பிடிக்காது. வீட்டில் பிள்ளைகள், குழந்தைகளின் மூளைகள் பாதிக்கப்பட நீண்டநேரமும் எடுக்காது. பாங்காக்கின் நர்சரிப்பள்ளிதான் நம்முன் உள்ள அபாய எச்சரிக்கை

பெட்டிகடைகள் போல ஒரு லட்சம் வீடியோ கடைகள் இந்தியாவில் இருக்கின்றன என்று ஒரு புள்ளி விவரம் கூறுகிறது. இது பரப்பிவரும் ஆபாசகேசட்டுகளை போலீஸ் தடுக்கவில்லை — தடுக்காது. ''பெண்கள் நேரடியாகப் பாதிக்கப்படும் வழக்குகள் தான் முதலிடம். ஆபாசப் புத்தகம், வீடியோ இவையெல்லாம் அடுத்தபட்சம் தான்'' என்கிறார் ஒரு பம்பாய் போலீஸ் அதிகாரி. முதல்பட்சமாக பெண்களை போலீஸ் பாதுகாக்கும் அழகு ஊரறிந்தது! அடுத்தபட்சம் பற்றிச் சொல்லவே வேண்டாம்!

இவை போதாதென்று கிராமம்தோறும் வீடியோ அரங்கம் என்று கருணாநிதி அறிவிப்பு வந்து சேர்ந்திருக்கிறது. பட்டிதொட்டியெல்லாம் சோறு, வேலை இல்லை. ஆனால் வீடியோ, ஆபாசச் சரக்






படிப்பகம்

www.padippakam.com

குகள் சரளமாகப் புழங்கும். கஞ்சாவை விற்கும் கருணாநிதியிடம் என்ன சமூகப் பொறுப்புணர்ச்சியை நாம் எதிர்பார்க்க முடியும்? முதலில் வீடியோ வந்தபோது சினிமா தயாரிப்பாளர்களின் எதிர்ப்பு இருந்து அடங்கிவிட்டது; அப்போது முதன்முறையாக வீடியோ ஜெயித்தது. இப்போது கருணாநிதி அறிவித்ததும், வீடியோ இரண்டாவது முறையாக ஜெயித்து விட்டது!

■ □ ■

வீடியோவில் ஆங்கிலப்படம் பார்க்கலாம், ஜாலியாக இருக்கலாம் என்ற கருத்துத்தான் அதிகம் இருக்கிறது. இதற்குக் காரணம் என்.ஆர்.ஐ. (வெளிநாட்டில் தங்கியுள்ள இந்தியர்கள் மூலமாக வரும்) ஆபாசப்படங்கள் ஏராளமாக வந்து குவிவதுதான். அந்தப் படங்களின் காட்சிகளில் வரும் கதாநாயகன் எலெக்ட்ரிக் ஷேவரால் முகச்சவரம் செய்வான்; விலை உயர்ந்த கார்களில் மிதப்பான்; விருந்துகள் — பல பெண்களோடு சல்லாபம் — சுலபமான சுக வாழ்க்கை வாழந்து நினைத்ததை முடிப்பான். இவை அமெரிக்கா போன்ற நாடுகளில் எல்லோருக்கும் எல்லாம் கிடைத்து விட்டது; அது சொர்க்க பூமி என்ற கருத்துக்களை விதைக்கின்றன; அந்த நாடுகளின் பிரச்சனை, நெருக்கடி மிக்க பக்கங்கள் காட்டப்படுவதில்லை. ஆக, மக்களுக்கு கதைகதையாகப் பொய்கள் மட்டுமே வாரி இறைக்கப்படுகின்றன.

இவற்றையெல்லாம் நேருக்கு நேர் சந்தித்த பிறகும் இந்தப் போலிச் சரக்குகள், அவை வந்து குவிவதற்குக் காரணமான சக்திகள் மீது கோபமும், கொந்தளிப்பும் பொங்கி எழவேண்டும். ஆனால் அறியாத மக்கள், இந்தியா போன்ற ஏழை நாட்டுமக்கள் கோபம் கொள்வதற்குப் பதிலாக, 'இவையெல்லாம் நமக்குக் கிடைக்காதா?' என்று ஏங்குகிறார்கள்.

பெரு நாட்டைச் சேர்ந்த ஒரு வியாபாரி இப்படித்தான் ஏங்கித் துடிக்கிறார்: "இங்கே இருக்கிற அரசியல்வாதிகள் பச்சைப் புளுகர்கள். உலகத்தில் என்ன நடக்கிறது என்பதை நாம் அறிந்து கொள்ள விரும்புகிறோம், அவர்கள் தடுக்கிறார்கள்".

உலகத்தில் என்ன நடக்கிறது என்று உண்மை நிகழ்ச்சிகளை இவை காட்டுவதில்லை. ஆனால் இப்படி நம்பி மோசம் போகிறார்கள் ஏழை நாட்டு மக்கள். கஞ்சாப் போதையில் சிக்கிக் கொண்டவரை மீட்கமுடியுமா?

வீடியோ கடைகளைக் கட்டுப்படுத்தினால் என்ன என்று சிலர் கேட்கிறார்கள். அது முடிகிற விஷயமா? கூட வந்திருப்பவர்கள் யார்? இன்றைய ஆட்சியாளர்களின் செல்லப் பிள்ளைகள். எந்த நேர்மையான தொழிலிலும் ஈடுபட முடியாதவர்கள், வட்டிக்கடை மார்வாரிகள், சினிமா நடிகனாக நடிகர் வீடுகளின் சீமந்த புத்திரர்கள், கஞ்சா - சாராயம் - கள்ளக் கடத்தல் பேர்வழிகள். இந்தச் சமூக விரோதியின் கையில், பொறுக்கிகள் கையில் வீடியோ இருக்கும் வரை அது போதையாகத் தான் இருக்கும்.

> **"உலக வரை படத்தில் வேண்டுமானால் நாடுகளைப் பிரிக்க சிவப்புக் கோடுகள் இருக்கலாம். ஆனால் வீடியோ ஒளிபரப்பும் சாடிலைட்டுகளுக்கு இதெல்லாம் தெரியாது. கிடையாது...."**

இந்தப் போதையிலே எத்தனையோ கோடிப்பேர் இந்தியாவில் மட்டும் சிக்கியிருக்கிறார்கள்! மொத்தம் ஒரு லட்சம் வீடியோ கடைகள் என்று ஒரு கணக்கு சொல்கிறது — ஒரு கடை இருக்கின்ற பகுதியில் குறைந்தது 2000 பேருக்காவது அது சப்ளை செய்யும் என்றால் இந்தியாவில் குறைந்தது 20 கோடிப்பேர் வீடியோவுக்கு அடிமையாகிவிட்டார்கள் என்று பொருள்.

■ □ □

வீடியோ போதைகளுக்கு எதிராக, மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்துக்காக வீடியோவை நல்ல விஷயங்களுக்குப் பயன்படுத்தவே முடியாதா? நிச்சயமாக முடியும். விடுதலைப்புலிகள் போன்ற ஈழத் தமிழர் போராளிகள், ஏகாதிபத்திய எதிர்ப்பு விடுதலைப்போரில் உள்ள நிகரகுவா, எல்சால்வடார் போராளிகள், தேசீய இன சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும் எரித்ரியா மக்கள், பர்மிய விடுதலைப் போராட்டக்காரர்கள், ஆளும்கும்பலின் போலீஸ் வன்முறை — சித்திரவதை — தேர்தல் மோசடிகளை அம்பலப்படுத்தும் எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் ஆகியோரின் கரங்களில் வீடியோ வலுவான சாதனமாக வளர்ந்துள்ளது.

ஆந்திரத்துப் புரட்சிக்கலைஞர் கத்தாரின் இசை, நாட்டிய நிகழ்ச்சிகள் வீடியோக்களாக வந்துள்ளன. புரட்சியாளர் மீது அரசு அடக்குமுறை எல்லை மீறிக் கொண்டிருக்கும் ஆந்திரத்தில் புரட்சிப் பிரச்சாரத்துக்கு வலுவான துணையாக வீடியோ மாறியுள்ளது.

இந்தியாவில் இருப்பதுபோலவே மூன்றாம் உலக (ஏழை) நாடுகளின் ஆளும் வர்க்கங்கள் எதிர்ப்புரட்சி ஆயுதமாகப் பயன்படுத்துகின்ற அளவோடு புரட்சி அணி போட்டி போட முடியாது; ஆனால் அந்த வீடியோ போதையின் கேடுகளை எதிர்த்து, அதில் மேலும் மேலும் மக்கள் விழாதவாறு நாம் செய்யமுடியும்; செய்ய வேண்டும். இனி, இந்நோய்பற்றி எடுத்துச் சொல்லி, நோய்த் தடுப்பு முறைகளுக்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

சமூக விரோதிகளிடம் சிக்கிவிட்ட அற்புதமான அறிவியல் கருவி வீடியோவை முழுவதுமாக நாம் மீட்டு எடுக்கும் முன்பாக சமூக விரோதிகளின் கேடான நோக்கம் பற்றி மக்களிடம் எச்சரிக்கவேண்டும். இது அவசரமான வேலை, உடனடியான பணி.

**பஷீர்** ●



## போலி ஜனநாயகத் தேர்தலைப் புறக்கணிப்போம்! புதிய ஜனநாயகப் புரட்சிக்கு அணி சேர்வோம்!

**நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து மக்கள் கலை இலக்கியக் கழகமும் விவசாயிகள் விடுதலை முன்னணியும் இணைந்து தமிழகம் முழுவதும் தேர்தல் புறக்கணிப்புப் பிரச்சார இயக்கம் மேற்கொள்ளவிருக்கின்றன. தமிழகமெங்கும் பல்வேறு மாவட்டங்களிலும் 25க்கும் மேற்பட்ட பொதுக் கூட்டங்களும், சைக்கிள் பேரணிகளும், தெரு முனைக் கூட்டங்களும் நடைபெறவுள்ளன. உங்கள் வட்டாரத்தில் நடைபெறும் பிரச்சார இயக்கத்தில் பங்கு கொள்ளுங்கள்! நிதியுதவி தாருங்கள்!**

இவண்
**மக்கள் கலை இலக்கியக் கழகம்**
**விவசாயிகள் விடுதலை முன்னணி**


படிப்பகம்

www.padippakam.com



# கேட்டீரா சேதி!

## சாமியார்கள் சாம்ராச்சியம்

ஜகதீஷ் மிஸ்ரா, 15 ஆண்டுகளுக்கு முன்பு உத்திரப்பிரதேசத்தில் அரசு எழுத்தராகச் சேர்ந்தார். இப்போது மாநிலத் துணைமந்திரியின் தகுதியுடைய ஆரம்பக் கல்வி ஆலோசனை வாரியத்தின் துணைத் தலைவராக உயர்ந்து விட்டார். எப்படி. தனக்குக் கடவுள் சக்தி இருப்பதாகவும், வாளித் தண்ணீரைக் கொண்டு வருங்காலத்தைக் கணிக்க முடியும் என்றும் அரசியல் வாதிகளையும் அதிகாரிகளையும் நம்ப வைத்துத்தான்! ஜனதாவின் முன்னாள் மந்திரி ராஜ்நாராயணன், உ.பி. ஜனதா முதல்வராய் இருந்த பனாரசிதாஸ், காங்கிரஸ்-முதல்வராய் இருந்த ஸ்ரீபத் மிஸ்ரா ஆகியோரிடம் தன் மகிமையைக் காட்டிய அரசு ஊழியர் ஜகதீஷ் மிஸ்ரா சாமியார் பால்டி பாபா அதாவது வாளிபாபா ஆனார்.

இந்திரா தனது பிரதமர் மாளிகைக்கு வரவழைத்து வாளிபாபாவிடமிருந்து ஆசி பெற்று உ.பி. மேலவை உறுப்பினராகப் போட்டியிட வேட்பாளர் சீட்டும் வழங்கினார். கட்சிப் பிரமுகர்களிடம் சிறிது சலசலப்பு ஏற்படவே வாளிபாபா பின்வாங்கிக் கொண்டார். ஆனால் துணைமந்திரியின் தகுதியுடைய உ.பி உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் கழகத்தின் தலைவரானார். இப்போது தேர்தல் நெருங்கியதும் வாளிபாபாவுக்கும் அவரைப் போன்ற பல சாமியார்களுக்கும் ஏகப்பட்ட கிராக்கி ஏற்பட்டு விட்டது. கான்பூர் மாவட்டத்தில் அழகிய பெரும் ஆசிரமம் கட்டிக்கொண்டுள்ள உபேந்திரா பகதூர் சண்டெல் என்ற சாமியார் காங். தலைவர் அர்ஜூன்சிங், மற்றும் உ.பி.மந்திரகளான சிவநாதசிங்கா குஷ்வஹா, நரேந்திரசிங், கேபிநாத் தீக்ஷித் ஆகியோருக்காக "அனுஸ்தான" யாகங்கள் நடத்தினார்.

இதேபோல தரையிலேயே இறங்காமல் அம்மணமாக பரண்மீது வாழும் (காசி) மௌனி பாபா, பலராம் ஜாக்கர், தேவிலால், சரண்சிங் ஆகியோருடைய தலைமீது கால் வைத்து ஆசி வழங்கினார். இவர்கள் தவிர லக்னோவின் பூதநாத் பாபா, தேவ்ரியாவின் தேவ்ராஹா பாபா, பிருந்தாவனின் ஸ்ரீபத் பாபா, பரெய்லியின் பாஹரிபாபா, மதுராவின் ஜெய் குரு தேவ், நோய்டாவின் மகேஷ்யோகி ஆகியோர் அரசியல் பெருந்தலைவர்களுக்கு அருள்பாலித்துள்ளனர். சிறிய அரசியல் தலைவர் ஆசிவழங்க இன்னும் பல பாபாக்கள், குருக்கள், யோகிகள், மாநிலம் முழுவதும் அவதரித்துள்ளனர். இதுதான் நாடு முழுவதும் உள்ள கதை. ஆக இந்திய ஜனநாயகம் மக்களை நம்பியில்லை பங்காரு பண்டாரம், காஞ்சி காமகோடி போன்றவர்களையே நம்பியுள்ளது.

## சாராயத்துக்கெதிராக பெண்கள் போர்க்கொடி!

கள்ளச்சாராயத் தொழிலில் வியாபாரிகள் - போலீசு கூட்டுக்கு எதிராக விவசாயிகள் விடுதலை முன்னணியும் மக்கள் கலை இலக்கியக் கழகமும் தமிழகத் தழுவிய இயக்கம் நடத்தியது. தஞ்சையில் ம.க.இ.க தோழர் அருளை கள்ளச்சாராய வியாபாரி கத்தியால் குத்த முயன்றான். அதைப் பிடுங்கி போலீசிடம் ஒப்படைத்து, புகார் கொடுத்தார், அருள். சாராய வியாபாரியே தன்னை பிளேடால் கிழித்துக்கொண்டு, அருள் மீதே பொய் வழக்குப் போட்டது போலீசு.

இதே போல சாராய எதிர்ப்பு இயக்கம் அரியானா மாநிலம் முழுவதும் கிராம மக்கள் நடத்துகின்றனர். குடிப்பழக்கத்துக்கு எதிராக பிரச்சாரம் செய்வதோடு, சாராய ஏலமிடும் இடங்களில் திரண்டு நடத்த விடாமல் முறியடிக்கிறார்கள். கிராமப்புற சாராயக் கடைகளை மூடும்படி கிராமக் கட்டுப்பாடு போடுகிறார்கள். டெல்லி எல்லையில் உள்ள அரியானா கிராமங்களில் போதை அதிகமான சாராயம் காய்ச்சி விற்பதும், கிரிமினல் குற்றங்களும் ஏராளமாகப் பெருகிப்போகவே கத்லுப்பூர், கோகா, பான்கினர் ஆகிய கிராம மக்கள் பெண்கள் உட்பட நூற்றுக்கணக்கில் திரண்டு அதிகாரிகளையும் சாராய வியாபாரிகளையும் எதிர்த்துப் போராடி மூட வைத்தனர். பொறுக்கி அரசியலின் முதுகெலும்பை முறிக்கும் இந்த எழுச்சிகண்டு ஆடிப் போயுள்ளார்கள் ஓட்டுப்பொறுக்கிகளும் போலீசாரும்.

## சமூகசேவகரைக் கொல்ல போலீசு சதி!

பாசிச இந்திரா கொலையைத் தொடர்ந்து இந்திரா காங்கிரசு ரௌடிகள் - போலீசு துணையுடன் நடத்திய வெறியாட்டத்தில் 5000க்கும் மேற்பட்ட சீக்கியர்கள் படுகொலை செய்யப்பட்டனர். லட்சம் பேருக்கு மேலானவர்களுடைய வீடுகள் கொளுத்தப்பட்டு, உடமைகள் சூறையாடப்பட்டு இன்னமும் அகதிகளாக வாழ்கின்றனர். விசாரணைக் கமிஷன் நாடகமாடிய பாசிச ராஜீவ் கும்பல் காங்கிரசு கிரிமினல் குற்றவாளிகள் யாரையுமே இதுவரை தண்டிக்கவில்லை.


கணவனையும், உடமைகளையும் இழந்த விதவைகளுக்கு வீட்டுமனையோ, வேறு நிவாரணங்களோ கிடையாது; இன்னமும் நீதியும், வாழ்வும் மறுக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு நிவாரண - சட்டபூர்வ உதவிகள் செய்யும் தொண்டு நிறுவனம் ஒன்றை நிறுவி நடத்தி வருகிறார் குர்ச்சரண் சிங்பப்பர். அகதிகள் தலை நிமிர்வதைக் கண்டு பயந்துபோன காங்கிரசு - கிரிமினல் மந்திரிகள் பப்பர் மீது பாய்கின்றனர். சட்டபூர்வ அமைதிவழி சமூக சேவை செய்யும் பப்பரை சீக்கியத் தீவிரவாதிகளின் பட்டியலில் சேர்த்துள்ளனர். போலீஸ் தேடும் கிரிமினல் குற்றவாளிகளைப் போல போலீசு நிலையங்கள், கோர்ட்டுகள் போன்ற பொது இடங்களில் அவரது புகைப்படங்களை மாட்டிவைத்துள்ளது. மனித உரிமை அமைப்புகள் தலையிட்டு கண்டித்தபோது ''போலீசின் அன்றாட, வழமையான நடவடிக்கைதான்; ஆவணப்பதிவுக்காகச் செய்துள்ளோம்'' என்று போலீசு பதில் கூறுகிறது. ஆம்! கிரிமினல் குற்றவாளிகளோடு கூட்டுச் சேர்ந்து கொண்டு சமூக நீதிக்குப் போராடுபவர்களை வேட்டையாடுவதற்கான பட்டியலில் சேர்ப்பது போலீசின் அன்றாட, வழமையான நடவடிக்கைதான்!





படிப்பகம்

www.padippakam.com




## குப்பைமேடாகிறது ஜனாதிபதி மாளிகை

புதுடில்லி - அரசுத் தலைவர் மாளிகையியே ஒரு பெரும்பிரச்சினையை சந்திக்கிறதாம். பல்வேறு இயக்கத்தினரும் கட்சிகளும் வெவ்வேறு கோரிக்கைகளுக்காக அனுப்பும் தந்திகள், கடிதங்கள், கையெழுத்து இயக்கங்கள் மூலம் வரும் லாரிலாரியான தாள்களை என்ன செய்வது என்பது தான் விவகாரம். கடிதங்களும், தந்திகளும் அனுப்பும்படி உடன்பிறப்புகளுக்கு அடிக்கடி அறைகூவல் விடுக்கிறார் கருணாநிதி. வேலைக்கான உரிமையை அடிப்படை உரிமையாக அரசியல் நிர்ணயச் சட்டத்தில் சேர்க்கும்படி 50 லட்சம் பேரிடம் கையெழுத்துக்கள் வாங்கி அரசு தலைவரிடம் கொடுத்துள்ளது ஜனதா தளம். ஆந்திரா என்.டி.ராமாராவ் அரசை நீக்கிவிடும்படி ஒரு கோடிக் கையெழுத்துக்கள் வாங்கி அனுப்பியுள்ள ஆந்திர காங்கிரசு. மக்களுக்கு எதையும் செய்யவில்லையானாலும் குப்பைக் காகிதங்களை மலையாகக் குவிக்கிறார்கள். மக்கள் விரோதிகளின் மாளிகைகளைக் கொளுத்த வசதியாகத் தானிருக்கும்!

## சீரழிவுக்கு சட்டப் பாதுகாப்பு!

ஐரோப்பா - டென்மார்க்கின் தலைநகர் கோபன்ஹேகன். கடந்த அக்டோபரில் அங்கே ஓர் ஆடம்பரமான, ஆனால் வித்தியாசமான திருமணம் நடந்தது. நாடாளுமன்ற உறுப்பினர்கள், நண்பர்கள், 100 புகைப்படக்காரர்கள் என 1000 பேர் குழுமியிருந்தனர். மதுப்புட்டிகள் பொங்கி வழிந்தன. ''மணமகன்'' 42 வயது பாதிரி திரு.ஐவான். ''மணமகள்'' மனோதத்துவ நிபுணர் திரு.ஓவே. முந்திய திருமணத்தால் பிறந்த 10 வயது மகளும், 7 வயது மகனும் தனது தந்தை ஓவே ஒரு பாதிரியை மறுமணம் செய்து கொள்வதைக் கண்டு களித்தனர். நகர மேயர் அவ்விரு ஆண்களுக்கும் ஓரின மணமுடித்து சட்டப்படி பதிவு செய்து கொண்டார்.

ஓரினத் திருமணங்கள் செல்லுபடியாகும் என்று டென்மார்க் அரசு சட்டமியற்றியதைத் தொடர்ந்து இப்படிக் கடந்த அக்டோபரில் மட்டும் 11 திருமணங்கள் முடிந்தன. அவற்றை மத ஆச்சாரப்படியான மணங்களாக கிறித்துவத் திருச்சபைகள் ஏற்க வேண்டும் என்று டென்மார்க்கில் ஓரினக் குடும்பம் நடத்தும் ''10000 தம்பதியினர்'' கோரிவருகின்றனர். ஏகாதிபத்திய நாகரிகம் எவ்வளவு விபரீதமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது என்பதற்கான நோய்க்குறி!

## அரிவாள் - சுத்தியல் முன்னே அரை நிர்வாணம்!

ருஷ்ய போலிக்கம்யூனிஸ்டுகள் கோர்பியின் தலைமையில் நடத்திவரும் பிரெஸ்ட்ரோய்கா - கிளாஸ் நாஸ்ட் புரட்சி பல விபரீதங்களைக் கொண்டு வருகின்றன. மக்கள் போராட்டங்களை ஒடுக்குவதற்கு இந்தியாவில் இருந்து போலீசுப்பயிற்சியும் ஆயுதங்களும் இறக்குமதியாகின்றன. மக்களை மதவெறி போதையில் தள்ளுவதற்கு அரே ராமா அரே கிருஷ்ணாவும், மகரிஷி மகேஷ் யோகியும் இறக்குமதியாகின்றன. ஆபாச வக்கிர போதையில் தள்ள அமெரிக்காவில் இருந்து ''பிளேபாய்'', ''ஓசிபிசா'' மற்றும் ''போனியெம்''கள் இறக்குமதியாகின்றன.



போதாதென்று இங்கிலாந்து ராணி எலிசபெத்தின் ஒன்றுவிட்ட சகோதரன் லிச்ஃபீல்டு பிரபுவை அழைத்து ஒரு காலெண்டர் தயாரிக்கச் சொல்லியுள்ளார்கள். ஒரு காலெண்டர் விலை ரூ.350. அதன் சிறப்பு இரு இங்கிலாந்து, இரு ருஷ்யப் பெண்கள், ருஷ்யாவின் வரலாற்றுப் புகழ்மிக்க நினைவுச்சின்னங்களின் முன்பு நிர்வாண, அரை நிர்வாண நிலையில் உள்ள படங்கள் இருக்கும். இங்கிலாந்து வானொலி இதுபற்றி ஒரு செய்திச் சினிமாவும் ஒளிபரப்பியது. இங்கே ருஷ்யாவின் பாட்டாளி வர்க்க ஆட்சியைக் குறித்த கதிர் - அரிவாள் - சுத்தியல் சின்னத்தின் முன்பாக ஒரு அரைநிர்வாண பெண் நிற்பதாக காலெண்டர் படம். இதையும் கூட போலிக் கம்யூனிஸ்டுகள் நியாயப்படுத்துவார்கள்!

## சுற்றுச் சூழலைச் சீரழிக்கும் உலக வங்கி!

''உலக வங்கியும் சர்வதேச நிதி நிறுவனமும் மக்கள் விரோத, உயிரின வாழ்க்கைச்சூழல் விரோத அமைப்புகளாக உள்ளன;

உடனடி திடீர் லாப வேட்டைக்கா நீண்டகால வளர்ச்சித் தேவைகளை அ பலியிடுகின்றன'' என்று 32 நாடுகளின் றுச்சூழல் பாதுகாப்பில் அக்கறையுடை இயக்கத்தவர்கள் விமர்சன அறிக்க வெளியிட்டுள்ளனர்.

வாஷிங்டனில் கடந்த செப்டம்பர் மாத உலக வங்கியும் ஐ.எம்.எஃபும் கூட்டிய வதேச சுற்றுச்சூழல் மாநாட்டுக்கு எதிர மாற்று மாநாட்டில் கூடி இவ்வாறு அவர்க சாடினர்.

சர்வதேச வறுமை-பட்டினி, சுற்றுச் ழல் சீரழிவு, மனித உரிமை மீறல்கள், சர் தேசக் கடன்சுமை ஆகியவற்றுக்கும் உ வங்கி மற்றும் ஐ.எம்.எஃப்பின் கட்டுமா சீரமைப்புக் கொள்கைகளுக்கும் இடை நெருங்கிய தொடர்பு உள்ளன. அவை வ ரும் நாடுகளின் தேசிய சுயசார்பு, சுய ணய உரிமை, சுயாதிபத்தியம் ஆகியவ றைச் சிதைத்து அந்நாடுகள் எதிர்கொ டுள்ள பொருளாதார சுற்றுச்சூழல் நெரு டிகளை சமாளிக்கும் திறனற்றதாக மாற் விடுகின்றன என்று அவர்கள் வலியுறுத் னார்கள்.

உலக வங்கியும் ஐ.எம்.எஃபும் சுற் சூழல் போன்ற வருடாந்திர மாநாடுகள வெறும் கண்துடைப்புக்காகவே நடத்துகி றன. ஏனெனில் அவற்றின் கொள்கை னால் தான் இந்தியா, பிரேசில், இந்தோ சியா, ஜெயர் போன்ற நாடுகளில் சுற்றுச் ழல் நாசமடைந்து வருகின்றது. நர்மத அணை போன்ற திட்டங்கள் பெரும் செ வந்தர்களுக்காகவே தீட்டப்படுகின்ற வறட்சி பாதிக்கும் மக்களுக்காக அல் என்று கூறும் சுற்றுச்சூழல் இயக்கத்தவர்க வளரும் நாடுகளில் இருந்த கடனைத் தி பிச் செலுத்தும் வகையில் மட்டும் 50,00 கோடி ரூபாயை மேற்கு நாடுகள் அள்ளி கொண்டு போவதைச் சுட்டிக்காட்டினர்.

## மனுவுக்கு சிலை சாதியத்துக்கு வழிபாடு!

தீண்டாமையை எதிர்த்து பெரியா ஆலயப் பிரவேசப் போராட்டம் நடத்தி இடம் கேரள மாநிலம், கோட்டயம் மாவ டத்திலுள்ள வைக்கம். ஆனால் சாதிய கொடுமைகள் இன்னமும் ஒழிந்தபா டில்லை. இதே வைக்கத்தில் தான் காந்தியு தீண்டாமை எதிர்ப்பு போராட்ட நாடகமா னார்; அவரது சீடர்கள், சாதிய-இந்தும வேதபாடமாகிய மனுஸ்மிருதியை உ வாக்கிய மனுவுக்கு டெல்லியில் சிலை வைக்க ஏற்பாடு செய்கிறார்கள்; கோர் தடையுத்திரவினால் தான் நிறுத்தப்பட்டு ளது.

கடந்த மாதம் அதே வைக்கம் கோ லில்தான் மனுஸ்மிருதியைக் கொளுத் மீண்டும் தீண்டாமை எதிர்ப்புப் போரா டம் நடத்தினார்கள் மார்க்சிய-லெனினிய கட்சியினரும், தலித் முன்னணியினரு அந்தத் தீ பரவ வேண்டும்; மதவெ மடமை; சாதியம் அழிய வேண்டும்.

www.padippakam.com



# பயம் பயம்.....

ஆபீஸ் கடிகாரம் ஆறடித்து ஓய்ந்தது. ராஜன் ஏதோ எழுதிக் கொண்டிருந்தவர் முதுகை நிமிர்த்திக் கொண்டு கைக்கடிகா

படிப்பகம்

www.padippakam.com

ருக்கு நேரம் போனதே தெரியவில்லை. ஒன்றா, இரண்டா, வேலைக்குச் சேர்ந்து 35 வருடங்களாக அவர் பழக்கம் இதுதான். வீட்டில் பாதி ஆள், ஆபீசில் பாதி ஆள் என்று நண்பர்கள் அவரைக் கேலி செய்வார்கள். எத்தனையோ மேலதிகாரிகள் வந்தார்கள், போனார்கள். ஒருவராவது ராஜன் மேல் குறை கண்டதுண்டா என்றால் கிடையாது. தரத்திலும் சரி, அளவிலும் சரி ராஜனுக்கு நிகர் ராஜன் தான் என்று புகழாத அதிகாரிகள் இல்லை. இதற்கெல்லாம் அவர் வெளிப்படையாகப் பெருமைப்பட்டுக் கொண்டது கூடக் கிடையாது. எல்லாம் அவரது மனசுக்குள் தான். இதையெல்லாம் நினைத்துப் பார்க்கும் போது அவரது மீசைக் கடியிலிருந்து ஒரு புன்முறுவல் எட்டிப் பார்க்கும்; அவ்வளவுதான்.



— வங்காளி மூலம்
சுரப்ரியா முகர்ஜி.
ஆங்கிலத்திலிருந்து தமிழில் - வீ.

இன்னும் ஒரு சில மாதங்கள் தான். ராஜன் ஓய்வுபெறும் நாள் நெருங்கிவிட்டது. காலம் செல்லச் செல்ல ஆபீசில்தான் எத்தனை மாற்றங்கள்! எல்லாம் நாசம் — ராஜன் அப்படித்தான் நினைத்தார். எவ்வளவு ஒழுங்கீனம்! திறமையும் கடுமையான உழைப்பும் கேலிக்குள்ளாகிறது! ஒரு தப்பு செய்துவிட்டால் உடம்பில் ஒரு பயம், பதட்டம் இருக்கவேண்டுமே — ஊஹும் "அதில்ல சார், அப்படி சார், இப்படி சார்" என்று நியாயப்படுத்த எத்தனை சால்ஜாப்புகள்! ஆம்பிளையும் பொம்பளையுமாக இளசுகள் ராச்சியம்தானே இப்போது ஆபீசில்! ஏதாவது சட்டம் உண்டா, திட்டம் உண்டா, மேலதிகாரிகளிடம் மட்டுமரியாதை உண்டா? ம்ஹூம்...

கொஞ்சநாளைக்கு மூச்சைப் பிடித்துக் கொண்டு வாதாடிப் பார்த்தார் ராஜன். ஒன்றும் மசியவில்லை. எக்கேடும் கெட்டுப் போங்கள் என்று ஒதுங்கிவிட்டார். பழைய ஆட்களில் மிஞ்சியிருப்பது பியூன் அசரப் அலி மட்டும்தான். சில நாட்கள் ஆபீஸ் முடிந்து இரண்டு பேரும் நேரம் போவது தெரியாமல் பழையநாள் கதைகளை சுகமாக அசைபோட்டுக் கொண்டிருப்பார்கள்.

சாதாரணமாக இரவு மணி 7 அடித்தால் தான் ராஜன் ஆபீசைவிட்டு கிளம்புவார். இன்று எட்டும் ஆகிவிட்டது. சீட்டிலேயே குனிந்து எழுதிக் கொண்டிருந்ததில் முதுகுத் தண்டும் கால்மூட்டும் பிடித்துக் கொண்டு ஜிவ்வென்று இழுத்தது. எழுந்து நின்று முதுகை நீவி விட்டுக் கொண்டார். முழங்கால் மூட்டைப் பிடித்து விட்டுக் கொண்டார். விரல்களைச் சொடுக்கிக் கொண்டார். இடதுகாலில் மூன்று ஆணிகள். வரவர உயிர் போகிறது. மேஜை, இழுவறைகளை அறைந்து பூட்டினார்; மின்விசிறியை நிறுத்தினார்; விளக்குகளை அணைத்தார். அறைக்கதவைத் திறந்து கொண்டே குரல் கொடுத்தார். "ஏ.. அலி.. எங்கப்பா போனே? காலியாயிருந்த ஆபீசு முழுவதும் ராஜனின் குரல் எதிரொலித்தது. சாவியைக் கொடுத்து விட்டால் போய்க் கொண்டேயிருக்கலாம். வழக்கத்துக்கு மாறாக அசரப் அலியைத் தான் காணோம்.

ஆபீஸ் வாசல் நாற்காலியை விட்டு அலி நகர மாட்டான். ராஜன் குரல் கொடுத்த அடுத்த நிமிடமே வந்து நிற்பான். இன்று அந்த நாற்காலியில் — 'யாருப்பா அது?' ராஜன் குரல் கொடுத்தார். "நான்தான்" என்று குரல் வந்தது. யாரது ஷாபியா. ஆமாம் ஷாபிதான். அசரப் அலியின் மகன். உருப்படாத பயல். இவனைப் பற்றி அசரப் அலியே பலமுறை ராஜனிடம் சொல்லி குறைபட்டுக் கொண்டிருக்கிறான்.

அசரப் ஆபீசிலேயேதான் தங்கியிருந்தான். அவனும் ஆபீஸ் கூட்டும் லாலியாவும் சேர்ந்து தான் வாட்ச்மேன் டூட்டி பார்ப்பார்கள். ஷாபி ஊர்சுற்றிப் பயல். ஒரு இடத்தில் தொடர்ந்து ஒழுங்காக வேலை செய்ய மாட்டான். அவன் அப்பன் அசரப்புக்கே அவனைப் பிடிக்காது. எப்போதாவது அப்பனை பார்க்க வந்தால் இங்கே வந்து தங்குவான். இப்போது இவன் ஏன் இங்கே வந்து உட்கார்ந்திருக்கிறான்? அசரப் எங்கே போனான்? லாலியா எங்கே?

வாயில் பீடியுடன் ஷாபி சோம்பேறித்தனமாக எழுந்து வந்து கதவைத் திறந்தான். ராஜன் லிஃப்டுக்கருகில் போய் மணியை அழுத்தினார். பதில் இல்லை. வராந்தா விளக்கு வெளிச்சத்தில் கைக்கடிகாரத்தைப் பார்த்தார். 8.15. லிஃப்டுக்காரன் சாப்பிடப் போயிருப்பானோ? இடப்பக்கம் திரும்பி மெள்ள படிக்கட்டுகளில் இறங்கத் தொடங்கினார். வெளியே படபடவென்று சத்தம். பட்டாசு வெடியாயிருக்கும். ஏதாவது பண்டிகையாக இருக்குமோ?

இன்னின்ன விஷயத்துக்காக இன்னின்ன பண்டிகை என்ற விவரங்களை அவர் ஞாபகம் வைத்துக் கொள்வது கிடையாது. அது சள்ளையான வேலை என்று நினைத்தார். சொல்லப் போனால் அவருக்குப் பண்டிகைகளே பிடிக்காது. பண்டிகை வந்துவிட்டால் தெருவில் ஜே ஜே என்று ஜனங்கள் போகும் — கூட்டத்தில் இடிபட வேண்டும். அன்றாட வேலைகளுக்கெல்லாம் அது தடங்கல். பண்டிகை பற்றிய சிந்தனை ஏற்படுத்திய எரிச்சலுடன் ஆபீஸ் கட்டிடத்தின் முன்வாசலுக்கு வந்தவருக்கு அதிர்ச்சி காத்திருந்தது. வாயிலில் இரும்புக் கதவு உட்பக்கமாகப் பூட்டியிருந்தது. வாட்ச்மேனைக் காணோம். ராஜன் மறுபடியும் கத்தினார். எங்கிருந்தோ வந்த வாட்ச்மேன் அவரை விசித்திரமாகப் பார்த்தான். அவரது கோபம் எல்லை மீறியது.

"கதவத் தொறய்யா. எங்கேய்யா போய்த் தொலைஞ்சே, இப்பவே லேட். எப்ப வீட்டுக்குப் போறது?"

"என்னங்கய்யா சொல்றீங்க? வெளியே போவணுமா? வெளியே பெரிய மதக்கலவரமுங்க; சாயந்தரமே புடிச்சி நடக்குது"

பிரீத்தம்சிங், ஆறடி உயரம்; கட்டுமஸ்தான உடம்பு. ராஜனை அவன் அவநம்பிக்கையோடு பார்த்தான். ராஜனுக்கு நினைவில் ஏதோ இடறியது — மாலை 5 மணி இருக்கும் — கிளார்க் ஒருவர் அறைக்குள் எட்டிப்பார்த்து சீக்கிரம் போகவேண்டும் என்று ஏதோ காரணம் சொன்னது மாதிரி இருந்தது. அவர் பெரிதாகக் காதில் போட்டுக் கொள்ளவில்லை.

"வீட்டுக்குப் போவணும்யா; நான் போகலேன்னா என்னவோ ஏதோன்னு தவிச்சுப் போயிடுவாங்க. என்ன நடந்தாலும் பாக்கலாம். கதவைத் தொற சொல்றேன்". ராஜன் திரும்புவதாக இல்லை.

பிரீத்தம்சிங் முதலில் மறுத்தான். அப்புறம் அரைமனதோடு கதவைத் திறந்தான். ராஜன் வெளியே வந்தார். கும்மிருட்டா? புகையா? நெருப்பா? குண்டொன்று திடீரென்று வெடித்தது. ஒருகணம் ராஜன் அங்கேயே நின்றார். ரோடின் வலப்புறத்தில் தான் குண்டு வெடித்து எரிந்தது. இடப்பக்

படிப்பகம்

www.padippakam.com

கம் திரும்பினார். ஒரு கார் எரிந்து கொண்டிருந்தது. தீப்பிழம்பும், கரும்புகையும் கலந்து உருண்டு மேலெழுந்து கொண்டிருந்தது.

அருகிலுள்ள பஸ் ஸ்டாப்புக்கு எப்படிப் பத்திரமாகப் போகலாம் என்று ராஜன் யோசித்துப் பார்த்தார். திடீரென்று ஒரு இரைச்சல் — எதிர்சந்திலிருந்து ஒரு கும்பல் ஓடிவந்தது. அவர்கள் கைகளில் நீளமான கத்திகள், குழல் துப்பாக்கிகள், இன்னும் என்னென்னவோ 30 பேர் கூச்சல் போட்டுக் கொண்டு ஓடிவந்து கொண்டிருந்தனர்.

ராஜன் திரும்பிப் பார்த்தார். அலுவலக கேட்டை உட்பக்கம் தாளிட்டு பூட்டை இழுத்துக் கொண்டிருந்தான் பிரீத்தம் சிங். வெறி பிடித்த கும்பல் ஓடிவரும் காலடிச் சத்தம் ராஜனுக்கு தெளிவாகவே கேட்டது. கணம் தப்பினாலும் மரணம்தான். ராஜன் மூச்சிறைக்க திரும்பி ஓடினார். ''சர்தார்ஜி... கதவைத் திறப்பா. தயவுசெஞ்சி கதவைத் தொறந்துவிடப்பா'' ராஜன் நடுங்கும் குரலில் கெஞ்சினார்.

கண்மூடித் திறப்பதற்குள் பிரீத்தம்சிங் கதவைத் திறந்தான். அந்தச் சில நொடிகளே யுகங்களாகத் தோன்றியது ராஜனுக்கு. கேட்டுக்கு உள்ளே எரிந்து கொண்டிருந்த ஒரே விளக்கையும் உடனே அணைத்தான் பிரீதம் சிங். கும்பல் ஏதோ கத்தியபடியே அந்தக் கட்டிடத்தின் இருண்ட வாயிலைக் கடந்து ஓடியது.

''ம்... *சீக்கிரம்* ஆபீசுக்குள்ளாற போங்க.'' பிரீத்தம் சிங்கின் கரகரத்த குரல் கட்டளை போட்டது.

ராஜன் மாடிப்படியை நோக்கி ஓடினார். அவருக்கு மூச்சிரைத்தது. படியேறி ஆபீஸுக்குள் போவதற்குள் அவர் உடம்பு பூராவும் உதற ஆரம்பித்துவிட்டது. ஆபீஸ் வாசலில் கிடந்த ஸ்டூலில் ஷபி இன்னமும் அப்படியே உட்கார்ந்து கொண்டிருந்தான். ராஜனின் தலையைக் கண்டதும் ஒரு நமட்டுச் சிரிப்போடு கதவைத் திறந்தான்.

ராஜன் தன் அறைக்குப் போனார்; மின் விசிறியைப் போட்டார்; நாற்காலியில் பொத்தென்று சரிந்தார். வியர்வை; வியர்வை. உடம்பெங்கும் வியர்வை பெருகி ஓடியது. கைக்குட்டையால் நெற்றியைத் துடைத்துக் கொண்டார். படபடப்பு அடங்கி ஒரு நிதானத்துக்கு வரும்போது... மின்னல் போல ஒரு சிந்தனை வெட்டியது.

'அபாயம் இன்னும் நீங்கிவிடவில்லை! ஷபி ஒரு முஸ்லீம்!' ராஜனை அவனுக்குத் துளிக்கூடப் பிடிக்காது. அவன் எந்த நேரத்திலும் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். அவன் அப்பன் அலியால் கூடத் தடுக்க முடியாது. லாலியா - அவன் தோட்டி. முஸ்லீம்கள் வீட்டில் சர்வசாதாரணமாகப் பழகுவான், சாப்பிடுவான். அதனால் அவனை விட்டுவிடுவார்கள். அவர்கள் ஒருவேளை தன்னைக் கொல்ல வந்தால் நிச்சயம் லாலியா தடுக்கமாட்டான்.

பிரீத்தம் சிங்கிடமும் உதவி கேட்கமுடியாது. பஞ்சாபில் எங்கே பார்த்தாலும் இந்துக்களைக் கொன்று போடுகிறார்கள் *சீக்கி*யர்கள். பேப்பரில் தினசரி செய்தி வருகிறதே. பிரீத்தம்சிங் *சீக்கி*யன். அவனும் காப்பாற்ற மாட்டான். பயம் மெள்ள ராஜனின் நெஞ்சைக் கவ்விக் கொண்டது. வேகமாக எழுந்து போய் அறைக்கதவை உட்புறமாக இழுத்துத் தாள் போட்டார். நெஞ்சே வெடித்துவிடுவது போல இதயம் பயத்தில் அடித்துக் கொண்டது. உடல் முழுவதும் குப்பென்று வியர்த்தது. கொஞ்சநேரத்துக்கெல்லாம் விளக்குகளும் அணைந்தன.

இருட்டு ராஜனின் பயத்தை இரட்டிப்பாக்கியது. ஜன்னல் வழியே அறைக்குள் கசிந்த வெளிச்சம் அவரது மரணபயத்தை அதிகப்படுத்தியது. அரையிருட்டில் மேஜையைத் தடவியபடியே சென்று உட்காரப் போனபோது அவரது அறைக்கதவு தடதடவென்று தட்டப்பட்டது.

''கடவுளே... என் கடைசி நேரம் வந்துவிட்டதா?... சாவதற்கு முன்னால் கடைசி முறையாகப் பெண்டாட்டி பிள்ளைகளைக்கூடப் பார்க்க முடியவில்லையே...'' ராஜன் மனதுக்குள் அழுதார். இஷ்ட தெய்வங்களையெல்லாம் ஒருமுறை அழைத்தார். கதவு மறுபடியும் இன்னும் பலமாகத் தட்டப்பட்டது. யாரோ பேசுவது போலவும் குரல் கேட்டது. ஏதோ தீவட்டி எரிவது போலக் கூடத் தோன்றியது. ஒருவேளை தன் அறையைக் கொளுத்துகிறார்களோ?

''ஐயோ... யாராவது காப்பாத்துங்களேன்... கத்த நினைத்தார். முடியவில்லை. நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக்கொண்டது. அரையிருட்டில் மேசை மீது இருந்த டைப்ரைட்டர் கண்ணில் பட்டது. ''என்னைக் காப்பாற்றிக் கொள்ள ஒரே ஆயுதம் இந்த டைப்மிஷின் தான்'' - ராஜன் அதைத் தூக்க முயற்சித்தார். அதுவோ அசைய மறுத்தது. நெஞ்சு பளீரென்று வலித்தது. ஜன்னல் கண்ணாடி வழியே சாலையைப் பார்த்தார். ''50 அடி உயரத்திலிருந்து குதித்தால்... தற்கொலை தான்.''

பளிச்சென்று விளக்குகள் எரிந்தன. ராஜனுக்குச் சிறிது சிறிதாகத் தைரியம் திரும்பியது. நடப்பது நடக்கட்டும். எதிரிகளைச் சந்திக்க வேண்டியது தான். இதே போல இடித்தார்களானால் கதவு நொறுங்கிவிடும். அவர்களை எதிர்த்து நிற்கும் அளவுக்குத் தனக்கு பலமும் இல்லை. வயதாகிவிட்டது. இன்றைக்கு இவர்கள் கையால் சாக வேண்டும் என்று விதி இருந்தால் அதை யாரால் தடுக்க முடியும்?

விரல்கள் நடுங்கக் கதவைத் திறந்தார். அதிர்ந்து போய் நின்றார்.

எதிரே - அசரப் அலி நின்று கொண்டிருந்தான். அவன் வலது கையில் சுத்தமாக மடிக்கப்பட்ட லுங்கி; இடது கையில் ஒரு தட்டில் அவித்த முட்டை; இரண்டு மூன்று வறுத்த ரொட்டித் துண்டுகள். பின்னால் லாலியா - கையில் ஒரு பாயும், எரியும் மெழுகுவர்த்தியும். பிரீதம் சிங்கின் கையில் சப்பாத்தி.

''என்னாச்சுங்கய்யா, உடம்பு சுகமில்லையா? எவ்வளவு நேரமா கூப்பிட்டுகிட்டிருக்கோம். இந்த உருப்படாதபய ஷபியை வெச்சிட்டுப் போனது என் தப்பு. வெளியே போகாதீங்கன்னு ஒரு வார்த்தை உங்ககிட்ட சொன்னானா பாருங்க, உருப்படாத பய. கீழே, சமையல் ரூம்ல ஒரு சின்ன ரிப்பேர் வேலை நானும் லாலியாவும் பாத்துகிட்டிருந்தோம். நேரம் போனதே தெரியல. நீங்க வெளியே போயிட்டு திரும்பி வந்துட்டீங்கன்னு ஷபிதான் வந்து சொன்னான். அந்த அளவுக்காவது புத்தி இருந்திச்சே! நான்... நான் கொஞ்சம் சாப்பாடு தயார் பண்ண போனேன் - உங்களுக்குத் தான். ராத்திரி தங்கணுமே, அதான் உங்களுக்கு ஒரு லுங்கியும் கொண்டாந்தேன், இன்னக்கிதான் சலவைக்கு போய் வந்தது. என்னங்கய்யா யோசிக்கிறீங்க. இந்தப் பாயில படுத்துக்கங்க. மூட்டைப்பூச்சி ஒண்ணும் கிடையாது. தட்டி சுத்தம் பண்ணிட்டோம்..... என்னங்கய்யா பதிலே சொல்லாம இருக்கீங்களே! ஒரேயடியா வேர்த்து ஊத்துதே, ஏதாச்சும் காய்ச்சலுங்களா?

அசரப் அலியின் பேச்சு பதட்டமாகவும், இதமாகவும் இருந்தது.

''இல்ல அசரப்... அதெல்லாம் ஒண்ணுமில்ல. நீ இவ்வளவு கஷ்டப்பட்டிருக்க வேணாம், இப்படியே இந்த நாற்காலியில சாஞ்சு படுத்து ஒரு ராத்திரிய ஓட்டிடமாட்டேனா? சரி.. அது கிடக்கட்டும். நல்ல வேலைதான் செஞ்சிருக்கிற. ரொம்ப நன்றிப்பா உனக்கு. ராஜன் புன்முறுவலோடு சொன்னார்.

''ஐயா, ஏதோ என்னால முடிஞ்சத கொண்டாந்தேன். நீங்க ராத்திரி இங்க தங்கணுமேன்னு தான் கொண்டாந்தேன்... ஒரு வேளை... நான் சமைச்ச சாப்பாட்ட.... நீங்க சாப்பிடுவீங்களோன்னு...'' பிரீதம் சிங்கின் கரகரப்பான குரல் இதமாகவும், தயக்கத்துடனும் ஒலித்தது.

''சர்தார்ஜி ஒரு சப்பாத்தி எடுத்துக்கிறேன், அந்த முட்டையும் வறுத்த ரொட்டியும் எடுத்துக்கறேன். மூணு பேருக்குமே ரொம்ப நன்றிப்பா'' பிரீதம் சிங்கின் பரந்த தோளைத் தட்டிக் கொடுத்தார் ராஜன்.

''லாலியா கொஞ்சம் தண்ணி கொண்டு வாப்பா'' லாலியாவுக்குத் தன் காதுகளையே நம்பமுடியவில்லை. அசரப் அலியும், பிரீதம் சிங்கும் கூட ஆச்சரியமாகப் பார்த்தனர். புன்னகை மாறாத முகத்துடன் மீண்டும் லாலியாவைத் தண்ணீர் கொண்டுவரச் சொன்னார் ராஜன்.

''அது சரிங்கய்யா, எதுக்கு ரூம் கதவைத் தாழ்ப்பாள் போட்டுகிட்டீங்க?'' பிரீதம்சிங் கேட்டான்.

''அதுவந்து... அதுவந்து... ஒண்ணுமில்லப்பா'' ராஜனின் தலை வெட்கத்தால் தொங்கியது.

அசரப் அலி புரிந்து கொண்டு தலையாட்டினான். ''காலம் ரொம்ப கெட்டுப் போச்சுங்கய்யா. அண்ணன், தம்பிக்கு துரோகம் பண்றான். உயிருக்குயிரா பழகின சிநேகிதங்களே திடீர்னு ஒருத்தனை ஒருத்தன் நம்பமாட்டேங்குறான். எல்லார் மனசிலும் பயம்.. பயம்... பயம்...'' பெருமூச்சுடன் சொன்னான்.

ராஜன் நாற்காலியில் மெதுவாக உட்கார்ந்தார். இனி அவர் எதற்கும் பயப்பட வேண்டியதில்லை. பிரீதம் சிங், அசரப் அலி போன்றவர்கள் இருக்கும் வரை.



படிப்பகம்

www.padippakam.com



# ஆயுதபூசை யாருடைய திருநாள்?

கம்ப்யூட்டருக்குப் பொட்டு, கல்லாப் பெட்டிக்கும் பொட்டு; டீக்கடை பாய்லருக்குப் பொட்டு, ஹெவி பாய்லருக்கும் பொட்டு; வில்வண்டிக்குப் பொட்டு, விமானத்துக்கும் பொட்டு, புரிந்திருக்குமே ஆயுத பூசைதான்.

அவல், பொறி, கடலை, வாழைப்பழம், வெல்லச் சர்க்கரையுடன் ஆயுதபூசை பட்டியலில் தொழிலாளியும் சேர்ந்து விட்டதனால் தான் இதை எழுத வேண்டியிருக்கிறது. விவசாயிக்குப் பொங்கலைப் போல, தொழிலாளிக்கு ஆயுதபூசையா?

அப்படியானானல் மே தினம்? விண்ணில் உயர்ந்து பறக்கும் செங்கொடி, முதலாளிகளைக் கிலி கொள்ள வைக்கும் போர்க்குணம், அடிவயிற்றிலிருந்து வெடித்துக் கிளம்பும் முழக்கங்கள், நெருப்புத் துண்டுகளாய் சொலிக்கும் கண்கள், கண்ணுக்கு எட்டியவரை கடல் போல விரிந்து அலைபோல ஆர்த்தெழும் அணிவகுப்பு - மே தினம். யதார்த்தம் இல்லையென்றாலும் எதிர்பார்ப்பு! ஏன் ஈடேறவில்லை இந்த எதிர்பார்ப்பு?

ஒவ்வொருவராகத் தேடிச்சென்று காகிதத்தில் கையெழுத்து வாங்கும் அக்கறை, பின்னர் கையெழுத்துப் போட்டவர்களைக் காசு போட வைப்பதில் உள்ள திறமை - மே தினத்தில் இல்லையே. பூசை போட்டு பூசணிக்காய் உடைப்பதில் இருக்கும் நம்பிக்கை ஊர்வலத்தில் இல்லையே. பொறி, கடலை விநியோகத்தில் இருக்கும் பொறுப்புணர்வு பிரசுர விநியோகத்தில் இல்லையே. தோரணம் கட்டுவதில் உள்ள ஆர்வம் கொடி கட்டுவதில் இல்லையே. ஏன்?

இதுதான் நமது முதுகில் ஏற்றப்பட்டிருக்கும் ஆயிரமாண்டு கலாச்சாரச் சுமையோ!

ஒரு கொல்லரோ, தச்சரோ, வண்டிக்காரரோ பயபக்தியுடன் ஆயுதபூசை செய்வதில் ஆச்சரியப்பட ஏதுமில்லை. கொல்லனுக்குத் துருத்திதான் மூச்சு. தச்சனுக்கு உளி தான் கைவிரல். வண்டிக்காரருக்குச் சக்கரம் தான் வாழ்க்கை. 'செய்யும் தொழிலே தெய்வம்' என்ற பழமொழி இவர்களுக்கு வேண்டுமானால் பொருந்தும். ஏனென்றால் இவர்களது கருவிகள் இவர்களது உடலின் உறுப்புகள்.

ஆனால் தொழிலாளிக்கு? சங்கு ஊதினால் உள்ளே போக வேண்டும். அடுத்த சங்கிற்கு வெளியே போக வேண்டும். ஆலையின் தூசு எதுவும் சட்டையில் ஒட்டியிருந்தால் கூட அதைத் தட்டிப்பார்த்து, தடவிப் பார்த்து வெறும் ஆளாக வெளியே அனுப்புவதற்கென்றே வாயிற்காவலர்கள்.

ஒவ்வொரு நொடியிலும், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் 'இது என்னுடைய ஆலை' 'இது என்னுடைய எந்திரம்' என்று மண்டையில் அடிக்காத குறையாக முதலாளி நினைவுபடுத்திக் கொண்டேயிருக்கும் போது கூட,

தலைவாரி, பூச்சூடி, பொட்டிட்டு பிள்ளையை அழகு பார்கும் தாயைப்போல - எந்திரத்திற்கு எண்ணெய் முழுக்காட்டி, பொட்டு வைத்து, சாம்பிராணிப் புகை போட்டு அழகு பார்க்கும் 'பாசம்' தொழிலாளிக்கு எப்படி வந்தது? பாசமா, பெருந்தன்மையா, மூடநம்பிக்கையா? வெறும் மூடநம்பிக்கை மட்டும்தானா?

துருத்தியும் சம்மட்டியும் கொல்லனுக்கு சொந்தம்; வெல்டருக்கு? ''உனக்குச் சொந்தமில்லாததை உடைத்தெறி'' என்று சொல்லவில்லை. ''போய்த் தொலையட்டும் - மூடநம்பிக்கை!'' என்று வைத்துக் கொண்டாலும் தனக்குச் சொந்தமானதை ஒருவன் பூசிப்பதில் அர்த்தமிருக்கிறது. ஆனால் கல்யாண சடங்குகளில் 'அதிகாரம்' செலுத்தும் பெண்களைப் போல ஆயுத பூசை ஏற்பாடுகளை கவனித்து நடத்த 'அதிகாரமளிக்கப்பட்ட' தொழிலாளிகள் தலை கால் புரியாமல் போகிறார்களே, அதுதான் விநோதம்!

போனசுக்கும், கூலி உயர்வுக்கும் போராடும் போது முதலாளியின் பிரதிநிதியாகத் தொழிலாளியின் கண்ணுக்குத் தென்படும் எந்திரம் ஆயுதபூசையன்று மட்டும் தன்னுடைய அவதாரமாகத் தெரிவது ஏன்? சொன்னாலும் சொல்லாவிட்டாலும் கைத்தறி முதல் கம்ப்யூட்டர் வரை எல்லா எந்திரங்களும் தொழிலாளிகள் பெற்றெடுத்தவை தான். அவர்களது உழைப்பின் விளைவுபொருட்கள் தான். அதனால் தான் ஆத்திரம் கரைபுரண்டாலும் கூட தான் வேலை செய்யும் எந்திரத்தை நொறுக்கவோ நாசம் செய்யவோ தயங்குகிறான் தொழிலாளி.

இன்சூரன்சு பணத்தை ஏமாற்றி வாங்க நினைக்கும் முதலாளியோ ஆயுதபூசையன்றே கூட ஆலைக்குத் தீ வைக்கத் தயங்குவதில்லை. விலை சரிந்து விட்டால் உற்பத்தியாகிக் கிடங்கில் குவிந்துள்ள பொருட்களைக் கடலில் கொட்டவும் கூசுவதில்லை. முதலாளி நேசிக்கும் ஒரே எந்திரம் அவனுடைய பணப்பெட்டி தான். அதற்கு மட்டும் ஆயுதபூசையன்று மட்டுமல்ல; அன்றாடம் பொட்டு வைத்துப் பூசை போட அவன் தவறுவதில்லை.


ஆனால் தொழிலாளியால் அது முடிவதில்லை. ஏனென்றால் அவர்கள் ஆக்க வேலைக்காரர்கள். அழிக்க மறுக்கிறார்கள். அவசியம் நேரும்போது கூட அழிக்கத் தயங்குகிறார்கள். அவர்களது கரங்களும், அவற்றின் உள்ளேயிருந்து ஊற்றெடுக்கும் உழைப்பும் மட்டுமே அவர்களுக்குச் சொந்தமானவை. உழைப்புதான் அவர்களது ஒரே ஆயுதம்.

இந்த ஆயுதத்துக்கு சந்தனப் பொட்டும் வைக்க முடியாது; சாம்பிராணி புகையும் போட முடியாது. பூசை போடவேண்டியவற்றின் பட்டியலில் முதலாளி இதைச் சேர்க்கவும் மாட்டான். ஏனென்றால் அது அவனுடைய ஆயுதமல்ல; அவனுடைய எதிரிகளின் ஆயுதம் - தொழிலாளி வர்க்கத்தின் ஆயுதம்.

அந்த ஆயுதத்தை - உழைப்பைப் போற்றும் நாள் தான் மே நாள். ஆலையையும் தொழிலையும் உழைப்பாளியின் அதிகாரத்திற்கு உட்பட்டதாக்கக் குரல் கொடுக்கும் நாள். அதுதான் தொழிலாளிகளின் திருநாள்.

எனவே, சாம்பிராணிப்புகை மயக்கத்திலிருந்து விடுபடுங்கள்! பூசாரியாய் இருப்பதில் என்ன பெருமை? உண்டியல் சாவி தருமகர்த்தாவின் கையில் இருக்கும் போது!

www.padippakam.com



# மந்தைகள்!

புரட்சிகர அமைப்புகளில் நம்பிக்கை வைத்து இயங்கும் அணிகளுக்கு அவர்கள் சூட்டியிருக்கும் பட்டம் இது.

ஒழுங்கு, கட்டுப்பாடு போன்ற 'பொருளற்ற' கட்டுப்பெட்டித் தனங்களில் கட்டுண்டு கிடக்கும் உறுப்பினர்களுக்கு அவர்கள் கொடுத்த செல்லப் பெயர் இது.

அவர்கள் மெத்தப்படித்தவர்கள்; அந்நியமாதலைப் பற்றிக் கேளுங்கள் - அவர்கள் ஆர்வத்துடன் விளக்குவார்கள்; ஸ்டாலினின் ரஷியாவைப் பற்றிக் கேளுங்கள் - நெருப்பைக் கக்குவார்கள்.

ரோசாலக்சம்பர்க், அல்தூசர், சார்த்ரே போன்ற பெயர்களைக் கேட்டு 'மந்தைகள்' விழிக்கும்போது அவர்கள் ரகசியமாக குதூகலிப்பார்கள்.

அவர்கள் பாரம்பரியமிக்கவர்கள். பாட்டாளி வர்க்கக் கட்சியில் உண்மையிலேயே பாட்டாளிகள் இருக்க வேண்டும் என்று லெனின் சொன்னபோது கட்சியை மந்தையாக்க முயல்கிறீர்களா என்று ஆவேசப்பட்டவர்கள் அவர்கள் தான். கிரெம்ளின் அரண்மனையை புரட்சிச் சிப்பாய்கள் தாக்கியபோது பாரம்பரியச் செல்வங்கள் அழிக்கப்படுவது கண்டு துடித்துப் போனவர்கள் அவர்கள் தான். சீனத்துக் கலாச்சாரப் புரட்சியை முழுமூச்சாக எதிர்த்து நின்றவர்களும் அவர்கள் தான்.

அவர்கள் எச்சரிக்கை மிக்கவர்கள்; ஆழ்ந்து படித்து, சிந்தித்து, விவாதித்து மீண்டும் படித்து, விவாதித்து, சிந்தித்து... முடிவுக்கு வர முயல்பவர்கள்.

அடிமைச் சமுதாயத்தின் அரசியல் முதல் கம்யூனிச சமுதாயத்தின் கலாச்சாரம் வரை அனைத்தையும் ஆய்ந்து தெளியாமல் அவர்கள் அடியெடுத்தும் வைக்க மாட்டார்கள்.

அவர்கள் ஒவ்வொருவரும் ஒருவிதம்.

தங்களைப் போன்று சுதந்திரக் காற்றை சுவாசிக்க மறுக்கும் மந்தைகளுக்காக சிலர் அனுதாபப்படுவார்கள்.

தங்களை குறை கூற முற்படும் மந்தைகளைக் கண்டாலோ அவர்கள் ஆத்திரத்தால் முகம் சிவப்பார்கள்.

அவர்கள் கரையிலிருந்தே நீந்தக் கற்றுத்தருபவர்கள். அலை ஓயும் என்று காத்திருப்பவர்கள்.

**அவர்கள் தான்** அறிவு ஜீவிகள். நடுத்தர வர்க்க அறிவு ஜீவிகள்; நடுத்தர வர்க்கமாகவே நீடிக்க விரும்பும் அறிவு ஜீவிகள்.

நக்சல்பாரி இயக்கத்தால் கவர்ந்திழுக்கப்பட்டு, கட்சியில் சேர்ந்து, பின் அரசு அடக்குமுறையைக் கண்டு அஞ்சி விலகிப்போன ஒரு அறிவுஜீவியின் நேர்மையான சுயபரிசீலனை இது.

அறிவு ஜீவிகளுக்கும் அவர்தம் ஆராதகர்களுக்கும்..... மற்றும் 'மந்தைகளுக்கும்' இதைச் சமர்ப்பிக்கிறோம்.

# மரணத்தை வென்றவன் நினைவைத் துரத்துகிறான்!

புதில் பட்டாச்சாரியா

•'•பிராண்டியர் வார ஏட்டிலிருந்து

மொழியாக்கம்: ம

இருபத்திரண்டு ஆண்டுகளுக்கு முன்னே வசந்தத்தின் இடிமுழக்கம் கேட்டுக் கிளர்ந்தெழுந்தவர்களே! இப்போது நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்? ஒரு தீவு போல நான் விலகிவிட்டேன். என்னுடைய வாழ்க்கையின் கன்றிப்போன சோகத்திற்குள்ளே ஒடுங்கிப் போய்விட்டேன். என்னுடைய வாழ்க்கையில் போர்க்குணம் பொங்கும் வெற்றி நடை முடிந்துவிட்டது. கம்பீரமான செங்கொடியும், அறைகூவும் சர்வ தேசிய கீதமும் இன்று எனது வாழ்க்கையில் உணர்ச்சியற்ற சடங்குகளாய் மாறிவிட்டன.

www.padippakam.com

ஒரு கம்யூனிஸ்டாக இருப்பதென்னவோ அற்புதமான விஷயம்தான்; ஆனால் அது பல தலைவலிகளைத் தோற்றுவிக்கிறது. இந்தத் தலைவலிகளை மாத்திரைகளால் குணப்படுத்த இயலாது. மாறாக, சில நேரங்களில் தலையையே இழக்க வேண்டியிருக்கும். நாங்களோ மனவுறுதி குலைந்த நடுத்தர வர்க்கத்தின் வாரிசுகள் - அறிவுபூர்வமாக மட்டும் மார்க்சீய சித்தாந்தத்தை ஏற்றுக் கொள்பவர்களால் இந்த நெருக்கடியை எப்படிச் சமாளிக்க முடியும்?

நான் அவநம்பிக்கையின் உருவம். என்னுள்ளே கொப்புளித்த போர்க்குணம் இன்று அடங்கிவிட்டது. இருந்தும் நான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். வாழ்க்கை நாடகத்தின் இறுதிக்காட்சிக்காகக் காத்திருக்கிறேன்.

கொந்தளிப்பு மிகுந்த 60ம் ஆண்டுகளில் நான் ஒரு கல்லூரி மாணவன். ''புரட்சி தவிர்க்கவே இயலாதது'' என்ற கம்யூனிஸ்டு கட்சி அறிக்கையின் ஆணித்தரமான வாசகம் என் மனதில் அழுத்தம்திருத்தமாகப் பதிந்துவிட்டது. மாவோவின் மூன்று புகழ்பெற்ற கட்டுரைகளை அன்று படிக்க நேர்ந்த போது நான் அடைந்த மகிழ்ச்சி....! கடந்த காலத்தின் மங்கிய நினைவுகள் பளிச்சிடுகின்றன. சம்பவங்கள் நினைவுக்கு வருகின்றன. தோண்டி எடுக்கப்பட்ட குழிப் பிணத்தைப் போல காட்சிப் படிமங்கள் உருத்தெரியாமல் போய்விட்டன. காலத்தால் அரித்துத் தின்னப்பட்டுவிட்டன. கனவுகளில் தோன்றும் நிஜங்கள்கூட தம் நிறத்தை மாற்றிக் கொள்கின்றனவே! அன்று நான் எப்படி இருந்தேன்? என்னுடைய முகமே எனக்கு மறந்துவிட்டது. அனலில் பட்ட மெழுகாக அது கரைந்துவிட்டது. ஆனால் மிருத்தியுஞ்சயனின் முகம் மட்டும் என் நினைவிலிருந்து அழியாமல் என்னை அலைக்கழிக்கிறது.

அந்த நாட்களின் நினைவை முழுமையாக உங்களுக்குச் சொல்லிவிட முடியுமா? எனக்கென்னவோ சந்தேகமாகத்தான் இருக்கிறது. நான் கல்லூரியில் முதலாண்டு பொருளாதாரம் படித்துக் கொண்டிருந்தேன். மிருத்தியுஞ்சயன் அப்போதுதான் எனக்கு அறிமுகமானான். ஒரு சிலரைத் தவிர நாங்கள் அனைவருமே நகர்ப்புற இளைஞர்கள். மிருத்தியுஞ்சயன் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவன். இருபத்திநான்கு பர்கானா (தெற்கு) மாவட்டத்தில் ஏதோ ஒரு கிராமத்தில் இருந்தது அவன் குடும்பம். அவனது நடவடிக்கைகளில் ஒரு விவசாயிக்கே உரிய முரட்டுத்தனம் இருக்கும். நினைவுகூறத்தக்க மேற்கோள்களை உதிர்த்த வண்ணம் இருப்பதற்கோ, மழுப்பலாகப் பேசுவதற்கோ அவனிடம் இருந்த முரட்டுத்தனம் அவனை அனுமதிக்கவில்லை. அவன் உரத்து சிந்தித்தான்; லட்சியத்தின் மீது இருந்த வெறியில் வாழ்ந்தான்.

முன்னேறிச் செல்லும் இடதுசாரி இயக்கம் தோற்றுவித்த உற்சாகம் ததும்பும் நாட்களில் நாங்கள் வளர்ந்தோம். கிளர்ந்தெழுந்த அந்த அறுபதுகளில் எங்கள் தலைமுறை தோழர் மாவோவின் நிழலில் வளர்த்தெடுக்கப்பட்டது. அனல்பறக்கும் விவாதங்களிலிருந்தும், அரசியலிலிருந்தும் யாரும் - யாருமே - ஒதுங்கமுடியாது. எங்களுடைய அரசியல் கருத்துக்கள் துரிதகதியில் உருமாறிக் கொண்டிருந்தன. காண்போர் கையில் எல்லாம் சிவப்புப் புத்தகங்கள். காற்றிலோ ரெஜிஸ் டெப்ரேயின் சாகசம்; ருடி டட்கேயின் இளமை ததும்பும் மூர்க்கத்தனம் எங்களை அள்ளிக்கொண்டு சென்றது. அவை தியாகம் ததும்பும் நாட்கள்; விசுவாசமிக்க நாட்கள்; நெஞ்சைக் கொள்ளை கொண்ட நாட்கள்.

கோட்பாட்டுத் துறையிலும் கலாச்சாரத் துறையிலும் இதுவரை வந்துள்ள அனைத்தும் துண்டுதுண்டாகவும், தாறுமாறாகவும், தனிநபர் மனோபாவத்துக்கேற்பவும் விவாதிக்கப்பட்டன. ஆனால் இந்திய அரசைப் பற்றியும், இந்திய சமூகத்தைப் பற்றியும் புதிய கேள்விகளை எழுப்புவதற்கு அவை அடித்தளம் அமைத்துக் கொடுத்தன. பற்றுறுதி வாய்ந்த இளைஞர்களை பல்வேறு புரட்சிக் குழுக்களுக்கு அனுப்பி வைக்கும் மூலாதாரமாக அவை இருந்தன. ஆய்வுத்திறன் மிக்கவை, கூர்மையானவை, விமரிசன பூர்வமானவை, சுடர்விடுபவை, ஆரவாரமானவை, துடிப்புமிக்கவை, முரட்டுத்தனமானவை, துணிச்சல் மிக்கவை — என எத்தனை வகை சிந்தனைகள் அன்றைய இயக்கத்தில்!

எழுந்தது நக்சல்பாரி! இசை நிகழ்ச்சி ஒன்றினிடையே கிளம்பிய காதைக் கிழிக்கும் வேட்டுச் சத்தமாக, இனிமையான வாழ்க்கையில் மிதந்து கொண்டிருந்தவர்களுக்கு அபசுரமாக, முகம் திருப்பிக் கொண்டவர்களின் முகவாயைப் பிடித்துத் திருப்பி 'என்னைப் பார்' என்று நிர்ப்பந்தித்த நக்சல்பாரி வந்தது. இன்றோ, நாளையோ நாங்கள் போர்க்களம் புகுந்தாக வேண்டும் என்று அது அறைகூவியது. புரட்சிக்குத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டிருந்த இளைஞர்களோ இந்தக்கணமே விவசாயப் புரட்சி என்ற கனவுக்காக வாதாடினர்; நாளை அல்ல, இன்று — இந்தக் கணமே களம் புகுந்தாகவேண்டும். எங்களிடம் கவர்ச்சிமயக்கம் இருந்தது ஆனால் மிருத்தியுஞ்சயனிடம் வர்க்கம் இருந்தது.

கடினமான நாட்கள் வந்தன. அச்சம் தனக்கேயுரிய முறையில் தன் செல்வாக்கைக் காட்டியது. எங்கும் நிறைந்திருந்த வெள்ளைப் பயங்கரமும், சிவப்புப் பயங்கரமும் தோற்றுவித்த வெப்பம் அதிகரிக்க, அதிகரிக்க நாங்கள் பின்வாங்கினோம். வெறிகொண்ட மிருகமாக வெள்ளைப்பயங்கரம் பாய்ந்தது; நரகங்கள் எங்களுக்காகத் தயார்நிலையில் வாய்பிளந்து நின்றன. நக்சல்பாரி எனும் சொல்லை, மக்களின் கவனத்தைத் திசைதிருப்பும் ஆயுதமாக மாற்றின அரசும், போலீசும்.

'தலைமறைவு வாழ்க்கை' — பேசும்போது மிகவும் கவர்ச்சிகரமாக இருந்தது. ஆனால் அதற்கான தருணம் வந்து கதவைத் தட்டியபோதோ நாங்கள் தலைமறைவாக முயலவில்லை. வெளிப்படையாகத் தான் இருந்தோம். வெளிப்படையான ஊமைகளாக, வெறும் பார்வையாளர்களாக. எங்களது மவுனம் எங்களது செவிப்பறைகளையே கிழித்தது.

அன்றைய எங்களது மவுனம் அனைத்தையும் சீர்குலைத்தது. சாவது உறுதி என்று தெரிந்தால் கூட வீரத்தின் சாயல்கூட இல்லாத கடைந்தெடுத்த கோழைகளாக சிலர் இருந்தோம். உறுதியின்மை, போலிப்பகட்டு, தற்புகழ்ச்சி, ஊசலாட்டம் — இவைதான் எங்கள் குணாதிசயங்கள்.

ஒரு கம்யூனிஸ்டாக இருப்பதென்னவோ அற்புதமான விஷயம்தான்; ஆனால் அது பல தலைவலிகளைத் தோற்றுவிக்கிறது. இந்தத் தலைவலிகளை மாத்திரைகளால் குணப்படுத்த இயலாது. மாறாக, சிலநேரங்களில் தலையையே இழக்க வேண்டியிருக்கும். நாங்களோ மனவுறுதி குலைந்த நடுத்தர வர்க்கத்தின் வாரிசுகள் — அறிவுபூர்வமாக மட்டும் மார்க்சிய சித்தாந்தத்தை ஏற்றுக்கொள்பவர்களால் இந்த நெருக்கடியை எப்படிச் சமாளிக்க முடியும்?

நாங்களோ தெளிவும், உறுதியுமற்ற ஊசலாட்டப் பேர்வழிகளை — ஹாம்லெட்டுகளை — வழிபடுபவர்கள்; அல்லது அவர்களுக்காக அனுதாபப்படுபவர்கள். ஆனால் மிருத்தியுஞ்சயன் மேட்டுக்குடிக் குலக்கொழுந்தல்லவே! அவன் ஒரு முட்டாள். அதனால் தான் அவன் இறந்துவிட்டான்.

லெனின், மாவோ, ஹோ-சி-மின் ஆகியோர் தாங்கள் விரும்பிய உலகைக் காண முடிந்தது என்றால் அதற்குக் காரணம் அவர்கள் வெற்றி பெற்றது தான்.

என் நினைவுகளை உங்களுடன் பகிர்ந்து கொள்ளமுடியுமா என்ற சந்தேகத்துடன் நான் சொல்லத் தொடங்கினேன். இப்போது நான் உங்களுக்குச் சொல்லியே தீரவேண்டும். மிருத்தியுஞ்சயன் ஒரு புரட்சியாளன்; வீரம் செறிந்த இளைஞன்; அனைத்திற்கும் மேலாக அவன் ஒரு கம்யூனிஸ்டு தியாகி.


கதை இத்துடன் முடிந்துவிட்டது. ஆனால் நான் முடிக்கவிரும்பவில்லை. ஒரு படி மேலே எடுத்துச் செல்ல விரும்புகிறேன்.

செருக்கு பிடித்து உப்பிப்போன எங்களது அகம்பாவத்தில் தைத்துவிட்ட முள்ளாக உறுத்துகிறான் மிருத்தியுஞ்சயன். ஆம்! என் சிந்தனையில் ஓயாமல் வட்டமிட்டு என்னை அவன் அலைக்கழிக்கிறான்.

மிருத்தியுஞ்ஜயன் என்ற வடமொழிச் சொல்லின் பொருள் மரணத்தை வென்றவன்.

www.padippakam.com





# பீரங்கித் திருடனின் பரம்பரைப் பெருமை!

எங்கும் எதிலும் நேரு - தெருக்களில் விளம்பரபோர்டு, செய்தித் தாள்களில் விளம்பரங்கள், காலண்டர்கள், டைரிகள், அரசாங்கக் கடிதங்கள், டி.வி., தொடர்நிகழ்ச்சிகள், புத்தகங்கள், வழவழப்பான ஆர்ட் தாளில் சிறு பிரசுரங்கள், தொடர்ச்சியாக அரசாங்க நிகழ்ச்சிகள்... எல்லாவற்றிலும் நேரு.

ரேடியோ, டி.வி., எங்கும் விளம்பரப் படுத்தி அறிமுகப்படுத்தப்பட்டது நேரு ரோஜ்கர் யோஜனா - வறுமையை ஒழிக்க, வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க ஒரு புதிய திட்டம் - இதிலும் நேரு.

மாநாடுகள், நேரு-கப் கிரிக்கெட் போட்டி, வளர்ச்சித் திட்டங்கள், தடகள விளையாட்டுக்கள் (சர்வதேச அளவில் விளையாட்டு வீரர்கள் கலந்து கொள்வார்கள்), கைக்கடியாரங்கள் - இப்படி, எதிலும் நேரு.

அரசுத் துறைகளில் ஏகப்போட்டி - கல்வித்துறையில் ஜவகர்லால் நேரு உதவித் தொகைகள், குறுக்கும் நேடுக்குமாக நாடெங்கும் சென்றுவர 'ஜவகர் யாத்ரி' (ரயில்பயணம்) ஊக்கத்திட்டம், பதிப்புத் துறையில் ஜவகர்லால் நேரு எழுதிய புத்தகங்கள் மறுபதிப்பு செய்தல், மாபெரும் ஜவகர்லால் நேரு நூற்றாண்டுத் தொகுப்பு, 'சுதந்திரப்போராட்ட தியாகிகளுக்கான' பென்ஷனில் நிலுவையில் இருந்த 65,000 விண்ணப்பங்கள் ஒரே மூச்சில் பைசல், நவ ஷேவா துறைமுகத்துக்கு நேருவின் புனிதப்பெயர் சூட்டுவிழா ஏற்பாடு, இவை மட்டுமல்லாமல் விதவிதமான நினைவுநாள் நிழ்ச்சிகள் - எல்லா அரசு அதிகாரிகளும் எல்லா மூளைகளையும் பயன்படுத்தி கூடியமட்டும் ஆடம்பரமாக விழாக்கள் அமையும்படி பார்த்துக் கொள்கிறார்கள்.

செலவு அற்பசொற்பம் என்றால் நீங்களே ஊகித்துக்கொள்ள முடியும் - ஒரு 289 கோடிரூபாய் மட்டுமே, ஆயிரக்கணக்கான துறையில் அழகழகாய்ச் செய்த செலவுகள் பற்றி ஓர் உயர் அதிகாரி ஆச்சரியப்பட்டுச் சொன்னார்: ''நேருவின் பெயரால் செலவழித்திருப்பதை உண்மையில் கணக்குப்போட்டுச் சொல்ல முடியுமா என்றே தெரியவில்லை.''

எதற்காக இவ்வளவு நேரு? தேசீய ஒருமைப்பாட்டுக்காகவாம்; சகோதரத்துவ உணர்வை வளர்க்கவாம். இவ்வளவு பெரிய, பிரும்மாண்டமான நேரு விளம்பரம் இதுவரையில் நடந்ததே கிடையாது. ஆகஸ்டு 87-ல் இப்படிச் செய்யலாம் என்ற கருத்து உருவாகி நவ.88-லிருந்து 2 ஆண்டு நிகழ்ச்சிகளாக நடத்தப்படுகிறது. (பார்க்க: பெட்டிச் செய்தி.)

நிகழ்ச்சி அனைத்தும் டி.வி.யில் ஒளி பரப்பப்படுகின்றன; ரேடியோவில் ஒலிபரப்பப்படுகின்றன. இவற்றைப் பார்க்கும் போதெல்லாம், கேட்கும் போதெல்லாம் தேசபக்தி பொங்கி எழுமென்று உத்தரவாதமாகச் சொல்கிறார்கள் ராஜீவின் ஆலோசகர்கள்.

எப்படி விதவிதமாக விளக்கினாலும் பொருள் ஒன்றே ஒன்றுதான். நேரு என்றால் தேசபக்தி. தேசபக்தி என்றால் நேரு குடும்பம். நேரு குடும்பம் இல்லை என்றால் இந்தியா அழிந்துபோயிருக்கும்.

நேரு பெயரை விளம்பரம் செய்து விற்பதற்குக்காரணம் தேர்தல்தான். தேசபக்தியை விற்பதற்குக் காரணமும் தேர்தல் தான். மக்கள் தொடர்புச் சாதனங்களான டி.வி., ரேடியோ மற்றும் பல்வேறு நிறுவனங்களை வைத்துக்கொண்டு துல்லியமாகத் திட்டம் போட்டிருக்கிறார் ராஜீவ். எதிர்க்கட்சிகள்

நிலையான - சட்டபூர்வமான ஆட்சியைக் கவிழ்க்க சதிவேலைகள் செய்கின்றன, ராம் ஜெ த்மலானி காலிஸ்தான் ஆதரவாளர், மதச்சார்பில்லாத அரசுக்கு ஆபத்து வந்துவிட்டது. அந்நியச் சக்திகளோடு கூட்டுச்சதியில் உள்ள எதிர்க்கட்சிகள் 'அக்னி' ஏவுகணைத் திட்டத்தை எதிர்க்கின்றன - என்று தொடர்ந்து ராஜீவ் பிரச்சாரம் செய்து வருவதும் தேர்தலுக்காகத்தான்.

2 வருடமாக போஃபோர்ஸ் பீரங்கி ஊழல் வெடிவெடி என்று வெடித்துத் தள்ளுகிறது; ஊழல் குற்றச்சாட்டுக்களிலிருந்து தப்பிக்க ஒரே வழி, வேறு ஏதாவது ஒரு விஷயத்தை மக்கள் முன்னால் காட்டி கவனத்தைத் திசைதிருப்பிவிடுவது. ராஜீவ் திட்டம் இதுதான். சோறு சோறு என்று பசியாய் துடிக்கும் குழந்தைக்குக் கிலுகிலுப்பை ஆட்டிக்காட்டுவது போல - மேலே போகிற ஏரோப்ளேனைக் காட்டுவது போல - வேடிக்கைகாட்டி வேத



படிப்பகம்

www.padippakam.com

'னையை மறக்கச் சொல்வது. தனது நேரு பரம்ரை அருகதையைக்காட்டி. மக்களை ஏமாற்றி ஓட்டு வாங்கி இன்னும் பத்து வருஷங்களுக்கு ஆட்சி நடத்த ராஜீவ் தன் (எலெக்ட்ரானிக்) கம்ப்யூட்டர் கும்பலோடு நீண்ட திட்டம் தீட்டியிருக்கிறார்.

''அரசாங்கத்தில் ஏற்கெனவே உள்ள அதிகாரிகள் செக்குமாட்டுத்தனமாக இயங்குகிறார்கள்; அவர்களிடம் கற்பனைத் திறனே இல்லை'' என்று சொல்லி தனியார் துறை ஏஜென்சியை வேலைக்கு அமர்த்திக் கொண்டார். ரோமி சோப்ரா, அருணந்தா ஆகிய இரண்டு விளம்பர விற்பன்னர்கள் வேட்டையில் இறங்கியுள்ளனர்.

'தேசீய ஒருமைப்பாடு' என்ற பொருளில் சிறு டி.வி., படங்கள் வேண்டும் என்று செய்தி வெளியே வந்ததும், விளம்பர நிறுவனங்கள் ஓடோடி வந்தன. ஒருமைப்பாடோ, ஏதோ ஓர் இழவு, எதுவாயிருந்தாலும் சரி, நேரத்தை வீணாக்காமல் காசு பண்ணுவதற்காக அவை போட்டியிட்டன. ஓ கில்வி - மாதர் நிறுவனம் ஓ அண்டு எம் 2 1/2 நிமிட படத்துக்கு ஒப்பந்தம் எழுதியது. படத்தின் தலைப்பு: ''சுதந்திரச் சுடரொளி பரப்புங்கள்!'' சிறந்த பந்தயக்காரர்கள் - ஆண், பெண் இரு பாலரையும் அழைத்துப் படமாக்கினார்கள். லூயி பேங்க்ஸின் இசையோடு படம் வெளியே வந்தது. தொடர்ந்து பல படங்கள். அதில் பிரபலப்படுத்தப்பட்ட தொடர் நிகழ்ச்சி ''மேரா பாரத் மஹான்'' (எனது பாரதம் மகத்தானது); ஷியாம் பெனகல் 4 1/2 கோடி ரூபாய்க்கு பிரும்மாண்டமான படம் ஒன்று தயாரித்தார். படம் நேருவின் "DISCOVERY OF INDIA" (இந்தியாவைக் கண்டேன்!) என்ற சுயசரிதையை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டது.

'ஆத்துல போகுது, அய்யாகுடி, அம்மாகுடி' என்று பழமொழி சொல்வார்கள். ராஜீவ் கும்பலின் நண்பர்கள், நண்பருக்கு நண்பர்கள், அறிவையே முதலாக வைத்து ஏமாற்றிப்பிழைப்பவர்கள் அனைவரும் அள்ளிக் குடித்தார்கள்; ராஜீவை வாயார வாழ்த்தினார்கள்; ''தேசீய ஒருமைப்பாடு ஓங்குக'' என்று கத்திவிட்டு வயிறு வலிக்கச் சிரித்தார்கள்.

1984-ல் தேர்தல் விளம்பரத்துக்கு டி.வி., ரேடியோ, வீடியோவைப் பயன்படுத்தியது போல பலபத்துமடங்கு அதிகமாக இப்போது ராஜீவ் பயன்படுத்துகிறார். ராஜீவ் குடும்பத்தின் சொந்த சொத்தாக அவை மாறிவிட்டன. அவை ராஜீவ் தர்ஷனாக, ஆல் ராஜீவ் ரேடியோவாக மாறிவிட்டன. 1984-ல் இந்திராவின் கொள்கையை மையமாக வைத்து தேர்தல் விளம்பரம் செய்தது காங்கிரசு. இந்திராவின் கடைசி பேச்சு, விளம்பரமாக்கப்பட்டது. ''சிக்கல்களும், பிளவுகளும் அதிகமாகிக் கொண்டிருக்கும் இந்தியாவை ஒன்றுபடுத்த, நிலையான ஆட்சி கொடுக்க காங்கிரசுக்கே ஓட்டுப் போடுங்கள்!'' என்று போஸ்டர்கள் அடித்தார்கள். அன்றும் தேசீய ஒருமைப்பாடுதான் காங்கிரசின் முழக்கம்.

இப்போதும் தேசீய ஒருமைப்பாட்டையே முன்வைத்திருக்கிறது ராஜீவ் கும்பல்.

வத்தில் தற்போது ராஜீவ் விளம்பரம் கொடுத்திருக்கிறார். ராஜீவின் 'இதயம் இந்தியாவுக்காகத் துடித்துக் கொண்டிருக்கிறதாம்!' நாடெங்கும் மதவெறியைத் தூண்டிவிட்டுத் துண்டாடிக் கொண்டிருக்கின்ற காங்கிரஸ் முதலைக் கண்ணீர் வடிக்கிறது.

ஆட்சிச் செங்கோல் பறிபோய்விடக் கூடாது என்பதில் ராஜீவ் குறியாக இருக்கிறார். ஆனால் மக்களுக்காகத் தான் கொண்டுவந்த பஞ்சாயத்துராஜ், நகர் பாலிகா மசோதாவை எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுத் தோற்கடித்ததாகவும், மக்கள் சேவை தடுக்கப்பட்டுவிட்டதே என்றும் கதறி நடிக்கிறார் ராஜீவ், ''தேர்தல்கள் வரும் போகும். ஆனால் நான் அரசியல் நிர்ணயசட்டத்தை மக்களுக்காகத் திருத்துவது நீண்டகாலம் நிற்கும்'' என்று அறிக்கை விடுகிறார். ராஜ்ய சபையில் தோற்கடிக்கப்பட்டதும், கட்சிக்கோட்டைக்குள் குத்து வெட்டு நடப்பதும், போஃபோர்ஸ் ஊழலை மூடியும் மறைக்க முடியாமல் போனது, பஞ்சாப், அஸ்ஸாம் ஒப்பந்தங்கள் புஸ்வானமாகியதும், இலங்கைக்குப் படை எடுத்து ஆக்கிரமித்துப் பொம்மை ஆட்சி அமைத்தது உலக அரங்கில் ஆக்கிரமிப்பாளர் என்று பெயர் எடுத்ததும், குப்புற விழுந்து குலைதெறிக்கப் படைவாபஸ் வாங்கியதும் எல்லாவிதத்திலும் அரசியல் வீழ்ச்சி ராஜீவுக்கு. அதனால்தான் இப்போது 'மக்களுக்கே அதிகாரம், என் உதிரம் நாட்டுக்கே, தேசபக்தர்களே நான் உங்கள் பக்கம்' என்று உருகி அழுகிறார்.

ராஜீவ் பதறுவதைப் புரிந்துகொள்ள முடியும் - ராஜீவைச் சுற்றி ஒரு கும்பல் அலறுகிறதே அதைத்தான் நன்றாக விளங்கிக் கொள்ள வேண்டும். ''நேருவின் குடும்பத்தை விட்டால் வேறு யார் நாட்டைக் காப்பாற்றுவார்கள்?'' என்று இவை ஒவ்வொரு தேர்தலிலும் ஊளையிடுவதைக் கவனியுங்கள். இந்தப் பாசிசக் கும்பல்தான் நேரு பாரம்பரிய ஆட்சி வேண்டும் என்று ஓயாது கருத்தை உருவாக்குகிறது.

நேரு காலத்திலேயே குடும்ப விசுவாசி கிருஷ்ணமேனன் அந்த வேலையைச் செய்தார். இந்திரா துடைப்பம் எடுத்துக்

## நேரு விழாக்கள் அட்டவணை:

**நேருவும் சுதந்திரதின இயக்கமும்:** நவம் 14. 1988. டெல்லி தீன்மூர்த்தி இல்லம். லதா மங்கேஷ்கரின் இன்னிசை நிகழ்ச்சி. நேரு நாணயம், தபால்தலை வெளியிடுதல்.

**நேரு புகைப்படக் காட்சி:** நவ 88 முதல் நவ 89 வரை. நேருவின் வாழ்க்கை வரலாறு பற்றி 60 நாடுகளில் புகைப்படக் காட்சி.

**சறுக்கல் ஊர்வலம்:** நவ.1-14, 1988. அலகாபாத் ஆனந்த பவனத்திலிருந்து டெல்லி சாந்திவனம் வரை.

**நேருவும், சுற்றுப்புறச்சூழலும்:** டிச. 88 - புதுடெல்லி பிரகதி மைதானம் - நேருவுக்கு அர்ப்பணிக்கப்பட்ட நிரந்தர காலரியுடன் கூடிய புதிய அறிவியல் அருங்காட்சியகத்தின் முதல் பகுதி திறக்கப்படுதல்.

**உலகக் கவிதை விழா:** ஜன 11 முதல் 19 வரை, 1989 - போபால் பாரத் பவனில் ஐந்து கண்டங்களின் 30 கவிஞர்கள் வந்து கலந்து கொண்டு கவிதை படித்தனர். தலைப்பு : ''நேருவும் மனிதனின் தீர்க்க தரிசனமும்''

**நேருவும் பெண் நல வாழ்வும்:** பிப்ரவரி 89 - கமலா நேரு நினைவுநாள் - இந்தியச் சுதந்திர இயக்கத்தில் அவரது பங்கு.

**நேருவும் பழங்குடிச் செல்வமும்:** மார்ச் 89 - பழங்குடி மக்கள் மீது தனிப்பட்ட அக்கறை கொண்ட நேரு பற்றிய விழா - ரெய்ப்பூரில்.

**நேருவும் சிறுபான்மை மக்களும்:** ஏப்ரல் 89 - தேசீய மாநாடு - பொருள்: சிறுபான்மையினரும், மதச்சார்பின்மையும் இடம்: திருவனந்தபுரம், கேரளா.

**நேருவும் உழைப்பும்:** மே 89 தொழிலாளர் பேரணிகள் - அனைத்து மாநிலத் தலைநகரங்களில் - பம்பாயில் உழைப்பாளர் குறித்த தேசீய மாநாடு - முதிர்ந்த தொழிற்சங்கத் தலைவர்களைக் கௌரவப்படுத்துவது.

**நேருவும் அறிவியலும்:** 7 ஜூன் 89 முதல் 23 ஜூன் 89 வரை - 'அறிவியல் யாத்திரைகள்' - கிராமங்களுக்குச் சென்று அறிவியலைப் பரப்புவது.

**நேருவும், நவீன இந்தியா உருவாக்கமும்:** ஜூன் 7 முதல் ஜூலை 23 வரை - லண்டனில் விக்டோரியா, ஆல்பர்ட் அருங்காட்சியகங்களில் மார்கரட் தாட்சர் கண்காட்சி திறப்பு. அங்கே ஒரு நிரந்தரக் காலரிக்கு நேரு பெயர் சூட்டுவது.

**நேருவும் தேசீய ஒருமைப்பாடும்:** ஆகஸ்டு 89 - பேரணிகள் - அனைத்து மாநிலத் தலைநகரங்கள், மாவட்டத் தலைநகரங்களில், மிக விமரிசையாக 'சுதந்திர தினம்' கொண்டாடுதல்.

**நேரு நூற்றாண்டு நாட்டியக் கலைவிழா:** செப் 3-7, 89 - புதுடெல்லியில் 50 ஆண்டு இந்திய நாடகங்களின் விழா.

**நேருவும் விவசாயத்துறை வளர்ச்சியும்:** நவம்பர் 89 - விவசாயிகள் பேரணி. அலகாபாத் ஸ்வராஜ்பவனில் சுதந்திரப் போராட்டம் பற்றிய தேசீய அருங்காட்சியகம் திறப்பு.

**சர்வதேச குழந்தைகள் திரைப்பட விழா:** ஜயாபச்சன் தலைமை - டெல்லியில் முதன் முறையாக நடக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com



**நேரு பற்றிய உலகக் கவிதை விழா: கொண்டை பூவுக்கு அழுகிறது!**

கூட்டச் சொன்னாலும் செய்வேன் என்றார் ஜெயில்சிங். நேரு குடும்பம் காலால் எட்டி உதைத்துத் துரத்தியு ம் காலடியில் முத்தம் கொடுத்துக் கிடப்பவர் கமலபதி திரிபாதி. இன்று ராஜீவின் பின்னால் கே.கே.திவாரி, குலாம் நபி ஆசாத், மணிசங்கர அய்யர், கஞ்பனாத்ராய், எழுத்தாளர் முல்க்ராஜ் ஆனந்த் என்று பெரிய கூலிப்பட்டாளமே இருக்கிறது - இவர்களின் ஒற்றைத் தாரக மந்திரம்: ''இந்தியாவைக் காப்பது நேரு பரம்பரையே!''

''இன்றும் மக்கள் நேரு குடும்பத்தைப் போற்றுகிறார்கள். காரணம் கடவுள் இந்தக் குடும்பத்துக்குக் கொடுத்த வரம். அவர்கள் ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் மக்கள் ஆதரிக்கிறார்கள். ராஜீவின் மீது மக்கள் அன்பு மாரி பொழிவதை நீங்கள் நேரில் பார்க்க வேண்டும்'' - இது குலாம் நபி ஆசாத். ராஜீவின் குடும்பம் பாடுபடுவதால்தான் காங்கிரஸ்காரர்களின் அரசியல் வாழ்வு இருக்கிறது. ராஜீவ் கஷ்டப்பட்டு உழைப்பதால்தான் ஏராளமான மக்கள் காங்கிரசின் பின்னால் வருகிறார்கள். ராஜீவை எதிர்ப்பவர்கள் எதிரிகள். இவ்வாறு நேரு குடும்பத்துக்கு நிரந்தர விசுவசமும் அடிமைத்தனமும் காட்டுகிறார் ஆசாத்.

நாவலாசிரியர் முல்க்ராஜ் ஆனந்த் ஒரு படி மேலே போய் ராஜீவின் அடுத்த வாரிசையும் அறிமுகப்படுத்தி விடு கிறார். புதுடெல்லியில் நடந்த அறிவு ஜீவிகள் மாநாட்டில் ராஜீவின் மகள் பிரியங்காவுக்கு எழுதப்பட்ட ஒரு திறந்த மடலை அவர் சுற்றுக்கு விட்டார். நேருவுக்கும், இந்திரா காந்திக்கும் விசுவாசியான எடுபிடி அறிவுஜீவியான முல்க்ராஜ் ஆனந்த் கடிதத்தை முடிக்கும் போது இவ்வாறு எழுதுகிறார்: ''நமது நாடு அழிந்து கொண்டிருக்கிறது. ராஜீவின் மகளே நீதான் நாட்டைக் காப்பாற்ற வேண்டும்!''

ராஜீவைச் சுற்றி ஜாலரா கும்பல்களே இருக்கின்றன. இந்தக் கும்பலே இந்திரா இறந்த பிறகு ராஜீவ் அரியணையில் வருவதற்குக் காரணமாக இருந்தது. வெட்கம் கொஞ்சமும் இல்லாமல் பிரியங்காவை வளர்த்து அரசியலில் அறிமுகப்படுத்த தயாராகிவிட்டார்கள். உத்திரப்பிரதேசத்தில் ஒரு ஜால்ரா தானாகவே சோனியா காந்தி மன்றம் ஒன்று தொடங்கி பிறந்தநாள் விழாவுக்கு ஏற்பாடுசெய்துவிட்டது. அந்த நாளில் சோனியா பிறக்கவில்லை, அப்படி ஒரு விழா எடுக்கச் சொல்லி காங்கிரசும் சொல்லவில்லை என்று டெல்லி தலைமை சொல்லிவிட்டது. எப்படி இருந்தாலும் சோனியாவை ஆதரிப்பதில் தவறில்லை என்று கடைசி வரை வாதிட்டது ஜாலரா.

மேலிருந்து கீழ்வரை நேரு பரம்பரைக்குச் சற்றும் குந்தகம் வராமல் பார்த்துக் கொள்ளப்படுகிறது.

எழுபதாம் ஆண்டுகளில் இந்திரா சஞ்சய் காந்தியை வாரிசாக உருவாக்கத்திட்டம் போட்டார். மாநில முதலமைச்சர்களும், மற்ற காங்கிரஸ் உள்ளூர் மட்டத் தலைவர்களும் எது தேவையானாலும் சஞ்சயைப் பார்த்துக் கேட்க வேண்டும் என்று கட்டளை போட்டார். சஞ்சய் விபத்தில் இறந்த பிறகு, எண்பதாம் ஆண்டுகளில் ராஜீவைத் தயாரித்தார் இந்திரா.

ஜனநாயக வேஷம் போடுவதற்காகவே முதலில் ராஜீவுக்கு அரசியல் விருப்பமேயில்லை என்று அறிவித்தார்; அப்புறம் ஜாலராக்கள் மூலம் காங்கிரசுக்கே ராஜீவ் வருகைக்கு விருப்பம் இருப்பதாக ஒரு தோற்றத்தை, கருத்தை உருவாக்கினார். அப்புறம் வழக்கமான வளர்ப்பு.

ராஜீவ் அடுத்த தலைவராக, நாட்டின் பிரதமராக உருவாக்கப்பட்டுவிட்டார். வாத்துக்குஞ்சு நீந்தக் கற்கும்போது தாய் பக்கத்திலேயே இருக்கும். மன்னன் வாரிசுக்கு முடிசூட்டுவதற்கு முன்பாகவே அனைத்து வித்தைகளும் கற்றுக்கொடுத்து அரசியல் வாசனை காட்டிப்பழக்குவான். அதுபோல தான் அரசியிலிருந்து விலகும் போது அடுத்த வாரிசு தயாராக இருக்க வேண்டும் என்பதில் ஒரே குறியாக இருந்தார் இந்திரா.

அடுத்த வாரிசுக்குத்துணையாக நிற்கக் கூடியவர்களையும் அறிமுகம் செய்து வைத்தார்; காங்கிரஸில் நேரு குடும்பத்துக்கு எதிராக ஒரு அணுவும் அசையாது என்ற உத்தரவாதத்தை ஏற்படுத்தி இருந்தார். இந்திரா இறந்த பிறகு அடுத்த பிரதமர் யார் என்பதில் வேறு கருத்து இருக்கவில்லை, பிரணாப் முகர்ஜி தவிர. அந்தக் கேள்வியை எழுப்பியதே கிரிமினல் குற்றம் என்று அவரை மலத்தைப் போலப் பார்த்தார்கள், வேறு கருத்து வந்தால் விவாதம் நடத்தும் ஜனநாயகம் காங்கிரசில் கிடையாது; பிரணாப் முகர்ஜி அந்தக் கணத்திலிருந்தே கோழை, துரோகி என்று தாக்கப்பட்டார்; கட்சியிலிருந்து தூக்கி ஏறியப்பட்டார்.

பிரணாப் முகர்ஜி யாருக்குத் துரோகம் செய்தார்? நேரு குடும்பத்துக்கு. காங்கிரஸ் கட்சி நேரு குடும்பத்தின் சொத்து. கட்சிக்குள் கலகம் செய்பவன் நேரு பரம்பரையையே கேவலப்படுத்திவிடுகிறான்.

நேரு பரம்பரைக்கு இப்போது ஆபத்து நெருங்கிவிட்டது. அரசியல் களத்தில் ராஜீவின் ஆரம்பகாலச் 'சூடு' உடனே தணிந்துவிட்டது. கட்சிக்குள்ளே கலக அலைகள் எழுந்தன; வி.பி.சிங் கோஷ்டி வெளியேறியது; தேசீய முன்னணி உருவானது; ராஜீவின் ஊழல்கள் வெளியே வந்து நாறிப்போனது. ராஜீவுக்குத்தன் நிழலைக் கண்டே பயமாகிவிட்டது. அதனால் வெளியேற்றிய 'பழைய' காங்கிரஸ்காரர்களை மீண்டும் கொண்டு வந்தார். நேரு நூற்றாண்டு சரியான நேரத்தில் ஆயுதமாகக் கிடைத்தது. ராஜீவ் உடும்புப்பிடியாக அதைப்பிடித்துக் கொண்டார்.

நேரு நூற்றாண்டு விழாவிற்கு அரசு செலவழிப்பு தவிர, பொதுத்துறை நிறுவனங்கள், வங்கிகளும் தங்கள் பங்குக்கு நேரு நூற்றாண்டு இலச்சினையைப் பொறித்து பிரசுரங்கள் வெளியிடுகின்றன. இவ்வளவும் செலழித்து பிரும்மாண்டமாக நேருவையும், தேச பக்தியையும் விற்பது கோயபெல்ஸ் சூழ்ச்சியே. பொய்களை விற்க இட்லருக்கு ஒரு கோயபெல்ஸ்; ராஜீவுக்கோ டி.வி., ரேடியோ மற்றும் பல மந்திரிகள், அதிகாரிகள்.

* * *

தமிழகத்தில் திராவிட அரசியலைப் பற்றிப் பேசும் போதெல்லாம் தேசிய நீரோட்ட வியாதிகள், திமுக அண்ணாவை வைத்து விளம்பரம் தேடுவதைக்கேலி செய்வார்கள். சல்லடை ஊசியைப்பார்த்துச் சொல்லியதாம் 'அய்யய்யே, உன் தலையில் ஓட்டை' என்று அப்படித்தான் இருக்கிறது காங்கிரஸ் கேலி.

நேருவை வைத்து ராஜீவ் இப்போது தேடும் விளம்பரத்தை எதில் சேர்ப்பது?

## அறிவிப்பு

மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் கொள்கைப் பாடல்கள் அடங்கிய வசந்தத்தின் இடிமுழக்கம் பாடல் காசெட்டுகள் விற்பனைக்கு உள்ளதாக விளம்பரம் செய்திருந்தோம். ஏராளமான வாசகர்கள் பணம் அனுப்பி காசெட்டுகளைப் பெற்றுள்ளனர். இருப்பினும், சாதாரண அஞ்சலிலோ, சர்டிபிகேட் ஆப் போஸ்டிங்கிலோ அனுப்பப்படும் காசெட்டுகள் வந்து சேர்வதில்லை என பல புகார்கள் வாசகர்களிடமிருந்து வந்தன. அஞ்சல் துறையில் புகார் செய்து பயனின்றிப் போனதால் அத்தகைய வாசகர்களுக்கு மீண்டும் பதிவுத் தபாலில் காசெட்டுகளை அனுப்பி வைத்தோம்.

இனி காசெட் வேண்டுவோர் காசெட் விலை ரூ.25 உடன் பதிவுத் தபாலில் அனுப்பும் செலவும் சேர்த்து ரூ.33 அனுப்பக் கோருகிறோம்.

இவண்
ஆசிரியர்குழு.



படிப்பகம்

www.padippakam.com



# மாணவர் சமூகத்தில் கிரிமினல்கள் ஊடுறுவல்!

மேலைநாடுகளின் ஏகாதிபத்திய கலாச்சாரம் நமது இளைய தலைமுறையை, குறிப்பாக மாணவ சமுதாயத்தை எவ்வளவு தூரம் சீரழித்துள்ளது? பொறுக்கி அரசியல் நமது நாட்டில் எவ்வளவு தூரம் ஆதிக்கம் பெற்றுள்ளது? இவ்விரு கேள்விகளுக்கு அதிர்ச்சியூட்டும் பதிலளிப்பதாக சில சம்பவங்கள் பம்பாய் நகரில் நடந்துள்ளன.

நூற்றாண்டு விழாக் கொண்டாடிய, பல தலைவர்கள் படித்த பம்பாயின் பிரபலக் கல்லூரி - எல்ஃபின்ஸ்டேன் கல்லூரி. இங்கே கடந்த அக்டோபர் 4ந் தேதி ஒரு மாணவி சில மாணவர்களால் கோரமாகக் கற்பழிக்கப்பட்டதாக முதலில் முணுமுணுப்பு வந்தது. பத்திரிக்கையாளர்கள் துருவித்துருவிக் கேட்டபோதும் கல்லூரி முதல்வர் கோல்கார் அடியோடு மறுத்தார். பிறகு முன்னுக்குப்பின் முரணாக உளறினார். கல்லூரிக் காவலாளியும் அவரது மனைவியும் கற்பழிப்புச் சம்பவத்தை உறுதிசெய்துவிட்டு, பிறகு பயந்து போய் மறுத்து விட்டனர். பத்திரிக்கையாளர்கள், மாணவ-மாணவிய ர், முன்னாள் மாணவர்கள் முயற்சியினால் விவகாரம் வெளிவந்து விட்டது.

மகாராஷ்டிரா மேலவை காங்கிரசு உறுப்பினர் மாதவராவ் தயாகுடே பட்டீல் மகன் அவினாஷ்பட்டீல், இந்தக் கல்லூரியில் இருந்து போட்டியின்றி பல்கலைக் கழகப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டானாம். அதைக் கொண்டாட "தாண்டியராஸ்" என்ற விருந்துவிழா நடத்தினான். 40 மாணவர்கள், 3 மாணவிகள், ஓரிரு பேராசிரியர்கள் - விரிவுரையாளர்கள் கலந்து கொண்டனர். உயர்ரக மது மற்றும் போதைமருந்து போட்டுவிட்டு இசை முழக்கத்தோடு வெறியாட்டம் துவங்கினர். இரண்டு மாணவிகள் அங்கிருந்து நழுவி விட்டனர். வெறிதலைக்கேற எஞ்சியிருந்த ஒரு மாணவியைத் தூக்கிக்கொண்டு போய் கல்லூரி நூலகத்துக்குள் வைத்து கற்பழித்தான் அவினாஷ் பட்டீல். பிறகு அவனது நண்பர்கள், மாறிமாறி கற்பழித்தனர். கற்பழிப்பதற்காக அந்தப் பெண்ணைக் கதறக்கதறத் தூக்கிக்கொண்டு போனதை பார்த்தும் சில பேராசிரியர்களும், விரிவுரையாளர்களும் கண்டுகொள்ளாமல் நழுவி விட்டனர்.

போதை தெளிந்த அந்தப்பெண் கதறிய போதும் வெறியர்கள் விடவில்லை. ரத்தம் பீறிட ஆடைகள் நனைந்தன. கூச்சலிட்டு அழுதுகொண்டே கல்லூரி காவலாளியின் குடிசைக்குள் தஞ்சமடைந்தாள். காவலாளியின் மனைவி மாற்றுடை கொடுத்து கல்லூரி முதல்வரிடம் மாணவியை ஒப்படைத்தனர். அரசு அலுவலக செயலாளரான அவளது தந்தைக்கு செய்தி கொடுத்து வரவழைத்து அனுப்பி வைத்தார், முதல்வர். அதன்பிறகும் அவினாஷ் பட்டீலும் அவனது சக குற்றவாளிகளும் கல்லூரிக்கு வந்து கொண்டிருந்ததோடு தமது கற்பழிப்பு சாகசத்தைப் பற்றி பகிரங்கமாகவே பெருமையடித்து மகிழ்ந்தனர். அப்போதும் அவர்கள் மீது நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

கிரிமினல் குண்டர்படையை வைத்துக் கொண்டு மற்ற மாணவர்களைத் தாக்கி பயங்கர பீதியூட்டி வந்ததையும், மாணவர்களை மிரட்டி வந்ததையும், விளையாட்டுக் களிலோ, தேர்தல்களிலோ யாருமே போட்டியிட முடியாதவாறு பலாத்காரமாகத் தடுத்து வந்ததையும் ஒரே குரலாக ஆத்திரத்தோடு இப்போது மாணவர்கள் முறையிடுகின்றனர். வகுப்பறைக்குக் குடித்துவிட்டு வந்து கலாட்டா செய்வது, பெண் விரிவுரையாளரை ஆபாச வெறியோடு முறைப்பது, காப்பியடிப்பது போன்ற ரௌடித்தனங்கள் பற்றி முதல்வரிடம் முறையிட்டும் முதல்வர் நடவடிக்கை எடுக்கவேயில்லை. "எந்தத் தகுதியும் இல்லாத மாணவ ரௌடிகள் அரசியல் செல்வாக்கையும், பணபலத்தையும் வைத்து கல்லூரிகளில் சேர்ந்து விடுகின்றனர். ஒட்டுமொத்த சமூகமே கெட்டுச் சீரழிந்து விட்டது; எங்கள் கல்லூரி மட்டுமல்ல பள்ளிகளிலும் கூட வன்முறைக் கலாச்சாரம் பரவிவிட்டது. மாணவர் கலாச்சாரத்திலும் அரசியலிலும் ஒரு அங்கமாக கும்பல் சண்டைகளும் உள்ளன. பல கல்லூரிகளும் அதை ஏற்றுக் கொண்டு விட்டன" என்கிறார் அந்தக் கல்லூரியின் பேராசிரியை டாக்டர் ஹோமை ஷேராஃப்.

இது உண்மைதான் என்கிற வகையில், எல்ஃபின்ஸ்டோன் கல்லூரி கற்பழிப்புக்கு அடுத்த நாள் ஒரு சம்பவம் பம்பாயில் நடந்தது. பல்கலைக்கழகப்- பிரதிநிதி தேர்தல் வேட்பு மனுத்தாக்கல் செய்ய இறுதிநாள். ஜிதேந்திரா சௌகான் சட்டக் கல்லூரி வளாகத்தில் வைத்து மாணவர் காங்கிரசுத் தலைவர் ஓவன் டிசௌஜா படுகொலை செய்யப்பட்டார். அரசியல் காரணத்துக்காக அவரைக் கொன்று விட்டார்கள் என்று காங்கிரசு பிரச்சாரம் செய்து, 4 மந்திரிகள் மலர் வளையம் மரியாதை செலுத்தி கட்சி ஊர்வலமாகவே நடத்தி சவ அடக்கம் செய்தார்கள். பிறகுதான் அம்பலமானது காங்கிரசு மாணவர் தலைவர் ஓவன் டிசௌஜா இரகசிய உலக கிரிமினல் மஃபியா கும்பலைச் சேர்ந்தவர்; கொலை உட்பட 10 கிரிமினல் குற்றங்களில் வழக்குப் பதிவு செய்யப்பட்டவர். கும்பல் தகராறு காரணமாகக் கொல்லப்பட்டார்.

நாட்டின் சீரழிவுகளில் முன்னோடியாகத் திகழும் பம்பாய் மட்டுமல்ல; நமது மாநிலத்திலும் கல்லூரி வளாக வன்முறைகள் பரவி வருகின்றன. சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மாணவர்கள் சமீபத்தில் சுற்றுலாப் போனார்கள். அங்கே ஒரு மாணவி விவகாரத்தில் இரு கும்பல்களுக்கிடையே தகராறு மூண்டது. கல்லூரி திரும்பியதும் கும்பல் சண்டை மூண்டு குத்துவெட்டு நடந்து சில மாணவர்கள் கைதாகினர். இரண்டு மாதங்களுக்கு முன்பு சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக் கழக மருத்துவக் கல்லூரி கலைவிழாவையொட்டி மாணவர்களிடையே சண்டை மூண்டது. பயங்கர ஆயுதங்களைக் கொண்டு ஒரு பிரிவினரைத் தாக்கிவிட்டு சில மாணவர்கள் தலைமறைவாகி விட்டனர். அவர்கள் யார் தெரியுமா? தமிழக முதல்வர் கருணாநிதியின் பேரன், அதாவது மு.க.முத்துவின் மகன், மந்திரி ஆற்காடு வீராசாமியின் மகன், முன்னாள் மந்திரி ப.உ.சண்முகத்தின் மகன், முன்னாள் தி.மு.க. எம்.எல்.ஏ கிருஷ்ணமூர்த்தியின் மகன் ஆகியோர். பிறகு இவர்கள் தகுந்த 'ஏற்பாட்டுடன்' சரணடைந்தனர்.

இவை எல்லாம் எதைக் காட்டுகின்றன? வளரும் பொறுக்கி அரசியல் தலைவர்களும் கிரிமினல் குற்றவாளிகளும் கல்லூரி வளாகங்களில் ஆதிக்கம் பெற்று வருகின்றனர். போதைமருந்து, ஏகாதிபத்திய ஆபாச-களிவெறியாட்டக் கலாச்சாரம் அவற்றைக் கவ்விக்கொண்டு வருகின்றன. இவை இன்றைய இளைய தலைமுறையை, குறிப்பாக மாணவர் சமுதாயத்தைச் சிதைத்துச் சீரழிக்கின்றன.

ஆகவே, 1969-70 ஆண்டுகளில் இளைய சமுதாயத்தைத் தட்டியெழச் செய்த நக்சல்பாரிப் புரட்சிப்பாதைதான் புரட்சிகரமான, ஆக்கபூர்வமான, விஞ்ஞான பூர்வமான ஒளிமயமான எதிர்காலத்துக்கு வழிகாட்ட முடியும் என்பது தெளிவாகிறது. ■



படிப்பகம்

www.padippakam.com




ஆறு பக்கங்களுக்கு
'ஆய்வு'க் கட்டுரை;
இந்தியிலும் ஆங்கிலத்திலும்
இதே தேதியில் வெளிவந்த
இந்தியா டுடே
இதழ்களில் விலைவாசி
உயர்வு பற்றி
அட்டைப்படக் கட்டுரை.
தமிழில் மட்டும்
'செக்ஸ் புரட்சி' தான்
அட்டைப்படக் கட்டுரை.

# தறிகெட்டுப் போவதற்கு ஒரு தத்துவ வழிகாட்டி?

பல்வேறு திசைகளில் இருந்தும் பல்வேறு காரணங்களுக்காக வெட்டப்பட்டும், சிதைக்கப்பட்டும், சின்னாபின்னப்படுத்தப்பட்டும் கூட உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு மரணத்துடன் போராடிக் கொண்டிருக்கும் வார்த்தைகள் சில உண்டு. அவற்றில் தலையானது 'ஒழுக்கம்'. ஒழுக்கக் கேடுகளின் பட்டியல் நீளமாக இருப்பது உபதேசிகளுக்கே உபத்திரவமாகிப் போனதால் அவற்றை ரத்தினமாகச் சுருக்கி பஞ்ச மாபாதகங்கள் என்று பட்டியலிட்டார்கள். அதுவும் காலாவதியாகி, ஒழுக்கம் என்ற சொல்லை உடையாமல், நொறுங்காமல் பாதுகாக்கும் பொறுப்பு பெண்களிடம் விடப்பட்டு அந்தப் பொறுப்பை நிறைவேற்றும் பெண்களுக்குக் கற்புக்கரசி பட்டமும் வழங்கப்பட்டது. கற்பு என்ற மாறுவேடத்தில் உயிர் பிழைத்திருந்த ஒழுக்கத்திற்கும் இப்போது வந்தது ஆபத்து.

டெலிவிஷன், இந்து சுசுகி, பவர் ஷூ வரிசையில் கடைசியாக தமிழகத்திற்கு வந்திருக்கும் 'இந்தியா டுடே'யின் அட்டைப்படக் கட்டுரை பழைமை விரும்பிகளை கிலி கொள்ள வைக்கின்றது; 'புதுமை' விரும்பிகளுக்கோ உற்சாகம் தருகின்றது.

''திருமண வாழ்வில் சமத்துவம், கணவனிடமிருந்து நல்ல உறவு இவைகளைக் கேட்கிறாள் இந்தியப் பெண். இதன் காரணமாக மணவாழ்வுக்கு வெளியிலும் உறவு கொள்ள முயல்கிறாள்'' என்ற பீடிகையுடன் படிதாண்டிய, தாண்ட விரும்புகின்ற பத்தினிகளை பேட்டி கண்டு, வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், உளவியலாளர்களுடன் கலந்துரையாடி கடைசியில் ஒருவழியாக, தாங்கள் ஆவலுடன் எதிர்பார்த்த 'நவீன' இந்தியப் பெண் உருவாகி வருகிறாள் என்ற மகிழ்ச்சியில் கட்டுரையை முடித்திருக்கிறது 'இந்தியா டுடே'. இந்தக் கட்டுரையின் தலைப்பு — மணமான பெண்கள்; மாறிவரும் செக்ஸ் உணர்வுகள்.

என்ன பத்திரிக்கை என்று பார்க்காமல் அட்டையை மட்டுமே பார்த்து பத்திரிக்கைகளைத் தெரிவு செய்யும் விடலைகள் பத்திரிக்கையின் வலதுபுறத்தில் பின் அடிக்கப்படாமல் இருப்பது குறித்து ஆச்சரியப்படக்கூடும். ஆனால் படித்தபின் எதிர்பார்த்தது இல்லையே என்ற ஏமாற்றத்திற்கு ஆளாகமாட்டார்கள் என்பது நிச்சயம்.

''என்னய்யா... சோரம் போவது தானே! இதில் என்ன அதிசயம் இருக்கிறது? தினத் தந்தியைப் புரட்டினால் இடதுபக்கம் மேற்புறத்தில் கன்னித்தீவு; அப்புறம் ரேஸ் டிப்ஸ் அல்லது லாட்டரி முடிவு. வலதுபுறம் ''இளம்மனைவி வெட்டிக் கொலை; கள்ளக் காதல் எதிரொலி; கணவன் கைது!'' அல்லது ''கணவனுக்கு விஷம் வைத்துக் கொலை; மனைவிக்கு போலீஸ் வலைவீச்சு''. இதில் என்ன புதிதாய் இருக்கிறது என்று சில வாசகர்கள் பொறுமையிழக்கக்கூடும்.

ஆனால் —

''என் கணவருடன் எனக்குள்ள உறவு மிக முக்கியம். ஆனால் என்னைச் சுற்றிலும் மணவாழ்க்கைக்கு வெளியே உறவு கொள்பவர்களை பார்த்துக் கொண்டிருக்கிறேன். வெளிப்படையாகச் சொன்னால்... என்றேனும் ஒருநாள் நானும்...'' என்று பேசும் ஒரு நடுத்தர வர்க்கப் பெண்ணை பேட்டி கண்டு எழுத ஒரு 'இந்தியா டுடே' வேண்டியிருக்கிறது.

ஆறு பக்கங்களுக்கு 'ஆய்வு'க் கட்டுரை; இந்தியிலும், ஆங்கிலத்திலும் இதே தேதியில் வெளிவந்த 'இந்தியா டுடே' இதழ்களில் விலைவாசி உயர்வு பற்றி அட்டைப்படக் கட்டுரை. தமிழில் மட்டும் 'செக்ஸ் புரட்சி'தான் அட்டைப்படக் கட்டுரை. பசி ஏப்பக்காரர்களின் தேவையைத் தீர்மானிப்பவர்கள் புளித்த ஏப்பக்காரர்கள் என்னும் போது இதை எதிர்பார்க்க வேண்டியதுதான்.

ஆரோக்கியமான மணவாழ்க்கையினூடே வேலி தாண்ட விரும்பும் பெண்கள், நிர்வாணப்படம் பார்க்கும் தம்பதிகள், கணவனுக்கு துரோகமிழைக்கிறோமோ என்ற உறுத்தல் இல்லாமல் கள்ளஉறவு கொள்வது எப்படி என்று கேள்வி எழுப்பும் பெண், 10ம் வகுப்பு படிக்கும்போதே கர்ப்பமான சிறுமிகள் ஆகியோர்தான் இந்தக் கட்டுரையின் கதாநாயகிகள்.

தமிழுக்கு இந்த 'துணிச்சலான' முயற்சி புதிதாக இருக்கலாம். ஆனால் ஆங்கில இதழ்களில் கடந்த சில ஆண்டுகளாகவே இந்த வகை 'ஆய்வுகள்' நடந்து கொண்டிருக்கின்றன. ''60களில் அமெரிக்காவில் நடைபெற்ற புரட்சி இந்தியாவுக்கு வந்து சேர இருபது ஆண்டுகள் ஆகியிருக்கிறது'' என்று அங்கலாய்த்துக் கொண்டு உடனே சுறுசுறுப்பாக பெண்கள் மற்றும் இளைஞர்கள் மத்தியில் ஒரு கருத்துக் கணிப்பு நடத்தியது, இல்லஸ்டிரேடட் வீக்லி என்னும் ஆங்கில வாரஇதழ், கணவன், மனைவி, குடும்பம் ஆகியவை குறித்த மதிப்பீடுகள் பெருமளவு மாறிவிடவில்லையெனினும் ஒருவனுக்கு ஒருத்தி என்ற கோட்பாடு தகர்ந்து விழத் தொடங்கிவிட்டது என்ற தனது ஆய்வு முடிவை குதூகலத்துடன் வெளியிட்டது. 'அடுத்தவன் பெண்டாட்டி' என்ற தலைப்பில் தன் பங்குக்கு ஒரு கட்டுரை எழுதியது சண்டே வார இதழ்.

குழந்தை பெற்றுக்கொண்டு கணவன் யாரென்று சொல்லமாட்டேன் என்று அறிவித்த இந்திநடிகை நீனா குப்தாவின் 'வீரத்தை' மெச்சிய வீக்லி ஆசிரியர் பிரீதீஷ் நந்தி ''சில ஆண்டுகளுக்கு முன் இது நடந்திருந்தால் இந்தப் பெண்ணை சமூகம் ஒதுக்கி வைத்திருக்கும். ஆனால் இன்று மதிப்பீடுகள் மாறிவிட்டன. பெண்கள் சமூகத்திடம் அங்கீகாரம் தேடவிரும்பவில்லை; சுதந்திரத்தை விரும்புகிறார்கள்'' என்று பெருமை பொங்கக் குறிப்பிடுகிறார்.

என்ன நடக்கிறது? 'இந்தியா டுடே' இதழுக்கு பேட்டி கொடுக்கும் பெண்கள் யார்? அவர்களது கோரிக்கைதான் இந்தியப் பெண்ணினத்தின் கோரிக்கையா? இந்த பத்திரிக்கைக்காரர்களின் நோக்கம் என்ன?



படிப்பகம்

www.padippakam.com

அதிருக்கட்டும். இந்த விவகாரம் பற்றி நாம் எதற்கு எழுதவேண்டும்? இவையெல்லாம் ஆபாசக்குப்பைகள் என்று ஒரே வார்த்தையில் தூர வீசியெறிந்துவிட வேண்டியது தானே! — என்று பல கேள்விகள் அபிப்பிராயங்கள் எழலாம். எழும்.

ஆனால் அவ்வாறு புறங்கையால் ஒதுக்கித் தள்ளிவிடுவதன் மூலம் இந்தப் பிரச்சினை ஒதுங்கிவிடாது; ஒழிந்தும் போகாது. சாராயக்கடையின் பெயர்ப்பலகையில் 'குடி குடியைக் கெடுக்கும்' என்று எழுதித் தொங்கவிட்டுக் கொண்டுதான் வியாபாரம் நடத்தவேண்டும் என்று சட்டமியற்றும் அரசாங்கத்தின் கீழ் குடிமக்களும் அத்தகைய போலிக் கலாச்சாரத்திற்கே பழக்கப்படுத்தப்பட்டு இருக்கிறார்கள். இந்த வெட்கக்கேட்டை, அவலத்தை நமக்கு நாமே இருட்டடிப்பு செய்துகொண்டு போலிப் பெருமிதம் கொள்வதில் அர்த்தமில்லை. 'இதயத்தைத் திருடாதே' கொட்டகை வாயிலில் பெண்கள் கூட்டம் அலைமோதுவதை இருட்டடிப்பு செய்யமுடியாதே!

பூணூலுக்கு மேல் ஜீன்ஸ் போர்த்திய புரட்சிக்காரர்கள் — 'இந்தியா டுடே' இதழின் மாலன் போன்றோர் - அனுராதாரமணன் மற்றும் ஆனந்தவிகடன் வகையறாக்கள் இதையெல்லாம் ஒரு பிரச்சினையாகப் பார்க்கவில்லை; புரட்சி என்று வரவேற்கிறார்கள். இதை ஒரு பிரச்சினை என்று கருதுபவர்களுக்காகவாவது இதை அக்கறையுடன் பரிசீலிப்போம்.

மணவாழ்க்கைக்கு வெளியே கள்ளஉறவுகள் வைத்துக் கொள்வதென்பது பண்டைக்காலம் தொட்டே இருந்து வந்துள்ள விஷயம்தான். எனினும் அன்று முதல் இன்று வரை ஆண்கள் இவ்விஷயத்தில் பிடிபட்டாலும் பாதிப்புக்குள்ளாவதில்லை; ஆணைப் பொறுத்தவரை இது உடல் சம்பந்தப்பட்ட தவறாக மட்டுமே கருதப்பட்டு மறக்கப்படுகிறது; மன்னிக்கப்படுகிறது. ஆனால் பெண் நடத்தை கெட்டவள் என்று பட்டம் கட்டப்பட்டு தண்டனைக்குள்ளாக்கப்படுகிறாள் — இது யாவரும் அறிந்ததுதான்.

கணவனால் புறக்கணிக்கப்பட்ட, ஒடுக்கப்படுகின்ற ஒத்துவாழ இயலாத அளவுக்கு உளரீதியாகவும், உடல்ரீதியாகவும் முரண்பட்ட பெண்கள்கூட சமூக நிர்ப்பந்தம் காரணமாக சேர்ந்து வாழ நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். அவர்கள் விவாகரத்து பெறுவது கூட சில நேரங்களில் சாத்தியமாகி விடலாம். ஆனால் மறுமணம் செய்துகொள்வது சாத்தியமாவதில்லை. இதனால் உளரீதியாகவும், உடல்ரீதியாகவும் அவர்களுக்கு கடுமையான பிரச்சினைகள் தோன்றுகின்றன. இவையெல்லாம் ஆண் ஆதிக்க சமுதாயம் 'அடங்கிப் போகாத' பெண்களுக்குக் கொடுத்துள்ள தண்டனை.

இந்தத் தண்டனைகளிலிருந்து இவர்களை விடுவிப்பது எப்படி என்பது பற்றி இந்த பத்திரிக்கைகாரர்கள் கவலைப்படவில்லை. மாறாக இத்தகைய முரண்பாடுகளை விவாகரத்துக்கள் மூலம் தீர்த்துக் கொள்ள இயலாத, அல்லது தீர்த்துக் கொள்ள விரும்பாத பெண்கள் மணவாழ்க்கையைத் தொடர்ந்துகொண்டே கள்ள உறவு வைத்துக் கொள்வதை 'அனுதாபத்துடன்' பார்க்கிறார்கள்.

இன்னும் சொல்லப் போனால் மனைவி மீதான கணவனின் பிற அடக்குமுறைகள் பற்றி எல்லாம் பேசித் தீர்வு கண்டுவிட்டதைப் போலவும், பெண்கள் மீதான சமூக, கலாச்சார ரீதியான அடக்குமுறைகள் பற்றி எல்லாம் நுணுகி ஆராய்ந்து முடிவு கண்டுவிட்டதைப் போலவும் இப்போது இருக்கும் பிரச்சினை ஆண் — பெண் பாலியல் உறவில் பெண்கள் ஏமாற்றப்படுவதும் வஞ்சிக்கப்படுவதும் பற்றியதுதான் என்பது போலவும் சித்தரிக்கிறார்கள்.

இதற்கு இவர்கள் சொல்லும் தீர்வு மணவாழ்க்கையிலிருந்து பாலியல் உறவைப் பிரித்தெடுத்து விடுவது; அதாவது தாம்பத்திய உறவில் ஒருவனுக்கு ஒருத்தி என்பது தேவையில்லை; அவ்வாறு வரம்பு மீறுபவர்கள் புரட்சிக்காரர்கள்; இதை அங்கீகரித்து இந்த வாழ்க்கை முறைக்குப் பழகிக் கொள்ள வேண்டும் என்பதுதான்.

இதைக் கேட்டவுடனே ஒரு பழமைவாதியின் நிலையிலிருந்து நாம் பதட்டம் கொள்ளவில்லை. பீதியடையவுமில்லை. மாறாக அருவெறுப்படைகிறோம். நாகரீகம் என்ற போர்வையில் மனிதனின் பண்பாட்டை நாய்களின் பண்பாட்டு(!)த் தரத்திற்கு இறக்கும் இந்த 'அறிவாளி'களைக் கண்டு ஆத்திரமடைகிறோம்.

மனிதனின் 'ஆன்மீகத்தேவை'களைப் பற்றியும், தனிமனிதனின் 'புனிதமான', பிரிக்கவொண்ணாத சுதந்திரத்தைப் பற்றியும் அது கம்யூனிஸ்டுகளால் பறிக்கப்படுவதைப் பற்றியும் கூச்சல் போடுபவர்கள் எந்த 'ஆன்மீக'த் தேவையைப் பற்றி அதிகம் கவலைப்படுகிறார்கள் என்பது இப்போது புரிகிறது.

குரங்கு மனிதனாக பரிணாம வளர்ச்சியடையும் முன்னரே அதற்குப் பசியும் உண்டு; பாலுணர்வும் உண்டு. மனிதனான பின்னும் கணவன், மனைவி; தாய் - மகன் என்று ஏற்பட்டதெல்லாம், குடும்பம் தொடங்கிய பிறகுதான். இயற்கையை மாற்றியமைக்கும் போராட்டத்தில் தான் மனிதன் தன்னை மாற்றியமைத்துக் கொண்டான். அப்படித் தன்னை மாற்றியமைத்துக் கொண்டதற்குப் பெயர்தான் பண்பாடு. அந்தப் பண்பாட்டின் வளர்ச்சியின் ஊடாகத் தான் ஆண் - பெண் இடையே இருந்த விலங்கியல் உறவு காதலாக மாறியது. இப்போது 'இந்தியா டுடே' வகையறாக்கள் இதைப் பிரிக்கச் சொல்கிறார்கள். குடும்பத்தை ஒரு பொருளாதார ஏற்பாடாக மட்டும் சுருக்கிக் கொள்ளலாம் என்று ஆலோசனை கூறுகிறார்கள்.

கம்யூனிசம் பெண்களையும் பொதுவுடமையாக்கிவிடும் என்றும், குடும்பத்தை ஒழித்துவிடும் என்றும் அவதூறு செய்து, பீதியூட்டியவர்களின் வாரிசுகள் தான் — கம்யூனிச எதிரிகள் தான் — இன்று இதைப் பேசுகிறார்கள். பெண்களின் 'சுதந்திரம்' குறித்து இவர்கள் நீலிக்கண்ணீர் வடித்து எழுதியிருக்கும் பக்கத்திற்கு எதிர்பக்கத்தில் கையில் சோப்புக்கட்டியுடன் 'என்னை வாங்கு' என்று கண்ணால் அழைக்கிறாள் ஒரு விளம்



சக ஊழியர்களோடு சாதாரணமாகப் பழகுகிறவர்கள் இனி 'இந்தியா டுடே'வைத்தான் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்!?

www.padippakam.com

பர மாடல். இவர்களது நேர்மைக்கு இது ஒரு சான்று.

மேல்தட்டு நடுத்தரவர்க்கத்தைச் சேர்ந்த ஒரு பெண் வங்கி அதிகாரி, விளம்பர மாடல் அல்லது அனுராதாரமணன் போன்றோரின் வாழ்க்கை மதிப்பீடுகளை, சீரழிவுகளை இவர்கள் வெளியிடுவதற்குக் காரணம் இருக்கிறது. இப்படிக்கூட ஒரு கருத்து இருக்கிறது. இப்படியெல்லாம் சிலர் வாழ்கிறார்கள் — நீங்களும் வாழலாம் என்று வாழைப்பழத்தில் ஊசியேற்றும் வேலை இது. கார் சாவியைக் குலுக்கிப் போட்டு மனைவிமார்களை மாற்றிக் கொள்ளும் கழிசடைகளின் பிரதிநிதிகள் தங்கள் பண்பாட்டை வெளிப்படையாக இப்போது கடைவிரிக்கிறார்கள்.

இப்படி 'வெளிப்படையாக' இருப்பது தங்களுடைய நேர்மையையும், எதிர்நீச்சல் போடும் துணிச்சலையும் காட்டுவதாக வேறு இவர்கள் பீற்றிக் கொள்கிறார்கள். இது குறித்துப் பேசத் தயங்குபவர்களை அல்லது அருவெறுப்படைபவர்களை 'போலி வேட தாரிகள்' என்று கேலி செய்கிறார்கள். ''மனதளவில் எல்லோருமே திருடர்கள்தான், காமுகர்கள்தான், அயோக்கியர்கள்தான். ஆனால் பலபேர் யோக்கியர்களாகத் தெரிவதற்குக் காரணம் அவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை என்பதுதான்'' — இது இவர்களது தத்துவம்.

டைய எதிரொலி? யாருடைய குரலின் எதிரொலி?

● ○ ●

**வே**று யாருடையது? திருவாளர் ராஜீவின் குரல்தான் அது. ''ஏகபோகங்களின் மீதான கட்டுப்பாடுகளைத் தளர்த்துங்கள்'' ''பன்னாட்டு நிறுவனங்கள் இந்தியாவில் மூலதனம் போடுவதற்கு உள்ள சட்டத்தளைகளை அறுத்தெறியுங்கள்''. ''கதவுகளை அகலத் திறந்துவிடுங்கள்; அவர்கள் சுதந்திரமாக விரும்பிய துறைகளிலெல்லாம் நுழையட்டும்'' என்று 1985-ல் பொருளாதாரத்தளத்தில் தெரிந்த ராஜீவின் குரல் இன்று கலாச்சாரத்தளத்தில் 'இந்தியா டுடே'யின் குரலாக, பிரீதீஷ் நந்தியின் குரலாக, அனுராதா ரமணனின் குரலாக எதிரொலிக்கிறது.

எந்திரகதியாகப் பொறுத்துகிறீர்கள் என்று சிலர் சலிப்படையலாம். ஆனால் இதை அந்தப் பத்திரிக்கைக்காரர்களே ஒப்புக்கொள்கிறார்கள். ''சுமார் 3,4 ஆண்டுகளுக்கு முன்னால் நாங்கள் இப்படிப் பேச முடிந்திருக்காது'' என்று வாக்குமூலம் தருகிறார்கள். 5000 ஆண்டுக் கலாச்சாரம் 5 ஆண்டுகளில் விழுந்துவிடுமா என்று மீசையை முறுக்கிப் பயனில்லை. பெண் அடிமைத்தனம், விபச்சாரம், மற்றும் அனைத்துவகைச் சீரழிவுகளுக்கும் எதிராக மூர்க்கமாகப் போராடி வெற்றியும் கண்ட சீனத்தையே குப்புறத் திருப்பிப் போட்ட ஏகாதிபத்தியவாதிகளுக்கு இந்தியாவைச் சீரழிக்க ஆண்டுகள் தேவையில்லை; நொடிகள் போதும்.

> பெண்கள் சந்திக்கும் பல்வேறு பிரச்சினைகளை ஓரங்கட்டிவிட்டு, பாலியல் பிரச்சினையை மட்டும் எடுத்துக் கொண்டு சில மேட்டுக்குடி சீமாட்டிகளைப் பேட்டி கண்டு அவர்களது கருத்தையே பெண்ணினத்தின் கருத்தாக சித்தரித்திருக்கிறது இந்தியா டுடே. இதே வேலையைத்தான் தெருவோரத்தில் விற்கும் ஆபாசப் பத்திரிக்கைகளின் ஆசிரியர்(!)களும் செய்கின்றனர். இவர்கள் அளவுக்கு கல்வியும், வசதி வாய்ப்புகளும் இல்லாததால் இத்தனை நாளுக்காக அவர்களால் செய்ய முடிவதில்லை என்பதுதான் வேறுபாடு.

நாகரீகத்திற்குப் புறம்பானதும், ஒழுக்கக் கேடானதுமான வாழ்க்கைமுறைக்கும் நாகரீகமான வாழ்க்கைமுறைக்கும் இடையிலான போராட்டம் சமுதாயத்தின் எல்லா அரங்குகளிலும் நடக்கிறது. ஒவ்வொரு மனிதனின் மனதிற்குள்ளும் நடக்கிறது. சமூகம் ஏற்றுக் கொள்ளாத, இழிவாகக் கருதுகின்ற வாழ்க்கைமுறைகள் மீது நாட்டம் தோன்றும் போது அதிலிருந்து விடுபடுவதற்காக மனதளவில் ஒவ்வொரு மனிதனும் போராடுகிறான். பிறன்மனை விழையும் ஒருவன் தன்னை சமூகம் பழிக்கும் என்பதால், அது தவறு என்பதால், அந்த இழிந்த ஆசையிலிருந்து விடுபடப் போராடுகிறான்; தன்னை மாற்றிக்கொள்ள இயலாதவன் அத்தகைய வாழ்க்கையை சமூகத்திற்குத் தெரியாமல் ரகசியமாக வைத்துக் கொள்கிறான்.

அப்படிப்பட்டவர்களைத் தான் இவர்கள் தம் பக்கம் இழுக்கிறார்கள். ''ஏன் அஞ்சுகிறீர்கள்; வெளிப்படையாக வாருங்கள்; தளைகளை அறுத்தெறியுங்கள்; கட்டுப்பாடுகளை உடைத்தெறியுங்கள்; சுதந்திரமாக நீங்கள் விரும்பியபடி வாழுங்கள்!'' என்று தைரியம் சொல்கிறார்கள். இவர்கள் சொந்தக்குரலில் பேசவில்லை. இவர்களது முழக்கங்கள் எல்லாம் வெறும் எதிரொலிகள் தான். எதனுடைய எதிரொலி? யாருடைய குரலின் எதிரொலி?

ஐந்து ஆண்டுகளாக இந்திய நடுத்தர வர்க்கத்தையும், தொழிலாளி வர்க்கத்தையும் பிடித்து ஆட்டும் நுகர்பொருள் மோகமும், ஐந்து நட்சத்திர கலாச்சாரமும் இப்போது கிராமப்புறம் வரை ஊடுருவி வருகிறது. டெலிவிஷனும், வீடியோவும் மட்டுமல்ல; 'இந்தியா டுடே'யும் கூடத்தான்.

''பெண்கள் இன்று ஒட்டுமாமரம் போல இருக்கிறார்கள். 5000 வருடத்து இந்தியக் கலாச்சாரம் ஒருபுறம். மேற்கத்திய வாழ்க்கைமுறை மறுபுறம்'' என்கிறார் சஞ்ஜீவனி என்கிற அமைப்பின் முன்னாள் தலைவி கிரண் சர்மா. ஆம், ஒட்டு மாமரம் தான்! காதல் மணத்தையும் கலப்புமணத்தையும் பழிக்கும் சமூகம் 'ஓடிப் போயிடலாமா?'' என்று கிசுகிசுக்கும் கொட்டகை வாசலில் தவம் கிடக்கிறது. 'பெரியவா'ளின் திருமுகத்துக்குக் கீழே அருள்வாக்கை அச்சடித்துவிட்டு 'அவாளுடைய' முதுகுப்பக்கம் அடுத்தவன் பெண்டாட்டியைக் கவர்வது எப்படி? என்று கதை போடுகிறது ஆனந்த விகடன். இது ஒட்டுமாமரமில்லாமல் வேறென்ன? நிலப்பிரபுத்துவப் பழமையும், மேற்கத்தியச் சீரழிவும் சேர்ந்த ஒட்டு இது.

இங்கே பெண்ணடிமைத்தனம் போன்ற பழமைகள் கருத்தளவிலேனும் எதிர்ப்புக்கு ஆளாகி தனிமைப்பட்டிருக்கின்றன; ஆகையால் அடிமைத்தனத்தை எதிர்ப்பதாக வரிந்து கட்டும் கூட்டமோ தறிகெட்டுப் போவதையே சுதந்திரம் என்கிறது. இது இன்னும் அபாயகரமானது; நயவஞ்சகமானது.

நாம் 'ஒழுக்கம் ஒழுக்கத்திற்காகவே' என்ற அடிப்படையில் இதை அணுகவில்லை. பெண்ணினத்தின் மீதான உடல்ரீதியான, உளரீதியான சுரண்டல் அடக்குமுறை அனைத்தையும் எதிர்க்கிறோம். அத்தகைய பாதிப்புக்கு உள்ளாகின்ற பெண் மணவிலக்கு பெறுவதற்கும், மறுமணம் புரிந்து கொள்வதற்குமான உரிமை வேண்டும்; அதை ஏற்கின்ற பக்குவத்தை சமூகத்திற்கு ஏற்படுத்தியாக வேண்டும். பெண்களின் பொருளாதார சுதந்திரம் இதற்கு மிகவும் அடிப்படையானது.

அவ்வாறு பொருளாதார சுதந்திரமடைந்த பெண்களின் மணவாழ்க்கைப் பிரச்சினைகளுக்குத்தான் கோணல் வழிகாட்டுகிறது இந்தியா டுடே. அவர்கள் சந்திக்கும் பல்வேறு பிரச்சினைகளை ஓரங்கட்டிவிட்டு, பாலியல் பிரச்சினையை மட்டும் எடுத்துக் கொண்டு சில மேட்டுக்குடி சீமாட்டிகளைப் பேட்டி கண்டு அவர்களது கருத்தையே பெண்ணினத்தின் கருத்தாக சித்தரித்திருக்கிறது. இதே வேலையைத்தான் தெருவோரத்தில் விற்கும் ஆபாசப் பத்திரிக்கைகளின் ஆசிரியர்(!)களும் செய்கின்றனர். இவர்கள் அளவுக்கு கல்வியும், வசதிவாய்ப்புகளும் இல்லாததால் இத்தனை நாளுக்காக அவர்களால் செய்ய முடிவதில்லை என்பதுதான் வேறுபாடு.

பெண்களின் நிர்வாணப்படத்தைப் போட்டுப் பிழைப்பு நடத்தும் அமெரிக்க 'பிளேபாய்' இதழ், இதற்கு எதிர்ப்புக் கிளம்பியவுடன் 'பிளே கர்ல் (Play Girl) என்ற பெயரில் இன்னொரு பத்திரிக்கை தொடங்கி அதில் ஆண்களின் நிர்வாணப்படங்களை அச்சிடத் தொடங்கியதாம். மரணத்திற்கு தேதி குறிக்கப்பட்ட எயிட்ஸ் நோயாளிகளும், போதை மருந்தின் அடிமைகளான இளைய சமுதாயமும், ஆயி, அப்பன் பெயர் தெரியாத குழந்தைகளும் நிறைந்ததுதான் அமெரிக்கா — என்கிற நிலைமையை மாலன், பிரிதீஷ் நந்தி, அனுராதா ரமணன் உள்ளிட்டு, உலகமே அறியும். அவர்கள் அறிந்தேதான் பேசுகிறார்கள்.

சகலதுறைகளிலும் ஒழுக்கக்கேடு கோலோச்சும்போது 'பாலியல் ஒழுக்கம்' மட்டும் தாமரை இலை நீர் போல தனித்து நின்றுவிட முடியாது. வாழ்க்கையின் ஒரு துறையில் ஒழுக்கக் கேட்டால் சீரழிந்தவர் மற்றத் துறைகளில் தன் ஒழுக்கத்தைப் பேணிப் பாதுகாத்துக் கொள்ள இயலாது. நமது சமூகத்தைப் பாதுகாக்க ஒழுக்கக் கேட்டை எதிர்த்த போராட்டம் எல்லா அரங்குகளிலும் நடத்தப்படவேண்டும். இந்த கலாச்சாரத்துறை அம்பாணிகளுக்கு எதிராகவும்தான்!

**பாலன்** ●



படிப்பகம்

www.padippakam.com

**'உணர்வுகள்' எனும் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஏட்டிலிருந்து.**

# புரட்சி வரும் இல்லையா அம்மா?



ஏய்... அம்மா! புரட்சியென்றால் என்ன?
அது போராட்டமடா கண்ணா!

வீரர்கள் சண்டை போடுவார்களே... அதுவா?
ஆமா குழந்தை!
போரிடுவாங்க கொல்லுவாங்க, சாவாங்க

நாம் அன்னியனை எதிர்த்துப்
போர் செய்கிறோமா?
ஆமா கண்ணு! அப்படித்தான் நினைக்கிறேன்.

நாம் ஏன் அவங்களோட போரிடனும் அம்மா?
ஏன் என்றால் அவங்கள்
எங்களை ஏமாற்றினாங்கள்

அப்போ நாம் இப்போது அடிமைகளா அம்மா?
ஆமாண்டா அது அப்படித்தான்.

அப்படியென்றால்
நான் அடிமையாகமாட்டேன். அம்மா.
எனக்குத் தெரியும் மகனே — நாங்கள்
ரொம்ப நாளைக்கு இப்படி இருக்கமாட்டோம்
கண்ணே தூங்கு!

புரட்சி வரும் இல்லையா அம்மா?
ஆமாம் மகனே புரட்சி வரும்
வாயை மூடித்தூங்கடா.

ஏய் அம்மா! எப்போ புரட்சி வரும்?
சீக்கிரம் மகனே... சீக்கிரம் மகனே.

ஆனால் அம்மா!
நம்மிடம் இராணுவம் இல்லையே?
சொன்னால் கேளடா தூங்கு
நாம் இராணுவம் அமைப்போம்
கவலைப்படாதே.

ரொம்பநாளாகுமா இராணுவம் அமைக்க?
இல்லையடா மகனே அப்படி நினைக்கல்லே

நம்ம படையிலே யாரு இருப்பினம்?
ஓ... நம்ம அப்பா உன்னோட மாமன்மார்
நம்ம ஜனங்கள் எல்லோரும்
வாயை மூடித் தூங்கடா கண்ணு

நானும் கூட... நானும் கூட
பெரியவனானதும் சேரலாமா?
நீ அதிலே சேரமுடியாது
வாயை மூடித் தூங்கடா
வீரன் ரொம்பப் பலசாலியாக இருக்கனும்
ராத்திரி முழுவதும் கண்முழிச்சிருந்தா
எப்படித்தான் நீ பலசாலியாவே
சொல்வதைக் கேளடா
உன் துப்பாக்கியை எடுத்துக்கோ
அதோட கொடியையும் எடுத்துக்கோ
தூங்கி அதையே கனவில பாரு
சரிதானே கண்ணே

ச...ரி...ம்மா.

ரஷ்யக் கவிதையிலிருந்து...

# உதிர நதி

அச்சிட்ட எழுத்துக்களின்
அறிவிப்புப் பவனி
ஸ்தம்பிக்கிறது.

செய்தித் தாளில்
பிரதிபலிக்கும்
வாசக முகத்துக்குள்
அலறுகின்றன
ஓராயிரம்
கபாலங்கள்.

அலறும் ஒவ்வொரு
அச்செழுத்திலும்
குரல் பெறுகிறது ஓர்
மூதாதை இனம்.

மனித வர்க்கத்தின்
மனச்சாட்சியினுள்
பாய்கிறது அதன்
உதிர நதித் துடிப்பு.

நேற்றிந்த முற்றத்தில்
மழலை விளைத்து இன்று
குற்றுயிரில் துடிக்கும்
குழந்தையின் நாளத்தில்

நேற்றைக்கும் மிகமுந்தி
எகிப்தின் பிரமிட்கள்
எழுமுன்னாடி ஒரு
யுகத்தின் வாசலில்
இமயம் உருகி
ஏழு கிளை விரித்து
பிரவஹித்த சப்த
சிந்து துடிக்கிறது.

துடித்துக் கொடுங்கோலின்
துப்பாக்கி ரவை மழையில்
உடைந்து சொரிகிறது.

அதன் ரத்தச் சகதியில்
புதைகிறது
காந்தி தேசத்தின்
அசோகச் சக்கரம்.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி.வல்லபேசன், 45, செங்குன்றம் சாலை, வில்லிவாக்கம், சென்னை - 600 049. அச்சிடுபவர். பிரேம் பிரஸ், 107-ஏ, பெரியார் பாதை (மேற்கு), சென்னை - 600 094. புதிய கலாச்சாரத்தில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் சமுதாயத்தில் காணப்படும் உண்மைகளே!

படிப்பகம்

www.padippakam.com

PUTHYIYA KALACHARAM    R.N. 42647/85    Regd. No. TN/MS(S)/376



# வறுமையை உணர்த்த வார்த்தை உள்ளதா?

— மருதையன்

வறுமை
வறுமை என்பது இல்லாமையா
சிறுகுடலைப் பெருங்குடல் தின்னும் பசியா
இரந்துண்ணும் இழிவா
கையது கொண்டு மெய்யது பொத்தி
காலது கொண்டு மேலது தழுவும் அவலமா
முகத்திரண்டு புண் சுமக்கும் வேதனையா
காதல் மனையாளைக்
காசுக்கு விற்கும் கயமையா?
இதயத்தைக் குடல் வெல்லும் குரூரமா

இல்லை
வறுமை ஒரு சொல் வெறும் வார்த்தை
உயிர் மெய்யாலான உயிரற்ற வார்த்தை

எனில் வறுமைக்கோடு?
கூவத்தின் கழிவில் - செழித்து
நீளும் குடிசைக்காளான்களா?
மரகதப் பச்சை வயல்களினூடே மின்னும்
கறுப்பு வைரங்களின் அணிவகுப்பா?
ஆலைப்புகைக்கூண்டின்
ஆதிக்கப் புகைமண்டலத்தின் கீழே
மடைதிறந்த வெள்ளமாய் - துள்ளாமல்
துவண்டு நெளியும் ஓடையா?
கர்வம் கொண்ட அலைகளின் தலையில்
துள்ளிக் குதித்து மார்தட்டும் மரங்களா

இல்லை

மங்கலான புள்ளி விவரச் சதுரங்களைப்
பிளந்து கொண்டு உணர்ச்சிகளற்று
பளீரென்று குறுக்கே பாய்கிறதே...
அதுதான் வறுமைக்கோடு!

அனலின் வெம்மையையும்
புனலின் தண்மையையும்
வார்த்தையிலே ஒளிக்கும்
வித்தகர்களே, கவிஞர்களே!

தவிக்கும் வயிற்றில்...
தயங்கும் உதடுகளில்...
ஏங்கும் விழிகளில்...
துடிக்கும் வாழ்க்கையை உணர்த்த
வார்த்தை உள்ளதா உங்களிடம்?